# வெளிநாட்டு வேலை வாய்ப்பில் நேர்மைத்திறன்

## வேலைக்கு ஆட்சேர்ப்பதில் உள்ள ஊழல் அபாயங்கள் பற்றிய பகுப்பாய்வு



ட்ரான்ஸ்பேரன்சி
இன்டர்நஷனல்
ஶ்ரீ லங்கா

நேர்மைத்திறன்மிக்க தேசத்தைக் கட்டியெழுப்புதல்

# வெளிநாட்டு வேலை வாய்ப்பில் நேர்மைத்திறன்

## வேலைக்கு ஆட்சேர்ப்பதில் உள்ள ஊழல் அபாயங்கள் பற்றிய பகுப்பாய்வு

ட்ரான்ஸ்பேரன்ஸி
இன்டர்நெஷனல்
ஸ்ரீ லங்கா
நேர்மைத்திறன்மிக்க தேசத்தைக்
கட்டியெழுப்புதல்

இலங்கையில் 2010 இல் முதன் முதலில் பிரசுரிக்கப்பட்டது

இலங்கை ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல்
28/1 புள்ளேர்ஸ் ஒழுங்கை
கொழும்பு – 07
இலங்கை.

தொலைபேசி: (94)11 2501474, 2592287
தொலை நகல்: (94)11 2506419
மின்னஞ்சல்: tisl@tisrilanka.org
இணையத்தளம்: www.tisrilanka.org

ISBN: 978-955-1281-30-4

குற்றச்சாட்டுகள் உள்ளிட்ட இந்த அறிக்கையில் உள்ள தகவலின் சரியான தன்மையை அறிந்து கொள்ள சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. சகல தகவலும் 2009 நவம்பர் மாதமளவில் சரியானவை என்று நம்பப்பட்டது. எனினும் உள்ளடக்கத்தின் சரியான தன்மை, தகுதி என்பன பற்றி ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனலினால் உத்தரவாதம் வழங்க முடியாது. ஏனைய நோக்கங்களுக்கு அல்லது வேறு விடயங்களுக்கு பயன்படுத்துவதன் விளைவுகளுக்கு இலங்கை ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் பொறுப்பை ஏற்றுக் கொள்ளமாட்டாது. ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனலுக்கு வெளியே உள்ள நபர்களால், இந்த வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஆய்வுக்கான பங்களிப்புகள், ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் அல்லது இலங்கை ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனலின் கருத்தைப் பிரதிபலிக்க வேண்டுமென்பதில்லை.

# Table of Contents


அட்டவணைகளின் பட்டியல் i

வரைபடங்களின் பட்டியல் ii

சொற் குறியீடுகள் iii

அணிந்துரை 1

1. திட்ட நிறைவேற்று அறிக்கைச் சுருக்கம் 3

2. முகவுரை 8

2.1 ஒழுங்குறுத்தலும், நிறுவனக் கட்டுக்கோப்பும் 9

2.2 ஊழல், நேர்மைத் திறன் என்பனவற்றுக்கான வரைவிலக்கணங்கள். 13

3. ஆய்வு முறை 18

4. வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான வழிகள் 21

4.1 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் 22

4.2 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு (தனியார்) முகவர் நிலையம் 30

4.3 உத்தரவுப் பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு ஆட்திரட்டும் முகவர் நிலையங்கள் 31

4.4 வேலை வாய்ப்புப் பெறச் செல்லும் நாடுகளில் தொழிலுக்காக ஆட்சேர்ப்போர். 36

4.5 உத்தரவுப் பத்திரம் உள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் சங்கம். 37

4.6 உத்தியோக பூர்வமற்ற வலையமைப்புகள் 40

4.7 சட்ட விரோத வழிகள் 41

5. ஊழல் வகைகள் 44

5.1 போலியான ஆவணமயப்படுத்தல் 44

5.2 சட்டவிரோதக் கொடுப்பனவுகள் 45

5.3 விதிமுறைகளும், நடைமுறைகளும் மீறப்படுதல். 48

6. அபாயகரமான அம்சமாக, புலம்பெயர் தொழிலாளியின் மனப்போக்குகள் 57

7. முடிவுரையும் விதந்துரைகளும் 59

ஊசாத்துணை நூல்கள் 64

இணைப்புக்கள் 70

## அட்டவணைகளின் பட்டியல்


அட்டவணை 1: SLBFE க்கு 2004 – 2008 இல் கிடைக்கப் பெற்ற வேலைக்கு ஆட்சேர்ப்பது தொடர்பான முறைப்பாடுகளின் எண்ணிக்கை. 25

அட்டவணை 2: விடை பகர்ந்தவர்களினால் பிரயோகிக்கப்பட்ட வழிகள் 34


## வரைபடங்களின் பட்டியல்


வரைபடம் 1: வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக புறப்பட்டோர் 17

வரைபடம் 2:2008 இல் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள். 27

வரைபடம் 3:தேர்ச்சியுள்ள மட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்ற சதவீத முறைப்பாடுகள் - 2008 28

வரைபடம் 4:துஷ்பிரயோக மட்டங்கள் பற்றிய தொழிலாளர்களின் உணர்வுகள் 35

வரைபடம் 5: வேலை பெறுவதில் தோல்வி கண்டவர்களிடையே இருந்த தகவல் பெறும் வழிகள் 44

வரைபடம் 6: ஆய்வுக்குட்பட்டவர்களிடமிருந்து அறவிடப்பட்ட கட்டணம். 65

வரைபடம் 7:ஆய்வுக்குட்பட்டவர்களின் அபிப்பிராயப்படி மருத்துவப் பரிசோதனைச் செலவு. 73

## சொற் குறியீடுகள்

| | | |
|---|---|---|
| AHRC | - | ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு |
| ALFEA | - | உத்தரவுப் பத்திரமுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் சங்கம் |
| CENWOR | - | மகளிர் ஆய்வு நிலையம் |
| CIABOC | - | இலஞ்சம் அல்லது ஊழல் குற்றசாட்டுக்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு |
| COPE | - | அரசாங்கத் தொழில்கள் மீதான குழு |
| CPI | - | ஊழல் உணர்வுச் சுட்டெண் |
| FDI | - | வெளிநாட்டு நேரடி மூலதனம் |
| GAMCA | - | வளை குடாநாட்டு ஒத்துழைப்பு நாடுகளினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ நிலையங்கள் சங்கம் |
| G.C.C | - | வளை குடாநாட்டு ஒத்துழைப்பு நாடுகள் |
| G.D.P | - | மொத்த உள்ளூர் உற்பத்தி |
| ICTA | - | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஏஜென்ஸி |
| ILO | - | சர்வதேச தொழில் ஸ்தாபனம் |
| IOM | - | சர்வதேச குடியகல்வு அமைப்பு |
| MBAS | - | மருத்துவக் கலைமானியும், சத்திர சிகிச்சைக் கலைமானியும் |
| MOU | - | புரிந்துணர்வு ஒப்பந்தம் |
| MP | - | பாராளுமன்ற உறுப்பினர் |
| NRFC | - | வதிவற்றோர் வெளிநாட்டு நாணயம் |
| ODA | - | உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி |
| REC | - | ஐக்கிய ராஜ்யத்தின் வேலைக்கு ஆட்சேர்த்தல் வேலைவாய்ப்புச் சம்மேளனம் |
| SAARC | - | பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கம் |
| SLBFE | - | இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் |
| SLFEA | - | இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஏஜென்ஸி (தனியார்) லிமிட்டட் |
| SLMC | - | இலங்கை மருத்துவப் பேரவை |
| TI | - | ட்ரான்ஸ்பெரன்ஷி இன்டர்நெஷனல் |
| TNI | - | இலங்கை ட்ரான்ஸ்பெரன்ஷி இன்டர்நெஷனல் |
| UN | - | ஐக்கிய நாடுகள் |
| US | - | அமெரிக்க டொலர் |

“தொழிலாளர் புலம் பெயர்வதற்கான சிறந்த பரிபாலனம், வெளிப்படைத் தன்மையான கொள்கைகளும், நடைமுறைகளும், சீராக்க செயற்படும் நிறுவனங்கள், செல்லவிருக்கும் தகுதி வாய்ந்த அல்லது சரியான புலம்பெயர் தொழிலாளர்களின் அபிலாஷையை பூர்த்தி செய்யும் நடைமுறைகளும் விதிகளும், சர்வதேச தராதரங்களுக்கும், சிறந்த செயற்பாடுகளுக்குமான அமைவு, கொள்கை இணக்கப்பாடு சமூக கலந்துரையாடல் ஆலோசக பங்குபற்றல் நடைமுறைகள் என்பவற்றை உள்ளடக்கிறது”

**இலங்கை தேசிய வெளிநாட்டு வேலைவாய்ப்க் கொள்கை, 2008**

“இலங்கையருக்கான தேசிய தொழில் புலம்பெயர்வுக் கொள்கை வேலை வாய்ப்புக்காக வெளிநாடு செல்லும் இலங்கையர் இன்னலுக்கு உள்ளாகும் நிலைமைகளில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, அவசர கொள்கை ரீதியிலான கவனம் அவசியமாகும். இந்தத் தொழிலாளர்கள், அரசாங்கம் முன்னேற்றகரமான பாதுகாப்பான நடவடிக்கையை எடுக்கின்ற போதிலும், அனேகமாக துஷ்பிரயோகத்திற்கும் சில சமயங்கள் மரணத்திற்கும் உட்படுகின்றனர்”

**சர்வதேச புலம்பெயர் நோக்கு இலங்கை -IOM 2008.**

# அணிந்துரை

இலங்கையர்களில் பலரும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெறுவதில் அக்கறை கொண்டுள்ளனர். எமது தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் வெளிநாடுகளில் பணிபுரிகின்றனர். எமது குடும்பங்கள் வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தில் தங்கியுள்ளன. வெளிநாட்டு வேலைவாய்ப்பில் நேர்மைத் திறனை உறுதிப்படுத்தல், வெளிநாடுகளில் வேலை பார்ப்பவர்கள் துஷ்பிரயோகத்திற்கும் சுரண்டலுக்கும் உட்படாமல் பாதுகாத்தல் என்பன இலங்கை அரசாங்கதினதும், பல சிவில் சமூகக் குழுக்களினதும் முன்னுரிமைகளாகவும் உள்ளன. வெளிநாடுகளில் வேலை பார்ப்பதற்கு பாதுகாப்பான சூழலை ஏற்படுத்த அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதில் முக்கியமானது 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நிறைவேற்றப்பட்ட இலங்கைக்கான தேசிய வெளிநாட்டுத் தொழில் கொள்கையாகும். இந்தக் கொள்கை நடைமுறைக்கிடப்படுவது அவசியமாகும்.

வேலைக்கு அமர்த்துவதில் ஊழல் விவகாரம் இதுவரை கிரமாகக் கவனிக்கப்படாத ஒரு அம்சமாகும். வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெறும் தொழிலாளார்கள் முக்கியமாக இந்த ஊழலால் பாதிப்படையும் சாத்தியம் உள்ளது. சகல துறைகளிலும், ஊழல், ஏழைகளைக் கூடுதலாகப் பாதிக்கின்றது. வெளிநாட்டில் வேலை பார்க்கச் செல்லும் தொழிலாளர்கள், அநேகமாக வசதி குறைந்தவர்களாக, அல்லது போதிய கல்வி அறிவு அற்றவர்களாகவுள்ளனர். இதனால் 2008 ஒக்டோபர் மாதத்தில், இலங்கை ட்ரான்ஸ்பேரன்ஷி இன்டர்நெஷனல் (TISL) ஒரு ஆய்வை நிகழ்த்துமாறு பெண்கள் ஆய்வு நிலையத்தை (CENWOR) பணித்தது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெறுவதற்கான பல்வேறு வழிகளில் ஏற்படும் ஊழல் அபாயங்கள், ஊழல் நடைமுறைகளின் வகைகளை அடையாளம் காணுதல் - தற்போதுள்ள சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கு விதந்துரைகளை வகுத்தல் என்பனவற்றை ஆராய்ந்து அறிவதற்கான ஆய்வு இதுவாகும்.

இந்த ஆய்வு CENWOR ஐச் சேர்ந்த திருமதி. லீலாங்கனி வனசுந்தர, திருமதி.மால்சிறி டயஸ் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டது. CENWOR க்கு தரவுகளைத் திரட்டல், ஆலோசணை என்று சிக்கலான வழிமுறை முழுவதிலும் உயர்ந்த அளவில் அர்ப்பணிப்புக் காண்பித்த இந்த இரு ஆய்வாளர்களுக்கும், நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். சகல பங்குதாரர்களின் பிரதிநிதிகளும் அடங்கிய செயலூக்கக் குழுவுக்கும் நன்றி கூற வேண்டும். அவர்களது ஆலோசனை பெரிதும் பாராட்டத்தக்கது.

ஆய்வை வகுத்தமைக்காக பெற்றினா மேயருக்கும், விசேட நன்றிகள் சிறந்த ஒருங்கிணைப்புக்காக கரீஷா விரித்தமுல்லவுக்கும், ஆசிரிய உதவிக்கு ஷர்மிலி தற்பரனுக்கும், அறிக்கையின் வடிவமைப்புக்காக திரு.ஹரித்தா தஹநாயக்காவுக்கும், நட்புறவு ரீதியிலான ஆலோசணைக்கு, ரமணி ஜயசுந்தரவுக்கு நன்றிகள். இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தை சேர்ந்த திரு.கிங்ஸ்லி ரணவாக்கவுக்கு அவரது அன்பான ஒத்துழைப்புக்கும் நன்றி உரித்தாகுக. அறிக்கையை தொகுத்தமைக்காகக் குமுதினி ஹெட்டியாராச்சிக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அறிக்கையானது வெளிநாடுகளில் வேலைபார்க்கச் செல்லும் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் ஊழல் அபாயங்களை குறைப்பதற்கு உதவும் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

ஜே.சி.வெலியமுன
நிறைவேற்றுப் பணிப்பாளர்.

# 1. திட்ட நிறைவேற்று அறிக்கைச் சுருக்கம்

இலங்கை ட்ரான்ஸ்பெரன்ஷி இன்டர்நெஷனலின் சார்பில் 2008 நவம்பர் மாதம் முதல் 2009 மே மாதம் வரை பெண்கள் ஆய்வு நிறுவனத்தினால் (CENWOR) நடத்தப்பட்டு 1985 இல் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு 21ம் இலக்க அதிகாரச் சட்டம் திருத்தப்பட்ட பின்னர் 2009 ஒக்டோபரில் காலத்திற்கு உகந்ததாக சரிபார்க்கப்பட்ட ஆய்வுப் பெறுபேறுகளை வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான ஆட்சேர்த்தலில் நேர்மைத் திறன் பற்றிய இந்த அறிக்கை வழங்குகிறது. வெளிநாடுகளில் வேலை பார்க்கச் செல்பவர்களுக்கு, பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகளை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு, இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கிய அம்சமாகும். வெளிநாடுகளில் பணிபுரிபவர்கள் 2008 இல் அனுப்பிய நிதித்தொகை 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள், இது இரண்டாவது அதி முக்கிய வெளிநாட்டு வருமானமாகும். இலங்கையில் நான்கில் ஒரு பங்கு தொழிலாளர்கள் (மதிப்பீட்டுத் தொகை 80 லட்சம்) வெளிநாடுகளில் பணிபுரிகின்றனர்.

இந்த தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான, கௌரவமான தொழிற் சூழலைப் பேணி வளர்ப்பது, இலங்கை அரசாங்கத்தினதும், மக்களினதும் முன்னுரிமையாகும். 2009 ஏப்ரல் மாதத்தில் தேசிய வெளிநாட்டுத் தொழில் கொள்கை நிறைவேற்றப்பட்டதும், வேலைக்கு ஆட்சேர்ப்பதில் கூடுதலான நேர்மைத் திறனும், பாதுகாப்பும் ஏற்படுவதற்கு ஒரு தீர்க்கமான காலடி எடுத்து வைக்கப்பட்டுள்ளது. சர்வதேச தொழில் ஸ்தாபனத்தினால் (ILO) பிரேரிக்கப்பட்ட 2006ம் ஆண்டின் கௌரவ வேலைக்கான தேசியக் கொள்கையையும், இலங்கை அங்கீகரித்துள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் வேலைக்கு ஆட்சேர்க்கும் பிரிவை மேற்பார்வை செய்து வரையறுக்கப்பட்ட தராதரங்கள், நடைமுறைகள் என்பவற்றைப் பேணுவதை உறுதிப்படுத்தும் வலுவான நிறுவனரீதியான கட்டுக்கோப்பு நிலவுகிறது. SLBFE அண்மையில், வெளிநாட்டில் பணிபுரிபவர்களின் நிலைமையை மேம்படுத்த சீர்திருத்தங்களை வெற்றிகரமாக அமுல் செய்துள்ளது.

இந்த முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும், இந்தப் பிரிவில் வெளிநாட்டில் பணிபுரிபவர்கள் தொடர்பாக மோசடிகள், ஊழல் சுரண்டல்கள் இருப்பதாக பெருமளவில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. வெளிநாடு செல்லும் தொழிலாளார்களில் பெரும்பான்மையானோர், குறைந்த தொழில் திறன் உள்ளவர்களாக, பிரதானமாகப் பெண்கள் வசதியற்ற கிராமியப் பகுதிளைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். இவர்கள் சுரண்டலுக்கு உட்படுத்தப்படக் கூடியவர்களாகவும், பேரம்பேசும் வலுவில்லாதவர்களாகவும், அனேமாக அவர்களது உரிமைகள் பற்றி தெரியாதவர்களாகவும், உள்ளனர். மோசடி முகவர்களால் ஏமாற்றப்பட்டுச் சுரண்டப்பட்ட வெளிநாடுகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் நிலைமை குறித்து ஊடக அறிக்கைகள் கிரமமாக பிரசித்தம் கொடுத்து வருகின்றன.

இதுனால் இந்த ஆய்வு, வெளிநாடுகளில் வேலை பார்பவர்களினால் எதிர்நோக்கப்படும் அபாயங்களை, குறைப்பதற்கும் அவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதற்கு, பாதுகாப்பான சூழலை வழங்குவதற்கும் தற்சமயம் மேற்கொள்ளப்படும் முயற்சிக்கு ஆதரவு வழங்குவதற்குமான நோக்கத்தையும் கொண்டுள்ளது. இது வெளிநாடுகளில் வேலை தேடுகையில் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் அபாயங்கள் மாத்திரமல்லாது அவர்களைப் பாதுகாக்கவென நிறுவப்பட்டுள்ள நிறுவனங்கள் ஏஜென்ஸிகள் (முகவர் நிலையங்கள்) என்பவற்றின் பரிபாலன அமைப்புக்களால், எழும் அபாயங்களையும் எடுத்துக் காட்ட எண்ணியுள்ளது.

ட்ரான்ஸ்பெரன்ஷி இன்டர்நெஷனல் (TI), "ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை தனிப்பட்ட இலாபத்திற்காக துஷ்பிரயோகம் செய்தல்" என்று ஊழலுக்கு வரைவிலக்கணம் தெரிவிக்கின்றது. எனினும், இந்த ஆய்வுக்கென நெறிமுறையற்ற நடத்தையும், ஊழல் அபாயமும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் ஆட்களை வேலைக்குச் சேர்க்கும் தொழிலில் சிக்கலான பங்கேற்போர் கலவை காணப்படுகிறது. வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கு ஆட்களைச் சேர்ப்பதில் அரசுக்கே முழுப் பொறுப்பும் உள்ளது, வேலைக்கு ஆட்சேர்ப்பதில் ஈடுபடும் தனியார் துறை முகவர்கள் ஒழுங்குறுத்து அதிகாரசபையான இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திடமிருந்து பெறப்பட்ட உத்தரவுப் பத்திரத்துடன் அப்பணியை மேற்கொள்கின்றனர். உத்தரவு பெற்ற வேலை வாய்ப்பு முகவர்கள் மூலமாகவே ஆகக் கூடுதலானோர் வெளிநாட்டு வேலை வாய்ப்பை நாடுகின்றனர். ஆனால் உறவினர், நண்பர்கள் வேலை கொள்வோர் மூலம் நேரடி வேலை வாய்ப்பையும் கணிசமான அளவினர் பெறுகின்றனர். இது பதிவு செய்யப்பட்ட வளங்களைப் பார்க்கிலும் மிகத் துரிதமாக அதிகரித்து வருகிறது. இதே வேளையில் SLBFE யும் வேலைக்கு ஆட்களைச் சேர்க்கிறது. அதன் உப நிறுவனமான இலங்கைவெளிநாட்டு வேலைவாய்ப்பு ஏஜென்ஸி (SLFEA)யும் இப்பணியில் ஈடுபட்டுள்ளது. எனினும் உப முகவர்கள், உத்தரவுப் பத்திரமில்லாத முகவர்கள், ஏமாற்றுப் பேர்வழிகள் அடங்கலாக நாட்டின் பல பகுதிகளிலும் பெரும் எண்ணிக்கையிலானோர் சட்ட விரோதமாக ஆட்களைச் சேர்ப்பதில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் போலி ஆவணங்களை வழங்குபவர்களும், ஏனைய சட்டவிரோத சேவைகளும், வேலைக்கு ஆட்சேர்க்கும் வழிமுறையை மேலும் சிக்கலாக்குகின்றன.

இந்த வழிமுறைகள் அனைத்தையும் கவனத்தில் எடுத்து ஊழல் அபாயங்களை பகுப்புச் செய்யும் இந்த ஆய்வானது, இரண்டாவது பட்ச தகவல் ஆதாரங்களின் கணிப்பீடு, 222 நேர்காணல்களின் மதிப்பீடு, ஏமாற்று, மற்றும் தவறான முறைகளில் பாதிக்கப்பட்ட 30 தொழிலாளர்கள் பற்றிய ஆய்வு, பொதுமக்கள், தனியார் மற்றும் அரச சார்பற்ற துறைகளைச் சேர்ந்த 20 முக்கிய தகவல் வழங்குவோரிடம் மேற்கொள்ளப்பட்ட பங்கேற்பவர்களுடனான நேர்காணல்கள், ஆகியவற்றின் அடிப்படையிலானது.

கொழும்பு, புத்தளம், மாத்தளை மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 222 பேரும் நான்கு தரங்களில் அடங்குவர் முதற் தடவையாக வெளிநாட்டு வேலைவாய்ப்புத் தேடுபவர்கள், வெளிநாடுகளில் வேலை பார்த்து விட்டு நாடு திரும்பி மீண்டும் வெளிநாடுகளுக்குச் செல்லத் திட்டமிடுபவர்கள், வேலை பார்த்துவிட்டு 2008/2009 இல் மீண்டும் வெளிநாடு செல்லத் திட்டமிடாதவர்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெறுவதில் தோல்வியடைந்தவர்கள்.

**ஆய்வின் மூலமாக முக்கிய கண்டுபிடிப்புகள்:**

- தற்போதுள்ள சட்டவாக்கத்தில் உள்ள பிரதான குறைபாடு, வேலை தேடுபவருக்கும், உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர்களுக்குமிடையில் இணைப்பாளராக இலங்கையில் செயற்படும் உப முகவர்களுக்கான விதிமுறைகள் இல்லாதிருப்பதாகும். ஒரு உப முகவர், பல முகவர் நிலையங்களுக்காகப் பணிபுரிந்து வேலைக்குச் சேர்க்கப்படும் ஒவ்வொரு தொழிலாளருக்குமாக கமிஷன் பணத்தைச் சம்பாதிக்கக்கூடும்; ஆனால் இவர்கள் வேலைபெறும் தொழிலாளரிடமிருந்து மேலதிகத் தொகைப்பணத்தை அறவிடுவதாக ஒரு மதிப்பீடு தெரிவிக்கின்றது. உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர் நிலையங்கள் உப முகவர்களை கூலிக்கமர்த்துகின்றன. ஆனால் அவர்களது ஊழல் நடவடிக்கைகளுக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ளவதில்லை. இந்தக் குறைபாடு நிவர்த்தி செய்யப்படல் வேண்டும்.

- எஸ்எல்பிஎவ்இ (SLBFE) யின் சட்ட உரிமைக்கட்டளை 629 உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர் நிலையங்களுக்கு மேலதிகமாக ஒரு மதிப்பாக 400 பதிவு செய்யப்படாத வேலைவாய்ப்புக்கு ஆட்சேர்ப்பவர்களும் இலங்கையில் உள்ளனர். 25% பதிவு செய்யப்பட்ட முகவர் நிலையங்கள் செயற்படாததுள்ளமை, 2009 ஒக்டோபர் திருத்தத்திற்கு முற்பட்ட அதிகாரச் சட்டப் பிரகாரம் உத்தரவுப் பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலைய சங்கத்தின் அங்கத்தவர்கள் அல்லாதோருக்கு, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம், உத்தரவுப் பத்திரங்களைப் புதுப்பித்தமை என்பன வாயிலாக உத்தரவுப் பத்திரத்தை புதுப்பிக்கும் நடைமுறையில் தவறிழைக்கப்பட்டுள்ளதாகத் தோன்றுகிறது.

- வேலைக்கு ஆட்களைச் சேர்க்கும் முகவர் நிலையங்களின் அங்கத்தவர்கள் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பணிப்பாளர் சபையில் இருப்பது நலன்களில் முரண்பாட்டை ஏற்படுத்தி அதன் செயற்றிறனை தடை செய்கிறது.

- வெளிநாட்டில் வேலை பெற்றுச் செல்வோர் சட்டவிரோதமாக ஒரு கட்டணத்தைச் செலுத்த வேண்டியுள்ளது. இவ்வாறு செலுத்தப்பட்ட தொகை 1.3 மில்லியன் ரூபா வரையிலாகும் என்று ஒரு மதிப்பீடு புலப்படுத்துகிறது. இலங்கைத் தொழிலாளர்களுக்கு பெரும் கிராக்கி இருக்கின்ற நிலையில் இது நிகழ்ந்துள்ளது. நிறுவனங்களும்,சட்ட அமுலாக்கமும் பலவீனமாக உள்ள சூழலில், வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையில் அதி முக்கிய வளமான தொழிலாளர்கள், சுரண்டலுக்கும், ஊழலுக்கும் பலியாவது விசித்திரமானதாகும்.

- உத்தரவுப் பத்திரம் பெறாத முகவர் நிலையங்கள் பற்றிய சரியான தகவல் இல்லாமையும், SLBFE, ALFEA ஆகியவற்றிடமிருந்து தடை செய்யப்பட்டுள்ள முகவர் நிலையங்கள் பற்றிய தகவலைப் பெற முடியாதிருப்பதும், பெரும் ஊழல் அபாயங்களுக்கு இட்டுச் செல்கின்றது. வெளிநாட்டு வேலை தேடுவோர், முகவர்களின் வழிமுறைப் பதிவேடுகளைச் செவ்வை பார்க்க முடியாததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

- வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழிமுறையில் அரசு, உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர் நிலையங்கள், உத்தியோகப்பற்ற வலையமைப்புகள், சட்டவிரோத உத்தரவுப் பத்திரம் பெறாத முகவர் நிலையங்கள் ஆகியவற்றிற்கு இடையில் செயற்படும் சகலரும், வேலை தேடுபவர்களுக்கு ஊழல் அபாயங்களை ஏற்படுத்துகின்றனர். வேலைக்கு அரசு ஆட்களைச் சேர்ப்பதில், அரசியல் ஆதிக்கம், வெளிப்படை இல்லாத தன்மை என்பன ஊழல் பற்றி பொதுமக்கள் உணர்வதற்கு வழிவகுத்தன, வேலைக்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு முன்னர் விளம்பரம் செய்வது, முகவர்கள் மேற்கொள்ளும் வெளிநாட்டு வேலை கொள்வோருடன் பேசப்பட்ட தொழிலாளர்களுக்கான சம்பளத்தை தொழிலாளியிடமும், இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திடமும் மறைத்தல், ஆவணங்களின் போலித்தன்மை, அதிகாரமற்ற கட்டணங்களை அறவிடல், ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாமலே தொழிலாளியைப் பயணம் செய்ய அனுமதித்தல். தொழிலாளர் வெளிநாட்டில் நிராதரவாகக் கைவிடப்படல், இடத்தை மாற்றுதல், தடை செய்யப்பட்ட இடங்களுக்கு ஆட்சேர்த்தல், முதல் மூன்று மாதங்களிலும், வீட்டுப் பணியாளர்களுக்கான

சம்பளங்களை வழங்காது தடுத்து வைத்தல், வேலைக்கான கட்டணத்தைப் பெற்ற பின்னர், முகவர் நிலையம் மூடப்படுதல், தொழிலாளர்களை ஏமாற்றிய பின்னர் நிலையம் இருந்த இடத்தை மாற்றுதல் ஆகியவை, உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர்கள் மேற்கொள்ளும் பல்வேறு மோசடிகளில் அடங்குகின்றன. சில மோசடிகள், வேலைகொள்வோர், அல்லது வெளிநாட்டு முகவருடன் இணைந்து உள்ளூரில் வேலைக்கு ஆட்சேர்ப்பவர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. வீட்டுப் பணிப் பெண்கள் மீதான சில மருத்துவப் பரிசோதனைகள், ஒழுங்கற்ற முறையில் இடம் பெற்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

- இலங்கைவெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் அதிகாரச் சட்டம், அதற்கான திருத்தங்கள் என்பவற்றுக்கு அமைய SLBFE, உத்தரவுப்பத்திரம் பெற்ற முகவர்கள் மீது கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. பல ஆண்டுகாலமாக பணியகம் செயற்பட்டு நடைமுறைகளைச் சீராக்கியுள்ளது. அத்துடன் பாதுகாப்பாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெறப்படுவதை உறுதி செய்யும் நோக்குடன் பிரமாணங்களையும், நடைமுறைகளையும் சரியாக இடம்பெறச் செய்வதன் மூலம் தொழிலை ஒழுங்கு முறையானதாக்கி. திறனை மேம்படுத்தியுமுள்ளது. கடந்த சில ஆண்டுகளுக்குள் SLBFE மோசடி நடவடிக்கைகளை நீக்குவதற்கான தீவிர முயற்சியை மேற்கொண்டுள்ளது. எனினும், முகவர்களின் உத்தரவுப் பத்திரங்களை புதுப்பித்தல், ரத்துச் செய்தல், அதிகாரபூர்வமற்ற கட்டணங்கள் பெறப்படுவதைத் தவிர்த்தல், வேலைக்கு ஆட்சேர்ப்பதற்கான நடைமுறைகளை அமுல்படுத்தல், உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர்களை அவர்களது இடைத்தரகர்களின் செயற்பாடுகளுக்கு பொறுப்பாக்குதல் என்பவற்றில் சில சீராக்கல் குறைபாடுகள், நிலவுவது, வேலைக்கு ஆட்களைச் சேர்ப்பதிலும், அதன் பிரமாணத்திலும், பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

- அத்தகைய அதிகாரச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ALFEA ஒரு பயனுள்ள பங்கை வகித்துள்ளது. ஆனால் மோசடிகளும் ஏமாற்று நடவடிக்கைகளும், வெளிநாட்டு வேலைக்குச் செல்லும் தொழிலாளர்களுக்கும் ஏற்படும் ஊழல் அபாயங்களைக் குறைக்கும் விதத்தில் தனது அங்கத்தவர்களை நடந்து கொள்ளச் செய்வதற்கு அதனால் முடியவில்லை என்பதையே புலப்படுத்துகின்றன. சர்வதேச கருத்து வேறுபாடுகள், ஜனநாயக ரீதியற்ற முகாமைத்துவம் SLBFE யுடனான நெருக்கடி என்பன அது வகிக்க வேண்டிய பங்கில் எதிரான பாதிப்புகளை ஏற்படுத்தி உள்ளன.

- வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கு ஆட்களைச் சேர்க்கும் முகவர் நிலையங்கள் தமது உத்தரவுப் பத்திரங்களை பதிவு செய்தல், புதுப்பித்தல் என்பனவற்றுக்கான தராதரம், முகாமைத்துவ வர்த்தகத் தகுதி என்பனவற்றை உள்ளடக்கவில்லை. பல முகவர் நிலையங்களுக்கு, நிதி வளங்களை கையாளும் திறமையும், நெறிமுறையில் நடக்கும் நடத்தைத் திறனும் இல்லை, இதனால் வெளிநாட்டு வேலைக்குச் செல்லும் தொழிலாளர்களுக்கு அபாயம் ஏற்படாலம்.

- உத்தியோகப் பற்றற்ற வலையமைப்புகள் மூலம் வேலை வாய்ப்புப் பெறுவது அபாயமற்றது என்று கருதப்படுகின்ற போதிலும் குடும்பத்தின் முக்கிய அங்கத்தவர்கள் தவிர்ந்த ஏனையோரிடமிருந்து மிகையான கட்டணம் அறவிடப்பட்டு, அவர்கள் ஏமாற்றப்பட்டிருப்பதாகவே மதிப்பீடு புலப்படுத்துகின்றது. வேளிநாடுகளில் வேலை

பார்க்கும் சிலர் வேலை பெற்றுக் கொடுப்போராகி அனுசரணையாளரையும், தொழிலாளியையும் ஏமாற்றத்துக்கு உட்படுத்துகின்றனர். இந்த வழிமுறைகளை பயன்படுத்துபவர்களில் பெரும்பான்மையானோர், SLBFE யுடன் பதிவு செய்யாவிடில் எவ்வித பாதுகாப்புமற்றவர்களாகவே உள்ளனர்.

- கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை கவனிக்கையில் நடுத்தர, எழுதுவினைஞர்கள் அல்லது தொழில்சார் வல்லுனர்களைப் பார்க்கிலும் தேர்ச்சியற்ற வீட்டுப் பணியாளர்கள், கூடுதலாகப் பெண்கள் ஊழல் அபாயங்களுக்கு முகம் கொடுப்பதாகத் தெரிகிறது.

- வெளிநாட்டு வேலைக்கு ஆட்களைச் சேர்க்கும் வழிமுறையில் அதிகம் துஷ்பிரயோகம் இருப்பதை பெரும்பாலான மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டோர் தெரிவிக்கின்ற போதிலும், அவர்கள் தாம் வெளிநாடுகளில் வேலை பெறுவதற்கு தனி நபர்களிலும், சட்ட மற்றும் சட்டவிரோதமான முகவர் நிலையங்களிலும் சூதுவாதற்ற முறையில் நம்பிக்கை வைக்கின்றனர். இது அவர்களது கல்வியறிவு மட்டங்கள், அல்லது எவ்வித தொழிலில் ஈடுபட்டுள்ளனர், என்பதுடன் தொடர்புபட்டதாக இல்லை. அபாயத்தை ஏற்றுக் கொள்ளும், அறிவுக்குப் பொருந்தாத நடத்தை மிகக் கூடுதலாக உள்ளது. வெளிநாடுகளில் வேலை பெறும் முயற்சியில் தோல்வி கண்ட தொழிலாளர் குழு மீதான ஆய்வு பெருந்தொகை பணத்தை இழந்த போதிலும், முதல் தடவையில் தோல்வி கண்டதனால் அவர்கள் மனச்சோர்வு அடையவில்லை என்பதையே புலப்படுத்துகின்றது. அவர்கள், முதல் தடவை தம்மை ஏமாற்றியவர்களின் சேவையை நாடுவதில் தொடர்ந்தும், ஈடுபடுவது இழப்பீடுகளை சரிபார்த்து, தங்கப் பானையை பெறுவதற்கென தொடர்ந்து முயற்சி செய்யும் அவர்களின் விருப்பமானது, அபாயங்களை எதிர்நோக்குவதையும் மிஞ்சுவதாகவே உள்ளது. அநேகமானோருக்கு, தீர்மானங்கள் எடுப்பதற்குத் தகவல் பற்றாக்குறை உள்ளது. எனினும், அவ்வாறு தகவலைப் பெறும் வழிகள் இருப்பினும் அவற்றை புத்திசாதுரியமாக பயன்படுத்துவதுமில்லை.

ஏனைய துறைகளில் போன்று, ஊழலின் விளைவுகள், குறைத்து மதிப்பிடத் தக்கனவல்ல. வேலைக்கு ஆட்சேர்ப்பதில் பாதிகக்கப்பட்டவர், பெரும் கிராக்கியில் உள்ள வளவாளராக இருந்தபோதிலும் பெரும் செலவைச் செய்தவராகவும் காணப்படுகிறார். வெளிநாட்டு வேலைக்கு ஆட்சேர்க்கும் இலங்கையைச் நேர்ந்த முகவர் நிலையங்கள், குறிப்பிட்ட நாடுகளில் தொழிலுக்கு ஆட்சேர்ப்பவர்களினால் ஏமாற்றப்பட்டு, ஊழலுக்குப் பலியாகின்றன. பெருந்தொகைப் பணமானது ஊழல் நோக்கங்களுக்கு உறிஞ்சப்படுமானால், வெளிநாட்டு வேலைவாய்ப்பு இடர்பாட்டிற்கு உள்ளாகும்.


ஊழலைக் குறைத்துக் கட்டுப்படுத்துவதற்கு, வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு ஆட்சேர்க்கும் வழிமுறையில் மறுசீராக்கலை மேற்கொள்வதற்கு வலுவான அரசியல் விருப்பும், தலைமைத்துவமும் தேவைப்படுகிறது. இந்த நீண்டகால முயற்சியில் அத்தியாவசியமான பங்கேற்பாளர், சிவில் சமூகமாகும். அரசியல் நிறுவனம், சகல பங்கேற்பாளர்களுடனும், சேர்ந்து பாதுகாப்பான வெளிநாட்டு வேலை வாய்ப்பை உறுதி செய்வதற்குப் பணியாற்ற வேண்டும்.

## 2. முகவுரை

வெளிநாடுகளுக்கு முக்கியமாக மத்திய கிழக்கிற்கு, தொழிலாளர்கள் வேலை பார்க்கச் செல்வது, 1970 களின் பிற்பகுதியில் ஆரம்பமானது வேலை வாய்ப்பின்மையை குறைப்பதற்கென ஆண்களையும், பெண்களையும், வெளிநாட்டு வேலை வாய்ப்பைத் தேடச் செல்வதற்கு 1977 ஆம் ஆண்டுகளுக்குப் பின் வந்த அரசாங்கங்களின் ஊக்குவிப்பே காரணியாகும்

இலங்கைப் பொருளாதாரத்திற்கு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெருமளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இலங்கை தொழிலாளர்களில் 24 சதவீதமானோர் (SLBFE – 2009) தற்சமயம் வெளிநாடுகளில் வேலை பார்க்கிறார்கள். இவர்கள் நாட்டில் 36 சதவீதமான இல்லங்களுக்கு உதவி வழங்குகிறார்கள். கடந்த தசாப்த காலங்களில் இந்த எண்ணிக்கை கணிசமான அளவில் அதிகரித்துள்ளது. 1978 இல் (SLBFE – 2009) 8,074 என்ற தொகையுடன் ஒப்பிடுகையில் 2008 இல் 252,021 தொழிலாளர்கள் வேலை பார்க்க வெளிநாடு சென்றனர். இந்தத் தொழிலாளர்களில் ஆண்களும், பெண்களுமாகப் பெரும்பாலானோர் தொழில் தேர்ச்சி பெறாதவர்கள், 2008 வரை இவர்களில் பெண்களே கூடுதலாக இருந்தனர். பெண்களின் எண்ணிக்கை 2006 இல் 114,778 ஆக இருந்தது. 2008 இல் 123,200 ஆக அதிகரித்தது.

**வரைபடம் 1: வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக புறப்பட்டோர்**




2008 இல் தனியார் அனுப்பிய தொகை மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 35.9% ஆகவும் மொத்த உள்ளூர் உற்பத்தியில் (GDP) 6% ஆகவும் இருந்தது. இலங்கையின் நிலுவைக் கொடுப்பனவுகளை ஸ்திரப்படுத்தும் விதத்தில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (FDI) உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி (ODA) என்பவற்றைப் பார்க்கிலும் தனியார் அனுப்பிய தொகை கூடுதலான வெளிநாட்டு நாணயமாற்று கிடைப்பதற்கு ஏதுவாக இருந்துள்ளது.

(ஜயதிலக, ஜயவர்த்தன 2009) பொருளாதாரத்தின் தற்போதைய உலக மயப் போக்குகளையும், அபிவிருத்திகளையும் பொறுத்தவரை தொழிலாளர் வெளிநாடுகளுக்குச் சென்று வேலை பார்ப்பதில் தங்கியிருக்கும் இலங்கைப் பொருளாதாரம் குறுகிய அல்லது நடுத்தர அளவுக் காலப்பகுதிக்குத் தொடர்ந்து நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 10 ஆண்டு அபிவிருத்தி திட்டம் (மஹிந்த சிந்தனை) கௌரவ தொழிலுக்கான 2006 தேசியக்

**கௌரவமான தொழில் என்றால் என்ன?**

உற்பத்தித் திறன், நியாயமான வருவாய் வேலைத்தளத்தில் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு, சகல பெண்களுக்கும், ஆண்களுக்கும் சமமான வாய்ப்புகளும், நடத்தும் விதமும் உள்ள தொழில் வாய்ப்புக்களை கொண்டுள்ளமையே கௌரவமான தொழிலாகும்.

பங்கேற்பாளர்களின் பங்களிப்புடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலன்புரி அமைச்சினால் உருவாக்கப்பட்ட தேசிய வெளிநாட்டுத் தொழில் கொள்கையை அமைச்சரவை 2009 ஏப்ரல் மாதத்தில் அங்கீகரித்தது. தொழிலாளர் வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்வதை ஒழுங்குறுத்துவதற்கு சிறந்த பரிபாலனம் மிக அவசியமானது என்று இந்தக் கொள்கை குறிப்பிட்டுக் கூறுகிறது.

**தேசிய வெளிநாட்டுத் தொழில் கொள்கைளின் சில முக்கிய அம்சங்கள் வருமாறு:-**

- சுதந்திரம், சமத்துவம், பாதுகாப்பு, மனித கௌரவம் உள்ள நிலமைகளில் கௌரவமான, உற்பத்தித் திறனுள்ள வெளிநாட்டு வேலைகளில் சகல ஆண்களுக்கும் பெண்களுக்கும் வாய்ப்புக்களை ஊக்குவித்தல்.

- வெளிநாட்டில் வேலை பார்ப்பவர்களினதும், குடும்பங்களினதும் முக்கியமாக துஷ்பிரயோகத்திற்கும், சுரண்டலுக்கும் ஆளாகக்கக்கூடிய 24 வயதுக்குட்பட்ட பெண்கள், தேர்ச்சியற்ற அல்லது குறைந்த தேர்ச்சியுள்ள தொழிலாளர்களுக்கான பாதுகாப்பை ஓர் அரசாங்கப் பொறுப்பாக இனங்காணுதல்.

- இலங்கைக்கும் தொழிலாளர்களுக்கு ஆகக்குறைந்த தேவைகளை நிர்ணயிக்கும் தொழில் வழங்கும் நாடுகளுக்குமிடையில் இருதரப்பு உடன்படிக்கைகள், புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் என்பவற்றின் முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிடல்.

- அரசாங்க, தனியார்துறைகளில் வேலைக்கு ஆட்சேர்க்கும் தொழிலின் தராதரங்களை நிர்ணயிக்கும் தெளிவான புரிந்துணர்வுடனான வேலைக்கு ஆட்சேர்க்கும் கொள்கையை உருவாக்குதல் (பிரதிநிதிகள்) அல்லது உப முகவர்களின் பங்கை உள்ளடக்கியதாக இதில் கட்டாயப் பதிவு, வேலைக்கு ஆட்சேர்க்கும் தனியார் முகவர்களின் பங்கு, செயற்பாடுகளின் சகல அம்சங்களையும் ஒழுங்குறுத்தி பரிபாலனம் செய்தல், சட்ட விரோத நடவடிக்கைக்கு இனங்காணப்பட்ட பாரிய தண்டனைகளுடன், கடப்பாட்டையும் பொறுப்புத் தன்மையையும் ஊக்குவிப்பதற்கான கண்காணிப்பு வழிமுறையும் அடங்கும்.

- ஆட்சேர்க்கும் தனியார் முகவர்களாலும், அவர்களின் தொழிலாளர்களை ஒப்பந்தத்தில் பெற்றுத் தரும் தரகர்களாலும் மேற்கொள்ளப்படும் மோசடிகளையும் வெளிக்கொணர்தல்

- வேலைத் தளத்தில் தொழிலாளர்களுக்கு இழைக்கப்படும் துஷ்பிரயோகத்தை கட்டுப்படுத்தி நிவாரண நடவடிக்கைகளை இனங்காணுதல்.

கொள்கை இலங்கை, தொழில் உறவுகள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு 2006) என்பன, தொழிலாளர் வேலைக்காக வெளிநாடு செல்வதன் முக்கியத்துவத்தை அங்கீகரித்துள்ளன. உலக மயமாக தொழிலாளர் செல்வதில் உள்ள சவால்களையும் வாய்ப்புக்களையும் எதிர்கொள்வதற்கு புறம்பான வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு, நலன்புரி நடவடிக்கைகளுக்கான அமைச்சு உருவாக்கப்பட்டது.

## 2.1 ஒழுங்குறுத்தலும், நிறுவனக் கட்டுக்கோப்பும்.

பெருமளவிலான ஒப்பந்த ரீதியான வெளிநாட்டு வேலை வாய்ப்பு அதிகரித்ததால், 1980 களில் தற்போதுள்ள சட்டவாக்கம், வெளிநாட்டில் வேலை வாய்ப்புக்கு ஆட்சேர்ப்பதில் காணப்படும் மோசடிகள், துஷ்பிரயோகங்கள் என்பனவற்றை முறியடிக்கப் போதுமானதாகவில்லை என்று உணரப்பட்டது. ( டி சொய்ஸா- 2009) இதனடிப்படையில் வெளிநாட்டில் வேலை பெற்றுச் செல்வோருக்குப் பாதுகாப்பான சூழல் நிர்வாக அமைப்பு என்பவற்றை உறுதி செய்யவும், சட்டபூர்வ கட்டமைப்பை வழங்கவுமென 1985 இல் இலங்கை வெளிநாட்டுப் பணியக அதிகாரச் சட்டம் இல 21 வகுக்கப்பட்டது. SLBFE இந்த அதிகாரச் சட்டத்தின் கீழ் தற்காலிகமாக வேலைக்காக வெளிநாடு செல்பவர்களுக்குப் பொறுப்பான முதல் நிறுவனமாக அமைக்கப்பட்டது. அது இப்பொழுது வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நலன்புரி அமைச்சின் கீழ் செயற்படுகிறது. 1994 இல் இந்த அதிகாரச் சட்டம் திருத்தப்பட்டதும் SLBFE இலஞ்ச அதிகாரச் சட்டத்தின் கீழ் பட்டியலிடப்பட்ட நிறுவனமாக உள்ளது. மோசடிகளை கட்டுப்படுத்தி தடுப்பதற்கு SLBFE யை மேலும் வலுப்படுத்துவதற்கென இந்த அதிகாரச் சட்டம் 2009 இல் மற்றுமொரு தடவை திருத்தப்பட்டது. வேலைக்கு ஆட்களைக் கடத்துதல், 2006 ம் ஆண்டின் ஆறாம் இலக்க அதிகாரச் சட்டத்தின் சட்டக் கோவை (திருத்தம்) மூலம் குற்றச் செயலாக்கப்பட்டது.

அரசாங்கம் 1996 இல் ஐக்கிய நாடுகளின், வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்லும் சகல தொழிலாளர்களதும், அவர்களது குடும்பத்தினரதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான கோட்பாட்டை உறுதிப்படுத்தியது. இதன் மூலம் சர்வதேச நடைமுறைகள், தராதரங்கள் என்பவற்றிற்கான தனது கடப்பாட்டைப் புலப்படுத்தியதுடன் தனது அறிக்கைகளை வெளிநாட்டில் வேலை பார்ப்பவர்களுக்கான ஐ.நா குழுவிற்கு சமர்ப்பித்து வருகிறது. ஆயினும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் கோட்பாடுகளை செல்லுபடியாக்கவில்லை. ஆனால் ILO யாப்பை ஏற்றுக் கொண்டிருப்பதனால், (GOSL 2008) அதன் மூலமான நேரடிக் கட்டுப்பாடுகளுக்கு அமைய அதற்கு அறிக்கைகளை சமர்ப்பித்து வருவதுடன் 2004ம் ஆண்டில் ILO மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டில் வேலைக்குச் செல்லும் தொழிலாளார்களுக்கான நியாய பூர்வமான உடன்படிக்கை மீதான தீர்மானத்தின் கட்டுக் கோப்புள்ளும், தொழிலாளர் வெளிநாடு செல்லும் கட்டுப்பாடற்ற 2006 பல்தர கட்டுக் கோப்புள்ளும் செயற்படுகின்றது. பிராந்திய மட்டத்தில், இலங்கை2005 நவம்பர் 15 இல் நாட்டில் செயற்படத் தொடங்கிய பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய சங்கத்தின் (SAARC) விபசாரத்திற்காக பெண்களையும், பிள்ளைகளையும் கடத்தலை தடுத்து எதிர்க்கும் கோட்பாட்டில் ஒரு தரப்பினராக உள்ளது. 2006 இல் இலங்கை அரசாங்கம் வெளிநாட்டில் வேலை பார்ப்பவர்களுக்கும், பொருந்தும் விதத்திலான ILO ஆரம்பித்த கௌரவ தொழிலுக்கான தேசிய கொள்கையை ஏற்றுக் கொண்டது.

வேலைவாய்ப்புப் பெறும் வழிமுறையில் மோசடிகளையும் ஏமாற்று நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்துவதற்கு SLBFE பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. வெளிநாடு செல்வதற்கு முன்னதாக தொழிலாளர்களை SLBFE இல் கட்டாயமாகப் பதிவு செய்தல், தமது திறனை மேம்படுத்த தொழிலாளர்களைப் பயிற்றுவித்தல், பல்வேறு சூழல்களில் வேலை வாய்ப்புப் பெறுவதற்கு தயார் செய்தல், மாதிரி ஒப்பந்தங்களின் அறிமுகம், சீரான தொழில் நிலைமைகள், உயர்ந்த சம்பளம் என்பவற்றுக்கான பேரம் பேசுதல், (டெயிலி மிஹர் 2008a சோமரத்ன, 2008a)பல்வேறு வேலை வழங்கும் நாடுகளுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தல் (MOU). உத்தரவுப் பத்திரம் பெற்ற ஆட்சேர்க்கும் முகவர் நிலையங்களை கண்காணித்தல், சட்டவிரோத ஆட்சேர்த்தலைக் கண்டு பிடித்து முறியடித்தல், அரசாங்கம் 2009 இல் அதிகாரச் சட்டத்தைத் திருத்தியதன் மூலம் தவறிழைக்கும் வெளிநாட்டு முகவர் நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் SLBFE இற்கு மேலும் அதிகாரம் வழங்கியுள்ளது.

வெளிநாடுகளில் வேலை பார்க்கச் செல்லும் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கென, கூடுதலான வேலை வழங்கும் நாடுகளில் மனித, நிதி வளங்களுடன் ராஜதந்திரத் தூதரகங்கள் முன்னர் இல்லாத இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு நலன்புரி அமைச்சும் SLBFE யும் நடைமுறைகளை திருத்தி காலத்திற்கேற்றதாக்கியும், தமது பணியைப் பரவலாக்க மாவட்டங்களில் கிளை அலுவலகங்களை நிறுவியும், ஊழல் நடவடிக்கைகளை ஒழிப்பதற்கான முயற்சிகளை எடுத்துள்ளன. மோசடி ஊழல் என்பதைத் தடுக்கவும். புகார்கள் மீது தொடர்ந்து நடவடிக்கை எடுக்கவும். சட்டவிரோத மற்றும் மோசடியான உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர் நிலையங்கள் தனிநபர்கள் மற்றும் அரசியல்வாதிகளை பற்றியும் ஆராய்ந்து, தீவிர திடீர் சோதனைகளை நடத்துவதற்கு, SLBFE தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்துடன் (ICTA) இணைந்து பணியாற்றுகிறது. SLBFE வளவில் ஒரு பொலிஸ் நிலையம் நிறுவப்பட்டுள்ளது. ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் புலம்பெயர் தொழிலாளர்களின் முறைப்பாடுகளைக் கவனிக்கவென இரண்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். வெளிநாட்டு வேலைவாய்ப்பு மாதிரிகள் பற்றிய நம்பத் தகுந்த தகவல், கிடைப்பதை உறுதி செய்யவென குடிசனப் புள்ளிவிபரத் திணைக்களம் புலம்பெயர் தொழிலாளர் புள்ளி விபரங்களுக்கென தேசிய தகவல் நிலையத்தை நிறுவியுள்ளது. (டெயிலி மிறர் - 2009a) மனித கடத்தலை எதிர்த்துப் போராட்டவென தேசிய வள நிலையத்தை குடிவரவுக் குடியகல்வுத் திணைக்களம் திறந்துள்ளது. குடியகல்வு தொடர்பாக குறிப்பிட்ட அம்சங்களை விருத்தி செய்யவும், உலக மய சந்தைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்தவும் (சோமரத்தன 2008b) இலங்கை பிலிப்பைன்ஸுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளவிருக்கின்றது.

உத்தரவுப் பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையங்கள் பொறுப்புடன் நடந்து ஒழுங்கு முறையிலான ஆட்சேர்த்தல் நடவடிக்கைகளில் ஈடுபடவென SLBFE இந்த ஆண்டில் (2009) புதிய தரப்படுத்தல் அமைப்பை அறிமுகப்படுத்துகிறது. பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் ஆற்றல், புதிய இடங்களில் தொழிலாளர்களை அமர்த்தல், வரிக் கொடுப்பனவு முகவர்களுக்கு எதிரான பல சட்டரீதியான வழக்குகள் போன்றவற்றின் அடிப்படையில் தரப்படுத்தல் அமைப்பு இருக்கும் இந்தத் தரப்படுத்தல் திட்டப் பிரகாரம், பல்வேறு குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ள முகவர் நிலையங்களில் தீர்ப்பு வழங்கப்படாத 10 வழக்குகள் உள்ளன. பரிசீலனைக்கு உட்பட்ட காலப்பகுதியில் ஒரு தொழிலாளியைக் கூட வேலைக்கு சேர்த்துக் கொள்ளாதவை, சட்டப்படி தகுதியற்றவையாக்கப்படும் - வெளிநாட்டு ஊக்குவிப்புப் பிரசாரத்தில் “A” தரத்திலான முகவர் நிலையங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலன்புரி அமைச்சின் உதவியுடன் பல நன்மைகள் வழங்கப்படும்.

புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் அண்மைக் காலத்தில் எதிர்ப்பின்றிச் செயற்பட்ட இலங்கைத் தொழிற்சங்கள், சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தராதரங்களில் அடங்கியுள்ள முழுப்பாதுகாப்புள்ள உரிமைகளை இலங்கைப் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கென பஹ்ரேன், ஜோர்டான், குவைத் ஆகிய சக நாடுகளுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள், உப ஒப்பந்தக்காரர்கள் ஆகியோரின் வேலைக்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கைகளில் கடும் மேற்பார்வை கட்டுப்பாடு என்பவற்றையும் அனுசரணைத் திட்டங்களில் துஷ்பிரயோகத்தை ஒழிப்பதையும், இந்த உடன்படிக்கையில் சேர்ந்துள்ளவர்கள் உறுதிப்படுத்துவார்கள் (டெயிலி மிறர் 2009b)

மற்றுமொரு முன்னேற்றகரமான நடவடிக்கையாக, வீட்டுப் பணியாளர்கள் வெளிநாடுகள் செல்வதை தடுப்பது என்ற அரசாங்கத்தின் கூற்றுக் கரணமாகவும், தொழிலாளர்கள் துஷ்பிரயோகத்தை அங்கீகரித்தும், ALBFEA வும் குவைத்தின் இலங்கை மனித வளச் சங்கமும், துஷ்பிரயோகத்தை ஒழிப்பதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.

எவ்வாறாயினும் இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், வெளிநாட்டில் வேலை பார்க்கச் செல்லும் தொழிலாளர்கள் துஷ்பிரயோகத்திற்கும் உரிமை மீறல்களுக்கும் உட்படுத்தப்படுகிறார்கள். சுரண்டலைத் தடுப்பதற்கு அமைப்புக்கள் இருக்கின்ற போதிலும் பாதுகாப்பான புலம்பெயர்வு, கௌரவமான வேலை என்ற கோட்பாடுகள் மீறப்பட்டு பாரதூரமான பிரச்சினைகளை வெளிநாடுகளில் வேலை பார்க்க முற்படும் தொழிலாளர்கள் எதிர்நோக்குகிறார்கள். கூடுதலாக வேலைக்குச் சேர்வதற்கான கட்டணங்கள் அறவிடப்படுவது, ஒப்பந்தம் மீறப்படுதல், சம்பளம் வழங்கப்படாமை, சென்ற நாடுகளில் வேலை வாய்ப்பின்றி நிராதரவாக விடப்படல் என்ற வகையில் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுகின்றன. (டி.சொய்ஸா, 2009) வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்று இங்கிருந்து புறப்படுவதற்கு முன்னரான காலப்பகுதியே முக்கியமாக துஷ்பிரயோகம் நிகழும் கட்டமாக உள்ளது. SLBFEக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளின் அரைவாசி ஆட்சேர்ப்பு தொடர்பானதாகும். ஆட்சேர்த்தல் காலகட்டத்தில் தொழிலாளர்கள் மோசடிக்குட்படுதல் ஏமாற்றப்படுதல் பற்றி ஊடகம் கிரமமாக அறிவித்து வருகின்றது. உதாரணமாக வெளிநாடுகளுக்கு வயது குறைந்த சிறுமிகளை அனுப்புவதற்கு பிறப்புத் திகதியை மாற்றுதல்களைக் குறிப்பிடலாம். இந்த நடவடிக்கைகள், வெளிநாட்டுக்கு வேலை பார்க்கச் செல்பவர்கள் பாதிப்புக்கு உள்ளாக வழியமைக்கிறது.

**றிஸானாவின் வயது மாற்றப்பட்டுள்ளது.**

றிஸானா நபீக், வீட்டுப் பணிப்பெண்ணாக ஐந்து மாதக் குழந்தையைப் பராமரித்த வேளையில் அதனைக் கொன்றதாக குற்றம் காணப்பட்டு சவுதி அரேபியாவில் 2007 ஜூனில் தலை துண்டிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது. குழந்தைக்கு போத்தலில் பாலைப் புகட்டும்போது அது மூச்சுத் திணறி இறந்துள்ளது. றிஸானா சார்பில் ஆஜரான சட்டத்தரணி, குழந்தையின் மரணம் விபத்து என்றும், குழந்தைகளைப் பராமரிப்பதில் அவளுக்கு அனுபவம் போதாமையால் இது நிகழ்ந்ததாகவும் வாதிட்டார்.

றிஸானா மூதூரில் வறுமை நிலவும், 2004 டிசம்பரில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமம் ஒன்றைச் சேர்ந்தவர். அவர் போலிக் கடவுச் சீட்டைப் பயன்படுத்தி அல் - ஓராபி குடும்பத்தில் பணிப்பெண்ணாகப் பணிபுரியவென 2005 மே மாதத்தில் அங்கு கொண்டு செல்லப்பட்டார். அவரது பிறப்புச் சான்றிதழின் பிரகாரம் அப்பொழுது அவரது வயது பதினேழாகும். போலிக் கடவுச் சீட்டில் அவரது வயது 23 என்று குறிப்பிட்டிருந்தது. அவளின் உண்மை வயது குறிப்பிட்டிருப்பின் சவூதி அரேபியாவில் வேலை வாய்ப்புக் கிடைத்திருக்க மாட்டாது.

அக்கறை கொண்ட பிரஜைகள், மனித உரிமை ஆர்வலர்கள், ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு (AHRC) சர்வதேச அமைப்புகள் இவர் மீதான நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்துள்ளன. AHRC சவூதி அரேபியாவில் உள்ள இலங்கையருடன் சேர்ந்து 2007 ஜுலையில் அவர் மீதான மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு ஒரு நாள் முன்னதாக மேன்முறையீடு செய்ய ஒரு சட்டத்தரணியை நியமித்ததன் மூலம் அவர் மீதான மரண தண்டனை நிறைவேற்றப்படுவது தடுக்கப்பட்டது. மேன் முறையீடு விசாரணக்கு இருக்கையில் றிஸானா நான்கு ஆண்டுகளாக சிறைவாசம் செய்கிறார். இந்த வழக்கானது, போலிக் காரணங்களுடன் வெளிநாடுகளுக்கு வேலை பார்க்கச் சென்று பின்னர் கஷ்டத்துக்குள்ளாவதை தடுப்பதற்கு ஒழுங்குறுத்தும் நெறிமுறைகள் அமுல் செய்யப்படுவதை உறுதி செய்வதன் அவசியத்தை தெளிவாகப் புலப்படுத்தும் உதாரணமாகும்.

வேலைக்கு ஆட்சேர்ப்பதில், மோசடி நடவடிக்கைகள் “கௌரவ தொழில்” என்ற கோட்பாட்டுக்கு முரணாவதுடன், துஷ்பிரயோம் தடையின்றி நிகழ்வதுடன், ஊழலை பெருமளவில் சகித்துக் கொள்ளும் இயல்புள்ள சமூகத்தின் அடையாளமாக உள்ளது.

## 2.2 ஊழல், நேர்மைத் திறன் என்பனவற்றுக்கான வரைவிலக்கணங்கள்.

TI, “ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை தனிப்பட்ட இலாபத்திற்குப் பயன்படுத்தல்” என்று துஷ்பிரயோத்திற்கு வரைவிலக்கணம் கூறுகிறது. நேர்மைத் திறன் என்பது ஊழல் இல்லாமைக்கு அப்பாற்பட்டது. இந்த ஆய்வின் நோக்கத்திற்காக, நேர்மைத் திறனுக்கு வரைவிலக்கணம் கூறுவதனால் அது உண்மை. ஏனையோருக்கு மதிப்பும் சமமான முறையில் நடத்தலும், நேர்மைத் திறனதும், சமூகப் பொறுப்பும் என்று விரிவடையும் விதத்தில் சட்டவாக்கத் தேவைகளுக்கு அமைவாக இருப்பது மாத்திரமல்லாது, அதற்கு அப்பாலான நெறிமுறை நடத்தையாகும், நெறிமுறை நடத்தை, வெளிப்படையாகவும், பொதுமக்களின் பார்வைக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும். (வேலைக்கு ஆட்சேத்தலும் U.K யின் வேலை வாய்ப்பு சம்மேளனமும்)

UK யின் ஆட்களை வேலைக்குச் சேர்க்கும் வேலைவாய்ப்புச் சம்மேளனம், அதன் தொழில்சார் நடைமுறைக் கோவையில், அங்கத்தவர்கள் பொய்யான கூற்றுகளை விடுக்கக் கூடாது என்றும் விளம்பரம் செய்கையில் உண்மையான கோட்பாடுகளைப் பேண வேண்டும் என்றும் - ஆட்சேர்ப்பதற்கு ஆவண ரீதியான அனுமதி தமக்குள்ள பதவிகளை மாத்திரமே விளம்பரப்படுத்தல் வேண்டும் என்றும் ஒரு வேலையை ஏற்பதற்கு முன்னர் வாடிக்கையார்களுக்கு சகல கட்டணங்கள், சேவைகள் என்பன பற்றி விரிவாகவும் பூரணமாகவும் தெரிவிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது அங்கத்தவர்கள், தொழிலுறவுகளை மதிப்பதுடன் வேலை தேடுவோருக்கு ஏற்படும் அபாயங்களை மதிப்பிடுவதில் தெளிவாகச் செயற்பட வேண்டும். வேலை தேடுவோருக்கு வேண்டுமென்றே அபாயத்தை ஏற்படுத்தாமல் அவர்களது ஆரோக்கியத்திற்கும், பாதுகாப்பிற்கும் ஒரு தொழிலில் ஈடுபடுவது அபாயம் விளைவிக்குமென நம்புவதற்குக் காரணமிருந்தால் அது பற்றியும் அவர்களுக்கு அங்கத்தவர்கள் தெரிவிக்க வேண்டும்.

ஊழலானது, இலங்கையில் சகல பொருளாதார அரசியல், நிர்வாக சமூக நிறுவனங்களையும் பாதிக்கின்றது. அத்துடன் சகல அரசாங்க, தனியார் துறைகளிலும் அது காணப்படுகிறது. வெளிநாட்டு வேலைவாய்ப்பில், தொழில்களை ஒதுக்கீடு செய்வதில் தமது கடமைகளைச் செய்வதற்கான அரசாங்க அதிகாரிகளுக்கு வழங்கப்படும் அல்லது கோரப்படும் அல்லது சட்டவிரோத நடவடிக்கைகளுக்கென கோரப்படும் கொடுப்பனவுகள் மிக அதிகமான அளவிலான அரசியல் ஊழலாக உள்ளது. (பாராளுமன்ற மையம் கனடா 2000) தனியார் துறையில், வெளிநாட்டில் வேலை வாய்ப்புப் பெறுவோர் வேலைக்கு ஆட்சேர்க்கும் முகவர்களுக்கு இலஞ்சப் பணம் என்ற வகையில் பெரிய அளவில் அல்லது சிறிய அளவில் "சிறு ஊழல்களில்" ஈடுபடலாம். TI இலஞ்சம் என்பதற்கு வரைவிலக்கணம் கூறுகையில், பரிசு எதனையும் கொடுத்தல், பெற்றுக் கொள்ளுதல், கடன், கட்டணம், விருது அல்லது வேறு நன்மைகள் அல்லது சட்டவிரோதமான செயலில் ஈடுபடுவதற்கு தூண்டுதலாக எவரிடமிருந்தும் பெறப்படும், உதவி, அல்லது தொழில் வர்த்தகம் என்பவற்றில் நம்பிக்கைத் துரோகம் என்பனவற்றைக் குறிப்பிடுகிறது. இவை வேலைக்கு ஆட்சேர்க்கும் வழிமுறையில் குறிப்பிடத்தக்க முதலீடு செய்யும் ஏழை மற்றும் சூதுவாதற்ற ஏழைகளைப் பெரிதும் பாதிக்கின்றன.

ஊழல் இயல்பில் இரகசியமானதால், அதனை அளப்பது கடினமாகும். வெளிநாடுகளில் வேலை பெற்றோர் செய்யும் பெரும் எண்ணிக்கையிலான முறைப்பாடுகளே துஷ்பிரயோகம், ஊழல், நெறிமுறையற்ற நடைமுறைளைச் சுட்டிக்காட்டுகின்றன. எனினும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை மோசடி நடவடிக்கைகளின் மட்டத்தைப் பிரதிபலிப்பதில்லை. ஏனெனில் பாதிக்கப்பட்ட அனைவரும் அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்வதில்லை. (கன்னங்கரா 2008) 2004 – 2008 வரையில் தளங்களில் வேலைபார்க்கும் தொழிலாளர்கள் செய்த முறைப்பாடுகளில் 44 சதவீதமானவை ஆட்சேர்க்கும் நடைமுறை தொடர்பானவை என்று SLBFC தரவு தெரிவிக்கின்றது.

**ஆட்டவணை 1: SLBFE க்கு 2004 – 2008 இல் கிடைக்கப் பெற்ற வேலைக்கு ஆட்சேர்ப்பது தொடர்பான முறைப்பாடுகளின் எண்ணிக்கை.**

| முறைப்பாட்டு வகை | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 |
|---|---|---|---|---|---|
| இனங்காணப்பட்ட சம்பளங்கள் செலுத்தப்படாமை | 1,626 | 1,709 | 1,989 | 1,495 | 1,698 |
| ஒப்பந்தம் பூர்த்தியடைந்ததும் திருப்பி அனுப்பப்படாமை | 206 | 711 | 725 | 922 | 627 |
| நிராதரவாக விடப்பட்டமை போதிய வரவேற்பின்மை | 13 | 35 | - | - | 06 |
| வேலையில்லாமல் நிராதரவாக விடப்பட்டமை | 13 | 541 | 1,060 | 484 | 131 |
| வேலை வாய்ப்பு ஒப்பந்தம் மீறப்பட்டமை | 1,144 | 1,792 | 1,152 | 739 | 1,401 |
| முன்கூட்டியே வேலை நீக்கம் | - | 1 | - | 13 | 50 |
| ஆட்சேர்த்தல் தொடர்பான மொத்த முறைப்பாடுகள் | 3,002 | 4,789 | 4,926 | 3,653 | 3,913 |
| கிடைக்கப் பெற்ற சகல முறைப்பாடுகளும் | 7,106 | 9,930 | 10,829 | 8,445 | 9,664 |
| மொத்த முறைப்பாடுகளில் % ஆட்சேர்த்தல் தொடர்பான முறைப்பாடுகள் | 42 | 48 | 45 | 43 | 41 |

ஆதாரம்: வெளிநாட்டு வேலைவாய்ப்பு வருடாந்த புள்ளி விபர அறிக்கை 2008 SLBFE


நாட்டை விட்டுப் புறப்படுவதற்கு முன்னரான முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2007 இல் 1,056, 2008 இல் 1,872. வேலை பார்க்கச் செல்வோர் முகவர்களுக்கு அல்லது உப முகவர்களுக்கு செலுத்திய கொடுப்பனவுகள் பற்றி SLBFE யிடம் முறைப்பாடு செய்வதில்லை. இவற்றையும் கணக்கில் எடுத்தால் இந்த எண்ணிக்கை இன்னமும் கூடுதலாக இருக்கும்.

ஊழல் எவ்வளவு தூரம் நிலவுகின்றது என்பதை காண்பிப்பவை, நீதிமன்ற வழக்குகளின் எண்ணிக்கை (2008 இல் 80) இலஞ்ச ஆணைக்குழுவிற்குச் செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகள், ரத்துச் செய்யப்பட்ட அல்லது புதுப்பிக்கப்படாத முகவர்களின் உத்தரவுப் பத்திரங்களின் எண்ணிக்கை, கறுப்புப் பட்டியிலில் சேர்க்கப்பட்டுள்ள முகவர்களின் எண்ணிக்கை ( 2008 இல் SLBFE யினால் 103, ALBFE யினால் 67) அல்லது திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்ட எண்ணிக்கை (2007 இல் 51, 2008 இல் 114) காப்புறுதிக் கோரிக்கைகளுக்கான கொடுப்பனவுகள் (2006 இல் 133, 2007 இல் 132) ஒப்பந்த மீறல் ஆகியன (SLBFE 2008) விபத்துகள், மரணங்கள் ஆகியன.

முறைப்பாடுகள் மோசடி நடவடிக்கைகளின் தன்மையை காண்பிக்கின்ற போதிலும், அவை நிகழ்ந்தனவற்றின் அளவைக் காண்பிக்கவில்லை. ஏனெனில், பிறர் மீதான கருணை, ஒழுங்கீனமான நடைமுறைகள், நிவாரணம் பெறுவதற்கென செலவிடப்பட வேண்டி வரும் நேரமும், பணமும், அமைப்பில் ஏற்பட்ட நம்பிக்கையின்மை என்பனவற்றால், ஊழலுக்குப் பலியான பலர் முறைப்பாட்டைத் தாக்கல் செய்ய மாட்டார்கள்.

புலம்பெயர் தொழிலாளர்களின் அமைப்பானது அவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகும் சாத்தியத்திற்கு பிரதான பங்கு வகிக்கும் காரணியாக உள்ளது. 2008 இல் மொத்தமாக வெளிநாடு சென்றோரில் 40% பெண்கள்ஆவார். 80% முறைப்பாடுகள் அவர்களிடம் இருந்ததே கிடைத்தன – வெளிநாடு செல்லும் பெண்களின் எண்ணிக்கை சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ள போதிலும், இதனோடு ஒப்பிடும்போது 2005 – 2008 காலப்பகுதியில் அவர்களிடமிருந்து பெறப்பட்ட முறைப்பாடுகள் குறைவடையவில்லை, SLBFE (SLBFE- 2009) க்கு கிடைக்கப்பெறும் மொத்த முறைப்பாடுகளில், தொடர்ந்தும் 78 க்கும் - 85 க்கும் இடைப்பட்ட விகிதமாக இருந்தது.


**வரைபடம் 2:2008 இல் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள்.**




மூலம்: வெளிநாட்டு வேலைவாய்ப்பு வருடாந்த புள்ளிவிபரவியல் அறிக்கை 2008,SLBFE

முன்னைய ஆண்டுகளின் போக்குகளை தொடர்ந்து கண்காணிக்கவில்லை, இங்கிருந்து வெளிநாடு புறப்பட்டவர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில், முறைப்பாடுகளின் ஆகக்கூடுதலான விகிதம் வீட்டுப் பணியாளர்களிடமிருந்தே கிடைத்துள்ளது. மொத்த முறைப்பாடுகளில் இது(6.65%) தேர்ச்சியற்ற தொழிலாளர்களிடம் இருந்து கிடைத்த முறைப்பாடுகள் 1.77% இது மொத்த குறைபாடுகளில் 10.91% தொழில்சார் வல்லுனர்களிடமிருந்தே, மிக்குறைந்த அளவு சதவீதமான முறைப்பாடுகள் கிடைத்தன. இது மொதத்தில் 0.13% ஏனைய இடங்களுடன் ஒப்பிடும் போது மத்திய கிழக்கிலிருந்தே கூடுதலான எண்ணிக்கையில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதனால், பெண்கள், வீட்டுப் பணியாளர்கள், மற்றும் மத்திய கிழக்கு நாடுகளான சவூதி அரேபியா, குவைத், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (UAE) கட்டார், ஜோர்டான், லெபனான் ஆகி நாடுகளுக்குத் தொழிலுக்காக செல்வோரே கூடுதலாகப் பாதிக்கப்படுகின்றனர்.

**வரைபடம் 3:தேர்ச்சியுள்ள மட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்ற சதவீத முறைப்பாடுகள் - 2008**




ஆதாரம்: வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கான வருடாந்த புள்ளி விபர அறிக்கை 2008 SLBFE

இந்துதப் புள்ளி விபரங்கள் பெரும்பான்மையான புலம்பெயர் தொழிலாளர்களுக்கு அவர்கள் துஷ்பிரயோகத்திற்கும் பலியாவதைத் தடுப்பதற்கு பலம் வாய்ந்த அரசாங்கப் பாதுகாப்பு அவசியமாகும் என்பதைக் காண்பிக்கின்றன. சில பிரச்சினைகள் தொழிலாளர்களின் போக்குகள் நடத்தைகளாலேயே ஏற்படுகின்றன. மோசடியாளர்களுடன் இணைந்து போலி ஆவணத்தைப் பெறுதல், வெளிநாடு செல்வதற்கு, தீர்மானம் எடுக்காதிருத்தல், வேலைக்கு ஆட்சேர்ப்பவர்களில் தீவிர நம்பிக்கை வைத்தல், தகுந்த பயிற்சி பெறாமை, வெளிநாட்டில் வேலை பார்க்கச் செல்வதற்கு மனோ ரீதியாகவும், உடல் ரீதியாகவும் தகுதியற்றிருத்தல், தான் பார்க்க இருக்கும் வேலை பற்றி கேட்டுத் தெரிந்து கொள்ளாதிருத்தல், தமக்கு அந்நியமான கலாசாரம் பற்றி அறிந்து கொள்ளாதிருந்தல். தமது வீட்டைப் பற்றிய நினைவில் வேலைகொள்வோருக்கு பிரச்சினைகளை உருவாக்குதல், வேலை பார்க்குமிடத்தில் ஏனைய இலங்கைத் தொழிலாளர்களால் தவறாக வழிநடத்தப்படல் அல்லது அவர்கள் உந்துதலால் மோசடி அல்லது நெறிமுறையற்ற நடத்தையில் ஈடுபடுதல் ( சமத் 2008b) என்பன இவற்றுள்

சிலவாகும். இவர்களது நடவடிக்கைகள் உள்ளூர், வெளிநாட்டு முகவர்களுக்கும், வேலை கொள்வோருக்கும், கணிசமான நிதி நஷ்டத்தை ஏற்படுத்துகிறது.

ஆட்களை வேலைக்குச் சேர்ப்பதில் நேர்மைத் திறன், கடைப்பிடிக்கப்படுவது, பாதுகாப்பான புலம்பெயர்வுக்கும், கௌரவமான தொழிலுக்கும் முக்கியமானதாகும். புலம்பெயர்வு அநேகமாகக் குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களிலிருந்து செல்லும் தொழிலாளர்களுக்கு எப்பொழுதும் கணிசமான முதலீடாக உள்ளது. அதற்கு சமூகச் செலவும் உண்டு. ஊழல் காரணமாக புலம்பெயர்பவர்களுக்கு பாதுகாப்பு சூழலை வழங்க முடியாமல் போவது, நெறிமுறையற்ற நடத்தை, நேர்மைத் திறன் இல்லாமை என்பன தொழிலாளர்களுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும் மோசமான பாதிப்பை ஏற்படுத்துகிறது. சீராக்கப்பட்ட நிறுவன ரீதியாக ஒழுங்குறுத்தும் கட்டுப்கோப்பு உள்ள போதிலும், மோசடிகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன. (டி.சொஸ்ஸா, 2009)

தற்காலிகமான தொழில் புலம்பெயர்வில் பங்கேற்போரின் இறுதி நோக்கம், சாதகமற்ற விளைவுகளை கூடுதலாக்குவதாகும். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கைப் பிரகாரமும் அவர்கள் நாட்டுக்குக் கொண்டுவரும் வருமானம் மூலமும் வெளிநாட்டு வேலை வாய்ப்புத் தொழிலின் பெறுபேறு அளவிடப்படுகிறது. அவ்வாறு ஏற்றுமதி செய்யப்படுபவர்கள். மனிதர்கள் என்பதும், அவர்கள் நாட்டின் முக்கிய வளங்கள் என்பதையும் மறந்துவிடக்கூடாது. எனவே கிடைக்கப்பெறும் தகவல்கள், பற்றி மேலும் ஆழமாகப் பகுப்பாய்வு செய்வதும், பல்வேறு ஊழல் நடவடிக்கைகளை இனங்காண மேலும் ஆய்வு செய்யப்பட வேண்டிய அவசியமும் உள்ளது. அரசும் ஏனைய பங்கேற்பவர்களும், மேலும் தலையீடுகள் செய்து பாதுகாப்பான சூழலில் தொழிலாளர்கள் புலம்பெயர்வதற்கு உதவுமுகமாக தகவல்களை வழிகாட்டியாகப் பயன்படுத்தும் தேவையும் உள்ளது.

அறிமுகவுரையைத் தொடர்ந்து இந்த அறிக்கை ஆய்வுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைகளை விபரிப்பதுடன், வேலைவாய்ப்புக்கான பல்வேறு வழிகள் பற்றி இனங்கண்டு, ஆராய்வதுடன், ஊழல் அபாயத்தை வழங்கும் சட்டபூர்வ, நிறுவன ரீதியான குறைபாடுகளையும், எடுத்துக் காட்டுகிறது. வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு ஆட்சேர்ப்பதில் பல்வேறு வகையான மோசடிகள், வேலைபார்க்கச் செல்வோரின் போக்குகள் என்பவற்றையும், இனங்கண்டு பகுப்பாய்வு செய்கிறது. இந்தப் பகுதிகளின் பின்னர் முடிவுரையும், விதந்துரைகளும் இடம்பெறுகின்றன.

# 3. ஆய்வு முறை

இந்த ஆய்வு 2008 நவம்பர் மாதத்திற்கு, 2009 மே மாதத்திற்கும் இடையில் நடத்தப்பட்டு, 1985ம் ஆண்டில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு அதிகாரச் சட்டம் (இல.2) திருத்தப்பட்ட பின்னர் 2009 ஒக்டோபரில் காலத்துக்கு ஒத்த நிலைக்குக் கொண்டுவரப்பட்டது. வெளிநாடுகளில் வேலை தேடுவோர் வெளிப்படையான, சமனான, சுரண்டல் அற்ற சூழலில் செல்வதற்கான வழிமுறையை ஏற்படுத்த வகை செய்யும் நோக்கத்துடன், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு ஆட்சேர்ப்பதில் மேற்கொள்ளப்படும் மோசடி நடவடிக்கைகள் பற்றிய பொதுவான நோக்கை வழங்குவதிற்காக இந்த ஆய்வு வடிவமைக்கப்பட்டது. முக்கிய நோக்கங்கள் வருமாறு:

- வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கு ஆட்சேர்ப்பதற்கு வழிகாட்டும். தற்போதுள்ள கட்டுக் கோப்பை மதிப்பிடுதல்.

- ஏமாற்று, ஊழல், மற்றும் மோசடி நடவடிக்கைகள் பற்றிய ரகங்களை அடையாளம் காணுதல், வேலைக்கு ஆட்சேர்க்கும் வழிமுறையில் பாதிப்பு ஏற்படுத்தும் முக்கிய பிரச்சினைகளை ஆராய்தல். கிடைக்கப்பெறும் பதிவுகள், ஆவணங்கள், நேர்காணல், ஆய்வுகள் கலந்துரையாடல்கள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்தல் என்ற கலப்பு ஆய்வு முறைகள் வேலைக்கு ஆட்சேர்க்கும் வழிமுறையில் சம்பந்தப்பட்ட பல்வேறு குழுக்களிடமிருந்து பெறப்படுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. அவை பின்வருமாறு:

முதலில் ஆய்வுக்கான தகவல் கலந்துரையாடல்கள், சம்பவக் கற்கைகள், நேர்காணல் மற்றும் தொடர்புள்ள ஏஜென்ஸிகள், அவற்றின் பிரசுரங்கள், இணையத்தளங்கள் என்பனவற்றில் பேணப்பட்ட பதிவுகள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட பண்புசார்ந்த, அளவை சார்ந்த தரவுகள் மூலம் திரட்டப்பட்டன.

- இரண்டாவதாக, TISL, CENWOR ஆகியவற்றின் ஆலோசனை அணுகுமுறையைத் தொடர்ந்து ஒரு ஆய்வுச் செயலூக்கக்குழு (இணைப்பு 1) நிறுவப்பட்டது. அது தகவலின் பொருத்தம், சரியான தன்மை என்பவற்றை உறுதி செய்யவென இரு தடவைகள் சந்தித்தது.

- மூன்றாவதாக, CENWOR இன் சிரேஷ்ட ஆய்வாளர்கள், பல்வேறு பங்கேற்பவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 20 முக்கிய தகவல் வழங்குனருடன் ஆழமான நேர்காணல்களை நடத்தினர். வேலைக்கு ஆட்சேர்ப்பது தொடர்பாக தகவல் பெற்றுக் கொள்ள, குழுநிலைக் கலந்துரையாடல்கள், தனி நபர் ஆலோசனைகள் என்பன தகவல்களை உறுதிப்படுத்தவும், மதிப்பீட்டுக் கண்டுபிடிப்புகளில், நிலையற்ற தன்மைகள் பற்றிக் கவனம் செலுத்தவுமென நடத்தப்பட்டன. குழு அங்கத்தவர்களிடையிலான கலந்துரையாடல், தகவலின் சரியான தன்மையை உறுதி செய்யவும், சொந்த வேறுபாட்டைக் குறைக்கவும் விளங்கங்களைப் பெறவும் உதவின. நகல் அறிக்கை கூர்ந்து நோக்குதலுக்காக விநியோகிக்கப்பட்டு, பங்கேற்பவனிடமிருந்து பெறப்பட்ட அபிப்பிராயங்கள், இறுதி அறிக்கையில் சேர்க்கப்பட்டன.

- நான்காவதாக 2008 நான்காவது காலாண்டில், வெளிநாட்டில் வேலை பார்ப்பவர்கள் பற்றிய மாதிரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. புலம்பெயர் தொழிலாளியின், திறமை, அலுவல்கள், பால், இனத்துவம், வேலைபார்க்கச் செல்லும் இடங்கள், வேலைக்கு ஆட்சேர்ப்பவரின் பிரதான வகைகள் என்பனவற்றைக் கவனத்தில் எடுத்து, கொழும்பு, மாத்தளை, புத்தளம் போன்ற, கூடுதலான ஆட்கள் வெளிநாடு செல்லும் மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டன. நேர்காணல்கள்- பேட்டி காணப்படுபவர்களின் வசதி கருதி சிங்களம் அல்லது தமிழ் மொழியில் நடத்தப்பட்டன.

மூன்று மாவட்டங்களிலிருந்து, இரூநூற்று இருபது புலம்பெயர் தொழிலாளர்கள் மதிப்பீட்டிற்காக நேர்காணல் செய்யப்பட்டனர். இவர்கள் 4 வகையானவர்கள்.

(ஆ) வேலைபெறும் சாத்தியம் உள்ளவர்கள்
(ஆ) வெளிநாட்டில் வேலை பார்த்துவிட்டு நாடு திரும்பி மீண்டும் வேலை பார்க்கச் செல்லும் தகுதியுள்ளோர்.
(இ) 2008/2009 இல் வெளிநாடுகளில் வேலை தேடாத நாடு திரும்பிய தொழிலாளர்கள்
(ஈ) மதிப்பீட்டுக் காலத்தில் வேலை வாய்ப்புப் பெற முயற்சி செய்யும் நபர்கள், தோல்வி அடைந்து அல்லது முயற்சியைக் கைவிட்டவர்கள்

(அ)விலும் (ஆ)விலும் விடையளித்தோர் 2008/2009 இல் வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பெறுவதற்கு முயற்சியை ஆரம்பித்துள்ளவர்களில் அடங்குவர். (இ) மற்றும் (ஈ) யில் விடையளித்தோர் 2003 – 2008 ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குள் அடங்குவர்.

முதல் 3 வகைகளிலும், ஒவ்வொரு மாவட்டத்திற்கு 20 வேலை வாய்ப்புத் தேடுவோர் வீதம், மற்றும் 4வது தரத்திற்கு 10 -15 பேர் வரை என்ற ரீதியில் snowball மாதிரித் தெரிவு முறையைப் பிரயோகித்து உதாரணங்கள் பெறப்பட்டன.

இந்த மாதிரிப் பெரும்பான்மையானோர், 20 -39 வயது வரையிலானோர் என்ற வகையில், 138 பெண்களும், 84 ஆண்களும் இருந்தனர். இது சிங்களவர், தமிழர், முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்தியது. சிங்களவர்களில் பெரும்பான்மையானோர் கொழும்பு மாவட்டத்தையும் தமிழர்கள் மாத்தளை மாவட்டத்தையும் முஸ்லிம்கள் புத்தளம் மாவட்டத்தையும் சேர்ந்தவர்கள். இந்த மாதிரியில் திருமணமானவர்களே கூடுதலானோர், அடுத்து திருமணமாகாத தொழிலாளர்கள், விதவைகள், பிரிந்திருப்போர் அல்லது விவாகரத்துப் பெற்றோர், விடையளித்தோரில் அனேகமானோர் தரம் 6க்கும் கூடுதலாக கல்வி கற்றோர், 3 பேர் மாத்திரம், பாடசாலை செல்லாதவர்கள். 16 பேர் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையில் கல்வி கற்றவர்கள் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தோர், கொழும்பு, புத்தளம் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். 22% ஆண்களுடன் ஒப்பிடுகையில் எண்பத்தைந்து சதவீதமானவர்கள் பெண்கள் ஏனையோர், கைத்தொழில் ரீதியான தையல், மேசன்வேலை, தச்சுவேலை, வீட்டுக்கு வர்ணந் தீட்டுவோர், ஒட்டுவேலை செய்வோர், அழகுக்கலை தொடக்கம் சமையல் வேலை வரையிலான பல்வேறு திறன்களைக் கொண்டுள்ளோர். அறுபத்திரண்டு சதவீதமாக விடையளித்தோர் முன்னர் தொழில் பார்க்கவில்லை. ஆண்களைப் பார்க்கிலும் கூடுதலான பெண்கள் சமயாசமய அடிப்படையில் வேலை பார்த்தவர்கள்.

புலம்பெயர் தொழிலாளர்களில் பெரும்பாலானோர், மத்திய கிழக்கு நாடு ஒன்றில் வேலைபெறத் திட்டமிட்டுள்ளோர், கனடா, சைப்றஸ், இஸ்ரேல், இத்தாலி, மாலைதீவுகள், சிங்கப்பூர், மலேசியா, கொரியா, ஜப்பான் என்பன வேலைதேடும் ஏனைய இடங்கள். அனேகமானோர் வீட்டுப் பணிப்பெண்களாக வேலை பார்க்கச் செல்வோர், ஏனையோர்

தொழிலாளர்கள், சுத்திகரிப்பாளர்கள், பண்ணை உதவியாளர்கள், சாரதிகள், சமையற்காரர், மேசன்மார், மின்னியலாளர்கள், ஒட்டு வேலை செய்பவர்களாக பணிபுரிய எதிர்பார்த்திருப்பவர்கள்.

வினாக்கொத்தில் வேலைக்கு வெளிநாடு செல்பவரின் பின்னணி, வேலை பெறுவதற்கு பயன்படுத்தப்பட்ட வழி, தெரிவு செய்யப்பட்ட வழியின் சட்டபூர்வ அந்தஸ்து பற்றிய அறிவு, செய்யப்பட்ட கொடுப்பனவுகள், கொடுப்பனவுத் தவணைகள், தேவையான ஆவணங்களை பெற்றுக் கொண்ட நபர், பயற்சியில் பங்கேற்றல், மருத்துவ பரிசோதனைகள், ஒப்பந்த உள்ளடக்கம் பற்றிய அறிவு, விடையளித்தோர், SLBFE யில் பதிவு செய்துள்ளனரா, ஆகிய தகவல்கள் கோரப்பட்டுள்ளன. வெளிநாட்டில் வேலை பார்த்துவிட்டுத் திரும்பியுள்ளோரிடம் அவர்கள் வேலைபார்த்த இடத்தில் வரவேற்பு, தொழில், ஒப்பந்தம், முறைப்பாடுகள் எதுவும் செய்யப்பட்டிருப்பின் கிடைக்கப்பெற்ற இழப்பீடுகள் என்று மேலதிக வினாக்கள் கேட்கப்பட்டன. வேலை பெறுவதில் தோல்வி கண்டவரிடம், வேலைக்குச் செல்லவிருந்த நாடு, வேலை பெறுவதற்கு பயன்படுத்தப்பட்ட வழி, தோல்விக்கான காரணங்கள், செய்யப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பாக குறிப்பிட்டு வினாக்கள் கேட்கப்பட்டன. அத்துடன் வேலைக்கு ஆட்சேர்க்கும் வழிமுறையில் காணப்படும் துஷ்பிரயோகம் பற்றிய அவர்களது உணர்வுகள் பற்றி விடையளித்தோரிடம் வினவப்பட்டன.

இந்த ஆய்வில் பல்வேறு வரையறைகள் உள்ளன. முதலில் மாதிரியின் சிறிய அளவானது, அனைத்து வேலை வாய்ப்புப் பெறுவோரையும், பிரதிநிதித்துவப் படுத்துவதாக கருதப்பட முடியாது. எனினும், இது நிலவும் துஷ்பிரயோகங்கள், பற்றிய நிழற்படத்தையும், காணப்படும் மோசடிகள், பற்றிய மாதிரிப் படிவ வரைவு முறையையும் வழங்குகின்றது.

இரண்டாவதாக, வளங்கள் பற்றாக்குறையினால், இந்த ஆய்வு, வெளிநாட்டு, உள்ளூர் ஏஜென்சிகளுக்கிடையிலான இணைப்புகளை, ஆழமாக எடுத்துக் காண்பிக்க முடியவில்லை. அத்துடன் தொழிலாளர்களுக்கு அபாயமற்ற சூழலை உறுதிப்படுத்த இலங்கையின் வெளிநாட்டுத் தூதரகங்கள் தொழில் நலன்புரி அலுவலகங்கள் ஆகியவற்றின் பங்குபற்றியும் காண்பிக்கப்படவில்லை. வேலைக்கு ஆட்சேர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் பொலிஸ், மற்றும் குடியவரவு, குடியகல்வுத் திணைக்களம் போன்ற ஏனைய நிறுவனங்களும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

உள்ளூர் ஆவணங்களைப் பெறுதல், வேலைக்கு ஆட்சேர்க்கும் நிறுவனங்கள், பற்றிய தரவு என்பன கிடைக்கப்பெறாமை மற்றுமொரு குறைபாடாகும். இறுதியாக ஊழல் பரிமாற்றங்களில் ஒளிவு மறைவான தன்மை ஊழல் நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்ட வலையமைப்புத் தளம் என்பன மோசடி நடவடிக்கைகள் பரவியுள்ளதை மதிப்பீடு செய்வதைக் கடினமாக்குகிறது. நுணக்கமான, விபரமான கண்டுபிடிப்புக்களை மேற்கொள்வதற்கு விரிவாக்கப்பட்ட காலப்பகுதியில், பொறுமையான ஆய்வு அவசியமாகும். இது இந்த ஆய்வின் வரையறைக்கு அப்பாற்பட்டது. மாதிரி மதிப்பீட்டு மூலம், பெறப்பட்ட தரவை ஒழுங்குமுறைப்படுத்தலும், பகுப்பாய்தலும், CENWOR இன் புள்ளிவிபரப் பிரிவினால் நடத்தப்பட்டது.

# 4. வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான வழிகள்


தற்காலிகமாக வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்லும் தொழிலாளர்கள், SLBFE , SLFEA போன்ற முகவர் நிலையங்களையும், உத்தரவுப் பத்திரம் பெற்ற வேலைவாய்ப்பு முகவர்களையும், தனிநபர்களையும், உத்தரவுப் பத்திரம் பெறாத முகவர் நிலையங்களையும் வேலை பெற்றுக் கொள்ளும் பல்வேறு வழிகளாகப் பயன்படுத்துகின்றனர். மதிப்பீட்டில், விடைபகர்ந்தவர்களில் 4 சதவீதமானவர்கள் வெளிநாடு சென்றவர்கள், செல்ல முயற்சி எடுப்பவர்கள், செல்ல முயற்சி எடுத்தவர்கள். உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர் நிலையங்கள் மூலம் வெளிநாடு செல்ல 1% சதவீதமானோரே SLBFE மூலம் வெளியே சென்றனர். சென்று திரும்பிச் சென்ற 12 பேர் உட்பட உத்தியோகப்பற்றற்ற வலையமைப்புகள் மூலம் வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றோரின் எண்ணிக்கை, உத்தரவு பெற்ற முகவர் நிலையங்கள் மூலம் வேலை பெற்றோரின் எண்ணிக்கைக்குச் சமமானது. பதினேழு சதவீதமானோர் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான உப முகவர்களைத் தெரிவு செய்தனர்.

**அட்டவணை 2: விடை பகர்ந்தவர்களினால் பிரயோகிக்கப்பட்ட வழிகள்**

| வழி | எண்ணிக்கை | மொத்த சதவீதம் |
|---|---|---|
| உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர் நிலையங்கள் | 115 | 40.8 |
| உப முகவர்கள்/தரங்கள் | 48 | 17.0 |
| உத்தியோகப்பற்ற வலையமைப்புகள் | 115 | 40.8 |
| SLBFE | 3 | 1.1 |
| அறிவிக்கப்படாதது | 1 | 0.3 |
| மொத்தம் | 282 | 100.0 |

வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பெற முயற்சி செய்து தோல்விகண்ட தொழில் தேடுவோர் சகல வழிகளையும் பயன்படுத்தி உள்ளனர். இந்த வகையைச் சேர்ந்த 42 தொழிலாளர்களில், 29 பேர் உப முகவர்கள், அல்லது உத்தியோகப்பற்றற்ற வலையமைப்புகள் போன்ற ஊழல் அபாயத்தை அதிகரிக்கும் வழிகளைப் பயன்படுத்தியுள்ளனர். 12 பேர் உத்தியோகபூர்வ வளத்தை உபயோகித்துள்ளன. பல ஆய்வுகள், உப முகவர்கள், உயர்ந்த சம்பளம் வழங்கும் ஆனால் சட்டபூர்வமாக அனுமதிக்காத இடங்களுக்கு தொழிலாளர்களை அனுப்புவதில் நிபுணத்துவம் பெற்ற பாதாள உலக வலையமைப்புடன் தொடர்பு வைத்திருப்பதைக் காண்பிக்கின்றன. வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெறுவதற்கு உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர் நிலையங்களைத் தெரிவு செய்த தொழிலாளர்களும், ஊழல் அபாயத்தை எதிர்கொண்டதாக ஆய்வுக்கான பதில்கள் புலப்படுத்துகின்றன.

**வரைபடம் 4:துஷ்பிரயோக மட்டங்கள் பற்றிய தொழிலாளர்களின் உணர்வுகள்**




இலங்கையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கு ஆட்சேர்த்தல் SLBFE யினால் உத்தரவுப்பத்திரம் வழங்கப்பட்ட தனியார் வேலை வாய்ப்பு முகவர் நிலையங்கள், உத்தியோகப் பற்றற்ற அல்லது உத்தரவுப் பத்திரம் பெறாத வலையமைப்புகள் மூலமே கூடிய அளவில் நடைபெறுகிறது. இதேவேளையில் வேலைகொள்வோரினால் நேரடியாக ஆட்சேர்ப்பதும் இடம்பெறுகிறது. ALFEA, 1985, அதிகாரச் சட்டம் 21 இன் கீழ் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான சூழலை அதன் அங்கத்தவர்கள் வழங்குவதை உறுதிப்படுத்துவதற்கென நிறுவப்பட்டது. 2008 இல் மொத்தப் புறப்பாடுகளில் 64% இனர் உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர்கள் மூலமும் 36% இனர் உத்தியோகப்பற்றற்ற வலையமைப்புகள் மூலம் அல்லது சுய அடிப்படையிலும் சென்றிருந்தனர். (SLBFE - 2009), மதிப்பீடாக 400 உத்தரவுப் பத்திரம் பெறாத முகவர் நிலையங்கள் (60% உத்தரவு பெற்ற முகவர் நிலையங்களுக்கும் கூடுதலானவை) சட்ட விரோதமாக செயற்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (கொழும்பு பேஜ் 2008) ஏனைய முக்கிய நபர்களாக (சட்டபூர்வமாக இல்லாத போதும்) சுமார் 20,000 உப முகவர்கள் உத்தரவுப் பத்திரம் பெற்ற – உத்தரவுப் பத்திரம் பெறாத முகவர் நிலையங்களுக்காக ஆட்களைச் சேர்க்கின்றனர். (மார்டின் 2008) பின்வரும் பகுதிகள் வேலைக்கு ஆட்சேர்க்கும் வழிகள். இந்த வழிகளிலுள்ள ஊழல் அபாயங்கள் மற்றும் நேர்மைத் திறன் இன்மை நிலவுதல், வேலைக்கு ஆட்சேர்ப்பதில் இடைத்தரகர்களாக இருப்பவர்களினால் சட்டம், விதிகள், ஒழுங்கு முறைகள் - என்பவற்றை மீறல் ஆகியன பற்றி ஆராய்கின்றன.

## 4.1 SLBFE

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக அதிகாரச் சட்டத்தின் கீழ் 1985 இல் நிறுவப்பட்டது. வெளிநாடுகளில் தொழில் தேடுதலை முகாமைத்துவம் செய்வதற்கு பொறுப்பாக SLBFE யே முதன்மை முகவர் நிலையமாக விளங்குகிறது. அது வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நலன்புரி அமைச்சின் கீழ் செயற்படுகிறது. ஸ்தாபிக்கப்பட்ட அதிகாரச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள SLBFE இன் நோக்கங்களில் பின்வருவன வேலைக்கு ஆட்சேர்த்தல், (பிரிவு 25) மற்றும் பிரமாணங்கள், (பிரிவு 15) தொடர்பானவை.

வேலைக்கு ஆட்சேர்த்தல்

- பணியகம் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையத்தின் செயற்பாடுகளைக் கொண்டு நடத்துவதுடன் வழங்கப்படும் எந்த ஒரு சேவைக்கும் கட்டணத்தை அறவிடுகின்றது.

பிரமாணம்

- வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் செயற்பாடுகளை சீராக்கல்
- இலங்கைக்கு வெளியே வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான செயற்பாடுகளை நடத்தும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களுக்கு உத்தரவுப் பத்திரம் வழங்குவதுடன்,அந்த உத்தரவுப் பத்திரங்களுக்கான விதிகளையும், நிபந்தனைகளையும் நிர்ணயித்தல்.
- தரங்களை நிர்ணயிப்பதுடன், வேலைக்கான ஒப்பந்தங்கள் குறித்து பேச்சுக்கள் நடத்துதல்.
- வேலைக்கு ஆட்சேர்ப்பதற்கான உடன்படிக்கைகளை உத்தியோகபூர்வமானதாக்குவதற்கு தகுந்த வெளிநாட்டு அதிகாரசபைகள், வேலை கொள்வோர் வேலைவாய்ப்பு முகவர்கள் ஆகியோருடன் உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளல்.
- நியாயமான சம்பளங்கள், வேலைத் தராதரங்கள் என்பனவற்றை உறுதிப்படுத்தும் மாதிரி வேலைவாய்ப்பு ஒப்பந்தத்தை வகுத்து அமுல் செய்தல்.
- வெளிநாடுகளுக்கு வேலை பார்க்கச் செல்லும் இலங்கையர்களுக்கு வழங்கப்படும் ஆவணங்களின் அதிகாரப்பூர்வத் தன்மையை பரிசீலனை செய்தல்

அதன் ஏனைய நடவடிக்கைகள், உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர்களுடன் இணைந்து. புலம்பெயர் தொழிலாளர்களுக்கு பயிற்சி வழங்குதல், தகவல் தரவு வங்கியை ஏற்படுத்திப் பேணுதல், வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக செல்லும் இலங்கையர்களைக் கண்காணித்து, அவர்களுக்கு உதவி வழங்கல் என்பனவாகும்.

இந்த ஆய்வு, SLBFE க்குள் பல ஊழல் அபாயங்கள் இருப்பதை இனங்கண்டுள்ளது.

**பணிப்பாளர்கள் சபைக்குள் முரண்பாடான அக்கறைகள்.**

பணிப்பாளர்கள் சபையினால், பணியகத்தின் விவகாரங்களை நிர்வகித்தலும், இந்த நோக்கத்திற்காக பணியகத்தின் சகல அதிகாரங்களையும் கடமைகளையும், செயற்படுத்தலும் வேண்டப்படுகிறது. (பிரிவு 10) ஆனால் இந்த அதிகாரங்கள், தலைவர், பணிப்பாளர் அல்லது பணியகத்தின் ஒரு ஊழியரிடம் (பகுதி 11) ஒப்படைக்கப்படலாம். உத்தரவுகளைப் பிறப்பிக்கவும், தகவலைப் பெறவும், SLBFE இன் நடவடிக்கைகளை ஆராயும் அமைச்சருக்கு அதிகாரங்கள் உள்ளன.

11 உறுப்பினர்கள் உள்ள பணிப்பாளர் சபையில் 4 அங்கத்தவர்கள் உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர் நிலையங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். ஒரு பக்கத்தில் இந்த முகவர் நிலையங்கள் இருப்பது SLBFE தொழில் பற்றிய தகவலறிந்த தீர்மானங்களை முக்கியமாக அதன் வளர்ச்சி, அபிவிருத்தி, தொழிலாளர்களின் பாதுகாப்பு என்பன தொடர்பாக எடுப்பதற்கு வழிவகுக்கும், மற்றொரு பக்கத்தில், இத்தகைய பிரதிநிதிகள் இருப்பது, SLBFE ஒழுங்குறுத்துவதாகவும், அமுல் செய்வதாகவும் இருப்பதால் நலன்களில் முரண்பாட்டுக்கு இட்டுச் செல்லும். வகுக்கப்பட்ட தகவல் தெரிந்தவராக இருப்பதால், சபையில் உள்ள

உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர் நிலையங்கள், ஏனையோருக்கும், கூடுதலான நேர்மையற்ற சாதகமான நிலையைக் கொண்டிருக்க முடியும். இதேவேளையில் SLBFE உத்தியோகத்தவர்கள் ஊழல் முகவர் நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கையில், தமது சமூகத்தால் கட்டுப்படுத்தப்பட வேண்டி நேரிடும் பங்கேற்பவர்களுடனான நேர்காணல்கள், சபையில் உத்தரவு பெற்ற முகவர் நிலையங்களின் பிரதிநிதிகள் இருப்பதால், தவறிழைக்கும் முகவர் நிலையங்களுக்கு எதிராக உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுப்பதில் கஷ்டத்திற்கு உள்ளாவதைப் புலப்படுத்தின. உத்தரவு பத்திரம் பெற்ற அத்தகைய முகவர் நிலையங்களின், சில பிரதிநிதிகள் பல ஆண்டுகளாக பதவிகளை வகித்ததால் முரண்பாடான அக்கறைக்கான சாத்தியமும் ஊழலும், அதிகமாக காணப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையை ஏற்றுக் கொண்டு, சபையின் தீர்மானங்களுக்கு தமது நலன்கள் முரண்படுகையில், உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர் நிலையங்களின் பிரதிநிதிகள், தமது வர்த்தக நலன்களை தெரிவித்து, விலகிக் கொள்ளுதல், அல்லது நேரடி அக்கறையுள்ள விடயங்கள் ஆராயப்படுகையில் பங்குபற்றாமல், இருத்தல் வேண்டும் என்று சபை உத்தரவிட்டுள்ளது. (டி.சொய்ஸா, 2009) எனினும் ஆய்வு மூலம் இந்த உத்தரவு எவ்வளவு தூரம் கடைப்பிடிக்கப்படுகிறது என்பது பற்றி அறிந்து கொள்ள முடியவில்லை.

**நலன்புரி உத்தியோகத்தர்களும், தொழில் உத்தியோகத்தர்களும்.**

வெளிநாடுகளில் வேலை பார்க்கச் செல்லும் தொழிலாளர்களின் நலன்களைக் கவனிப்பதற்கென முறையே SLBFE யினாலும் தொழில் அமைச்சினாலும் இலங்கைத் தூதரகங்களின் ஆலோசனைப் பிரிவுகளுக்கும் நலன்புரி உத்தியோகத்தர்களும் தொழில் உத்தியோகத்தர்களும் நியமிக்கப்படுகின்றனர். நியமனங்களில், ஒழுங்கீனங்கள், மோசடி நடவடிக்கைகள் பற்றி, கணக்காய்வாளர் நாயகமும், அரசாங்க தொழில்கள் மீதான குழுவும் (Cope) பல தடவைகள் விமர்சித்துள்ளன. உதாரணமாக, 2005 ம் ஆண்டில் முடிவடைந்த SLBFE கணக்குகளை பரிசீலிக்கையில் கணக்காளர் நாயகம் பின்வருமாறு கூறியுள்ளார். “மலேசியாவிலும், ஜோர்டானிலும் நலன்புரி உத்தியோகத்தர்கள் பதவிக்கு, 60 வயதுக்கும் மேற்பட்ட இரு உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு அங்கீகாரம் பெறப்படவில்லை. ( இலங்கை பாராளுமன்றம் 2006) 2007 Cope அறிக்கை ( இலங்கை பாராளுமன்றம் 2007) கூறுவதாவது “தற்சமயம் கொறியாவில் வேலை பார்க்கும் ஒருவரை நலன்புரி உத்தியோகத்தராக தெரிவு செய்கின்றமை பற்றி குழு முக்கிய கவனம் செலுத்தியது”, “ இந்த உத்தியோகத்தரை தெரிவு செய்தவர்கள் மீது கடும் அதிருப்தியை” அது தெரிவித்தது. மேலும் 65 வயதுக்கு மேற்பட்ட இரு உத்தியோகத்தர்கள் வெளிநாடுகளில் நலன்புரி உத்தியோகத்தர்களாக அமைச்சரவை அங்கீகாரம் இல்லாமல் நியமிக்கப் பட்டிருப்பதாகவும், நான்கு உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்ட 13 பதவிகளுக்கு மேலதிகமாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. கணக்காளர் நாயகம், 2007 ம் ஆண்டு முடிவடைந்த கணக்குகள் மீதான தமது அறிக்கையில், அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முரணாக ஆகக்குறைந்த தராதரமும் இல்லாத 5 உத்தியோகத்தர்கள் ஆலோசக (தொழில்) உத்தியோகத்தர்களாக, வெளிநாட்டுத் தூதரகங்களில் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் “வெளிநாட்டு நலன்புரி உத்தியோகத்தர்களுக்கான அங்கீரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 13 ஆக இருந்தபோதிலும், அந்த வரையறைக்கும் மேலாக 4 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். “உள்ளூர் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் பதவி அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கையில் உள்ளடக்கப்படாத போதிலும் திறைசேரியின் முகாமைத்துவ திணைக்களத்தின் அங்கீகாரம் இல்லாமல் 4 உத்தியோகத்தர்கள் இந்தப் பதவிக்குச் சேர்க்கப்பட்டுள்ளனர்.”(இலங்கைபாராளுமன்றம் - 2008)

இந்த அவதானிப்புக்களை கணக்காளர் நாயகமும், COPE ம் மேற்கொண்டதால் SLBFE நலன்புரி உத்தியோகத்தர்களை வேலைக்குச் சேர்ப்பதில் ஒரு திட்டத்தை வகுக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இது அமைச்சரவை அங்கீகாரத்திற்காக காத்திருக்கின்றது.

நலன்புரி உத்தியோகத்தர்களில் சிலர் அரசியல் நியமனங்கள் பெற்றவர்களாக குறைந்த கல்வித் தரமுடையவர்களாக வேலையில் அக்கறை இல்லாதவர்களாக, தமது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து வெளிவேலைகளிலும், சட்டவிரோத நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதாக பங்கேற்பாளர்கள் கருதுகின்றனர். வெளிநாட்டில் வேலை பார்ப்பவர்களில் இறப்பவர்களின் எண்ணிக்கை தற்கொலை உட்பட அதிகரிப்பதனால் ஏற்பட்ட அதிருப்தியினால் COPE “நலன்புரி உத்தியோகத்தர்களின்” பங்கு பரிசீலிக்கப்படல் வேண்டும். தொடர்ந்து எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து குழு திருப்தியடையவில்லை இலங்கைப் பாராளுமன்றம் 2009a) என்று கருத்துத் தெரிவித்தது.

**இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள்**

பல்வேறு நலன்களுக்காக இலஞ்சம் பெறுகையில் SLBFE உத்தியோகத்தர்கள் CIABOC யினால் கைது செய்யப்பட்ட சம்பவங்கள் பங்கேற்பவர்களினால் ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருப்பதுடன் நன்கொடைகள் உத்தியோகத்தர்கள், குறைந்த தரத்திலான ஊழியர்கள் ஆகியோரால் பெறப்படுவதை உறுதி செய்துள்ளனர். எனினும் ஊழலின் இரகசியத் தன்மையினால், எவ்வளவு தூரம் இந்த நடவடிக்கை இடம்பெறுகிறது என்பதை நிச்சயப்படுத்துவது கடினமாகும். தென்கொரியாவுக்கு வேலை தேடுவோர் SLBFE ஊழியர்களுடன் தொடர்பு ஏற்படுத்துமாறு கேட்கப்பட்டதாக ஆய்வுக்கான நடவடிக்கை தெரியப்படுத்துகின்ற போதிலும், இந்தக் குற்றச்சாட்டுக்களை ஆராய்ந்து அறிவதற்கு ஒரு வழியும் இருக்கவில்லை. குவைத்தில் வீட்டுப் பணியாளர்களுக்கென அமுல் செய்யப்படவிருந்த காப்புறுதித் திட்டம் தொடர்பாக ஊழல் இருந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

**குவைத்தில் வீட்டுப் பணியாளர்களுக்கான காப்புறுதித் திட்டம் இடைநிறுத்தப்பட்டது.**

குவைத்தில் வீட்டுப் பணியாளர்களுக்கென ஒரு கமிஷன் முகவரினால் அமுல் செய்யப்படவிருந்த ஒரு காப்புறுதித் திட்டத்திற்கான செலவு ஒரு காப்புறுதிக் கம்பனியினால் தெரிவிக்கப்பட்டதைப் பார்க்கிலும், கூடுதலாக இருந்ததாகக் கூறி ALFEA உயர் நீதிமன்றத்தில் ஒரு அடிப்படை உரிமை மீறல் வழக்கைத் தாக்கல் செய்தது. (பத்திரண, 2009 Sri Lanka News First 2008 : 2009 a,b) 5வது வழக்காளியுடன் (காப்புறுதி கம்பனி) செய்யப்பட்ட காப்புறுதி உடன்படிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருப்பதால் குவைத்தில் வேலைக்குச் செல்வோர் SLBFE யினால் அங்கீகரிக்கப்பட்ட, தமது விருப்பத்திற்கு அமைய காப்புறுதியைப் பெறும் சுதந்திரம் மனுதாரர்களுக்கு உள்ளதாக நீதிமன்றம் தீர்மானித்தது. (SCFR 425/2009 SCM 09.06.2009)

**தென்கொரியாவுக்கு வேலைக்கு ஆட்சேர்த்தல்**

தென்கொரிய அரசாங்கத்துடன் 2004 இல் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் தென்கொரியாவுக்கு மாத்திரமே SLBFE வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக ஆட்களைத் திரட்டியது. ஒப்பீட்டளவில் கூடுதலான சம்பளமும், சீரான நன்மைகளும், இருப்பதனால் தென்கொரியா, வெளிநாட்டில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு சிறந்த இடமாகவுள்ளது.

தென்கொரியாவுக்கு வேலைக்கு ஆட்சேர்ப்பதில் தரமான தெரிவுமுறை உள்ளது. SLBFE வெற்றிடங்களை விளம்பரம் செய்கிறது. கொரிய மொழிப் பரீட்சை நடத்தப்படுகிறது. பெறுபேறுகள் இணையத்தளத்தில் போடப்படுகின்றன. அதன் பின்னர் பரீட்சையில் பெறப்பட்ட புள்ளிகள், புகைப்படங்களிலிருந்து கணிக்கப்பட்ட உடற் தோற்றம் என்பவற்றின் அடிப்படையில் தென்கொரிய பொறுப்பாளர்கள் வேலைக்கு ஆட்களைத் தெரிவு செய்கின்றனர். தெரிவு செய்யப்பட்டோர், பின்னர் அந்நாட்டுக்குப் புறப்படுவதற்கு முன்னதாக SLBFE யால் நடத்தப்பட்ட பயிற்சியை மேற்கொள்கின்றனர். SLBFE கட்டணம் அறவிடுவதில்லை. ஆனால் தொழில் பார்க்கச் செல்பவர்கள் வைத்தியப் பரிசோதனைக் கட்டணம், பயணச் செலவு, உட்பட வெளிநாட்டு செல்வதற்கு முன்னரான செலவுகளை ஏற்றுக் கொள்கின்றனர். இதற்கு அரச வங்கியிடமிருந்து கடன் பெற்றுக் கொள்ள முடியும். அதற்கு 100,000 ரூபாவுக்கான பிணை அவசியமாகும்.

2004 தொடக்கம் 2008 வரை 19,479 பேர் தேர்ச்சியற்ற தொழிலாளர்களாக தென்கொரியாவுக்கு வேலை பார்க்கச் சென்றனர். 2008இல் சென்றோர் எண்ணிக்கை 1,760 எனினும், SLBFE அதற்கும் கிடைத்த தொழில் கோரிக்கைகள் அனைத்தையும் பூர்த்தி செய்ய முடியவில்லை என்பதையிட்டு அக்கறை காண்பிக்கப்பட்டது. இந்த விடயத்தில் கவனம் செலுத்துகையில் பணியகம் 2005,2006 ஆண்டுகளில் பணியகத்திற்கு 11,000 வேலை வாய்ப்புக்கள் கிடைத்தன. அது 5,330 பேரை மாத்திரமே தொழிலுக்கு அனுப்ப முடிந்தது (இலங்கை பாராளுமன்றம், 2007) என்று COPE தெரிவித்துள்ளது. மறுபுறத்தில், SLBFE புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை தென் கொரியாக்களிலேயே தங்கியிருப்பதால் தெரிவு செய்யப்பட்ட சகலரையும் தென்கொரியாவுக்கு அனுப்புவதை உறுதிப்படுத்த முடியாது என்று தெரிவித்துள்ளது.

தொழிலாளர் தெரிவுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் COPE தென் கொரியாவில் இலங்கைத் தொழில் தரம் குறைவது பற்றிக் கவனம் செலுத்துவதாகத் தெரிவித்துள்ளது. கிடைக்கப்பெற்ற அறிக்கைகளின் பிரகாரம் இலங்கைத் "தொழிலாளர்களின் தரம் பற்றிய தரப்படுத்தல் வெகுவாகக் குறைந்துள்ளது. தொழிலாளர்களுக்கு தகுந்த தெரிவுகளை மேற்கொள்ளாததால் பணியகத்தினால் (SIC) இந்த நிறுவனம் உருவாக்கப்பட்டதாக குழு கருதுகிறது. தெரிவு செய்யப்பட்டோருக்கு கல்வித் தகைமைகள் இருந்தபோதிலும் தேவையான தொழில் அனுபவம் இருக்கவில்லை. அத்துடன் இந்த வேலைகளுக்கு ஆட்களைத் தெரிவு செய்வதில், சில மோசடி நடவடிக்கைகள் இடம்பெற்றதாகவும், இவை முன் குறிப்பிடப்பட்ட நிலைமையுடன் தொடர்புடையது என்றும் குழு அவதானித்துள்ளது"

SLBFE தராதரமான தெரிவு முறையைக் கடுமையாக்குதல் மூலம் இந்த அறிக்கைக்குப் பதில் அளித்துள்ளது. இந்தக் கடுமையான நடைமுறைகள் காரணமாக நல்ல பலன் கிடைத்துள்ளது. தொழிலாளர்களின் தொழில்தரம் பற்றிய தென்கொரிய முறைப்பாடுகள் குறிப்பிடத்தக்க அளவு குறைந்தது. தென்கொரியர்கள், இலங்கைத் தொழிலாளர்களை விரும்புகின்றனர். தென் கொரிய அரசாங்கம் தரமான பயிற்சிக்கும், உடல் பலத்திற்கும் இலங்கையை மேற்கோள் காட்டுகிறது.

தென்கொரியாவில் வேலைக்கு ஆட்சேர்க்கும் திட்டத்தில் மோசடி அரசியல் ஆதிக்கத்தினால் இடம்பெறுகிறது. ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் (M.P) தெரிவுப் பட்டியலில் இடம்பெற இருவரைப் பெயர் குறிப்பிட முடியும் ( மாட்டின் 2008) (2008 நவம்பர் 11 டெய்லி மிறா செய்தியின் படி) 25 ஆண்டுகள் யுத்தச் சூழலில் இருந்து விடுபட்டுள்ள கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு 1,000 தொழில்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆனால் முதலமைச்சரின் அங்கீகாரத்துடனேயே தொழிலாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**சட்டவிரோத கொடுப்பனவுகள்**

• அக்ரமின் சகோதரர் முஹம்மத், அந்தப் பகுதி பாராளுமன்ற உறுப்பினருடன் நெருங்கிப் பழகியவர் தென்கொரியத் தொழில்களுக்கு பாராளுமன்ற உறுப்பினரின் தொழிலாளர் நியமனப் பட்டியலில் அக்ரமின் பெயர் சேர்க்கப்பட்டிருந்தது. பாராளுமன்ற உறுப்பினர் இந்தச் சலுகைக்கு பணம் எடுப்பதில்லை. ஆனால் இருவருக்கும் இடையில் செயற்பட்ட ஒருவர் மாகாண சபை அமைச்சரின் சகாவிற்கு, கொடுப்பதற்கென 100,000 ரூபாவை பெற்றார். அக்ரம் உத்தியோகபூர்வ சம்பிரதாயங்களை பூர்த்தி செய்துள்ளார். ஆனால் வேலைக்கு ஆட் சேர்ப்பது தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டதால் தென் கொரியாவிற்குச் செல்லவில்லை. வேலைக்கு ஆட்சேர்த்தல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதும், தம்மால் அங்கு செல்ல முடியும் என்று அவர் நம்பிக்கையுடன் இருக்கிறார்.

• மஹரகமவைச் சேர்ந்த தொழில்நுட்பவியலாளரான காமினி, கொரிய மொழி பாடநெறியைக் கற்றுப் பரீட்சை எழுதி அதில் அவர் சித்தியடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், அவர் நேர்காணலுக்கு அழைக்கப்படவில்லை. பரீட்சைக்குத் தோற்றாதவர்கள் வேலைக்குத் தெரிவு செய்யப்பட்டதாக அறிந்ததும், அவர்கள் பாராளுமன்ற உறுப்பினரினால் நியமிக்கப்பட்டவர்கள் என்று அவர் குற்றம் சாட்டினார். தான் பணம் கொடுத்திருந்தால் வேலைக்குச் சென்றிருக்க முடியும் என்று தனக்கு அறிவிக்கப்பட்டதாக அவர் கூறுகிறார்.

• சமன் என்பவர் தான் 150,000 ரூபாவை செலுத்தியிருந்தால் தென்கொரியாவுக்குச் செல்ல முடியும் என்று ஒரு நண்பர் தெரிவித்ததாகக் கூறினார். அவர் கூட்டுக் கணக்கில் 60,000 ரூபாவை வைப்புச் செய்ததுடன், ஒரு சட்டத்தரணி முன்னிலையில் மேலும் 45,000 ரூபாவைக் கையளித்தார். அவர் மேலும் 8,000 ரூபா செலவிட்டு பிரயாண ஆவணங்ளைப் பெற்று கொரியமொழிப் பயிற்சி நிலையத்தில் சேர்ந்து கொண்டார். அவர் தமது தொழிலையும், இராஜினாமாச் செய்தார். SLBFE பரீட்சைகளை நடத்தியது. ஆனால் அவர் தெரிவு செய்யப்படவில்லை. அது பற்றி வினவியபோது, நண்பர் கூறியதாவது SLBFE யைச் சேர்ந்த திரு.D உதவியுடன் செல்வதால் பரீட்சைக்குத் தோற்றாமலே வெளிநாட்டு வேலைக்குச் செல்ல முடியும் என்று கூறினார். தொழில் கிடைப்பதற்கான அறிகுறி எதுவும் தென்படாததால் திரு. ஐச் சந்திக்கச் சென்றார். ஆனால் SLBFE யில் அவர் இருக்கவில்லை.

* அடையாளம் காணப்படுவதை தடுப்பதற்கென சகல பெயர்களும், மாற்றப்பட்டுள்ளன.

SLBFE உத்தியோகதர்கள், ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களின் கோரிக்கைகளை மறுத்து, பாராளுமன்ற உறுப்பினரால் நியமிக்கப்பட்டவரின் பெயர், பட்டியலில் இருப்பினும் தெரிவு வழிமுறைக்கு அமைவாக உள்ளவர்களே தென்கொரிய வேலை கொள்வோரால் தேர்ந்தெடுக்கப்படுவர் என்பதை நடைமுறை உறுதிப்படுத்துகிறது. தென்கொரிய அதிகாரிகளின் தெரிவுக்கு SLBFEயே தகவல்களை வழங்குவதால், தகவல்களை வேண்டியவாறு மாற்றியமைக்கும் சாத்தியம் இருப்பதாக ஆய்வுக்குட்பட்டோர் கருதுகின்றனர். வேலை கொள்வோரைத் திருப்திப்படுத்துவதற்காவே தெரிவுக்கு கடுமையான வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதாக SLBFE இணையத்தளத்தில் தகவல்களை வெளியிட்டிருப்பதாகவும் ஆனால் உண்மையில் பட்டியலை வேண்டியவாறு மாற்றுவதாகவும்

பொதுமக்கள் கருதுகின்றனர். தகுதியற்ற தொழிலாளர்களின் பெயர்கள் இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பதாக COPE அறிக்கை ( இலங்கைபாராளுமன்றம் 2009a) தெரிவிக்கின்றது. அரசியல்வாதிகளால் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தொழிலாளர்கள் நியமிக்க முடியும். வேலை கிடைக்காமல் போனதற்கு அரசியல் ஆதிக்கமும், மோசடிகளுமே காரணம் என்று வேலை தேடுவோர் தெரிவிப்பார்கள். வேலைவாய்ப்புப் பெறுவதற்கு அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தலாம் என்ற எண்ணமானது SLBFE அமைப்பை சீராக்க மேற்கொள்ளும் முயற்சிகளைத் தாழ்வுபடுத்தி வேலைதேடுபவரை ஏமாற்றுவதற்கு மோசடிக்காரர்களுக்கு வழி வகுக்கும்.

தென்கொரியாவில் வேலைக்கு ஆட்சேர்ப்பதில் மற்றுமொரு மோசடி, விமானப் பயணச் சீட்டைக் கொள்வனவு செய்வதிலும் நிகழ்கிறது. தென்கொரியாவிற்கு ஆட்சேர்ப்பதில் SLBFE வெளிப்படைத் தன்மை இல்லாமை பற்றி COPE கருத்துத் தெரிவிக்கையில் "விமானப் பயணச் சீட்டுக்களுக்காக மேலதிகமாக தொழிலாளர்களிடமிருந்து 74.6 மில்லியன் ரூபா அறவிடப்பட்டதைத் தெரிவிக்கின்றது. கடந்த மூன்று ஆண்டு காலத்தில் இந்த மேலதிகப் பணம் ஒரு நபருக்கு 44,550 ரூபா என்ற விகிதத்தில் பழைய சில்லறைப் பயணச்சீட்டு விலையில் அறவிடப்பட்டு ஆனால் விமானப் போக்குவரத்து நிலையத்தினருடன் பேரம்பேசி குறைந்த விலையே செலுத்தப்பட்டுள்ளது" குறைந்த கட்டண நன்மை தொழிலாளருக்குக் கிடைக்கவில்லை. (இலங்கைபாராளுமன்றம் 2009a) SLBFE மேலதிகத் தொகையை தாமதமின்றித் திருப்பிச் செலுத்தல் வேண்டும் என்று COPE தீர்மானித்துள்ளது.

SLBFE இதற்கு தொழிலாளர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்கு மேலதிகப் பணம் பயன்படுத்தப்படும் என்று பதிலளித்துள்ளது. எனினும் மேலதிகப் பணம் அறவிடுதல், தெளிவாக நெறிமுறையானதல்ல. பணத்திற்கு நிதி வளங்களைக் கண்டு கொள்ள வேண்டியுள்ள தொழிலாளிக்கு கட்டணக் கழிவு கிடைத்திருக்குமானால் கணிசமான நன்மையாகவிருந்திருக்கும். COPE அறிக்கையை அடுத்து தொழிலாளர்களிடமிருந்து SLBFE சரியான கட்டணத்தையே அறவிடுகிறது.

**உத்தரவுப் பத்திரங்கள் வழங்குவதில் ஒழுங்கீனங்களும் வெளிப்படைத் தன்மை இல்லாமையும்.**


அதிகாரச் சட்டத்தின் ஏற்பாட்டுக்கு இணைவான புதுப்பித்தலுடன் பதிவு செய்யப்பட்ட வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களுக்கு ஓராண்டு உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. அதன்கீழ் மேற்கொள்ளப்படும் எவ்வித அதிகாரச் சட்ட ஏற்பாடுகளும் பிரமாணங்களும் கடைப்பிடிக்கப்படாமை, கட்டணம் செலுத்தத் தவறியமை காரணமாக அதிகாரச் சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டிருப்பின் உத்தரவுப் பத்திரம் ரத்துச் செய்யப்படலாம்.

ஊழல் உள்ளிட்ட ஒழுங்கீனங்கள், உத்தரவுப் பத்திரம் வழங்கும் வழிமுறையில் ஏற்படுவதாக பங்கேற்பாளர்கள் கருதுகின்றனர். உத்தரவுப் பத்திரங்களைப் புதுப்பிக்கையில் குறைபாடுகளைக் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாமல் விடுவதற்கு உத்தியோகத்தர்கள் சில சமயங்களில் இலஞ்சம் கோரலாம். ( டி.சில்வா 2009) சட்டத்தை அனுசரிக்காமல் சில வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் தமது உத்தரவுப் பத்திரங்களைப் புதுப்பித்துக் கொள்வதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. 2009 மே மாதம் வரை தேவைப்பட்டதற்கு அமைய சகல உத்தரவுப் பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையங்களும், ALBFE அங்கத்துவத்தைப் பெற்றிருக்கவில்லை. SLBFE "காலாண்டுக்கான வரியைச் செலுத்துவதற்கான காலக்கெடுவைத் தாண்டிய சில வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் உத்தரவுப் பத்திரங்களைப் புதுப்பித்துள்ளதாகக் கணக்காய்வாளர்

நாயகத்தின் 2004ம் ஆண்டுக்கான அறிக்கை தெரிவிக்கின்றது. ( இலங்கைபாராளுமன்றம் n d) இது நிர்வாக அலட்சியம் அல்லது ஊழலாகும். எனினும், அதிகாரச் சட்டத்திற்கான அண்மைய திருத்தப் பிரகாரம் இந்தத் தேவையானது கட்டாயமானதல்ல.

பெயர்கள், முகவரிகள், உத்தரவுப் பத்திர இலக்கங்கள், உத்தரவுப் பத்திரம் செல்லுபடியாகும் காலப்பகுதி உள்ளிட்ட உத்தரவுப் பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையங்கள் பற்றிய தகவல் SLBFE யின் இணையத்தளத்தில் கிடைக்கக் கூடியதாக உள்ளது, என்றும், உத்தரவுப் பத்திரங்கள் நிறுத்தப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்ட நிலையங்களின் பெயர்கள் பட்டியலிடப்படவில்லை. இந்தத் தகவல் வேலை தேடும் தொழிலாளர்களுக்கு பயன் தருவதாகும். ALFEA அதன் இணையத்தளத்தில் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள முகவர்களின் பெயர்களை வெளியிட்டுள்ளது. எனினும், இந்தத் தகவல் பொதுமக்களுக்குக் கிடைக்கக் கூடியதாக இல்லை. இத்தகைய தகவல் கிடைக்கப் பெறாமை முக்கியமானதாகும். ஏனெனில் வேலைக்கு ஆட்சேர்க்கும் வழிமுறையில் ஏமாற்றங்களைத் தவிர்ப்பதற்கு தமக்கு போதிய தகவல் கிடைக்கவில்லை என்பதையிட்டு மதிப்பீட்டுக்கு பதில் அளித்தவர்களில் 47% ஆனவர்கள் பூரணமாக ஒத்துக் கொண்டனர். 32% ஓரளவு ஒப்புதல் தெரிவித்தனர்.

**வரைபடம் 5: வேலை பெறுவதில் தோல்வி கண்டவர்களுக்கு இருந்த தகவல் பெறும் வழிகள**




**நிலுவைகள் மீளப்பெறுதல்**

வேலை வாய்ப்பு முகவர் நிலையங்கள் தொழிலாளர் நலனுக்காக பயன்படுத்தும் வரி பணத்தைச் செலுத்தல் வேண்டும். வரி முகவரினால் (உத்தரவுப் பத்திரம் பெற்ற ) வெளிநாட்டுக்கு அனுப்பப்படும் ஒவ்வொரு நபர் தொடர்பாகவும் பெறப்படும் ஒவ்வொரு கமிஷனுக்கும் 5 சதவீத விகிதமாக வரி கணக்கிடப்படுகிறது.

(டி.சொய்ஸா 2009) வரி பணம் அறவிடப்படாமை பற்றிக் குறிப்பிட்டுள்ள கணக்காய்வாளர் நாயகத்தின் 2007ம் ஆண்டு அறிக்கையில், அந்த ஆண்டில் 9,000,00 ரூபா அறவிடப்பட வேண்டியிருந்ததில் சரியான பற்றுச் சீட்டுக்கள் 6,375,655 ரூபாவுக்கு அல்லது 70.84% மதிப்பீட்டில் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் கணக்காய்வுப் பரிசோதனை ஒன்று, 360

உத்தரவுப் பத்திரம் பெற்ற நிறுவனங்களில், 173, வரிப் பணத்தை செலுத்தவில்லை என்று புலப்படுத்துகிறது இலங்கைப் பாராளுமன்றம் 2008) செஸ் வருமானத்தை மீளப் பெற முடியாமை, வெளிநாட்டில் வேலை பார்க்கச் செல்வோருக்கான மேம்பாடான நலன்புரி நன்மைகளையும் நிவாரணத்தையும் இல்லாமல் செய்கிறது. 2009ம் ஆண்டுத் திருத்தம் இந்தப் பிரச்சினையை இவ்வாறு அணுகுகிறது. மீள்வரவில் வெளியிடப்பட்டுள்ள தொகை நியாயமற்றதாகவும், கமிஷனாகப் பெறப்பட வேண்டிய தொகைக்குக் குறைவானதாகவும் இருக்குமானால், கமிஷன் அமைச்சரால் நிர்ணயித்த தொகையாக இருக்கும் (இலங்கைபாராளுமன்றம் 2009 b)

ALFEA யின் பிரகாரம், உத்தரவுப் பத்திரம் பெற்ற ஒரு முகவர் வேலைக்குச் சேர்க்கப்படும் ஒவ்வொரு வீட்டுப் பணியாளரிடம் இருந்தும் 1,000 – 1,400 அமெரிக்க டொலர்களை செலவாகவும் கமிஷனாகவும் பெறுகிறார். வேறு சிலர், வேலைக்கு ஆட்சேர்க்கும் செலவு உள்ளிட்ட கட்டணமாக ஒரு தொழிலாளிக்கு 800 அமெரிக்க டொலர்களைப் பெறுகின்றனர். 2008 இல், 108,709 வீட்டுப் பணியாளர்கள் வெளிநாடு சென்றனர். தொழிலாளி ஒருவருக்கு 800 அமெரிக்க டொலர் என்று குறைவான மதிப்பீடாக இருப்பினும் உத்தரவுப் பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் கணிசமான தொகையைப் பெற்றுள்ளன. மத்திய வங்கி உத்தரவுப் பத்திரம் பெற்ற வெளிநாட்டு முகவர் நிலையங்களுக்கு வதிவோரற்ற வெளிநாட்டு நாணயமாற்று நாணய (NRFC) கணக்கைத் திறப்பதற்கு, விசேட அனுமதி வழங்கியுள்ளது. முகவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். கட்டணம் அவர்களுக்குக் கிடைக்கும் மொத்தத் தனிப்பட்ட வருகைப் பணத்தின் ஒரு பகுதியாக அமையும் என்றும் தனிப்பட்ட அது கணிக்கப் படமாட்டாது என்றும் ஒரு சிரேஷ்ட வங்கி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். எனினும் ALBFEA அல்லது SLBFE யினால் சகல முகவர்கள் நிலையங்களும் NRFC கணக்கு வைத்துள்ளனவா என்பது பற்றிக் கூற முடியவில்லை. SLBFE யின் வருடாந்த புள்ளி விபர அறிக்கை உள்ளிட்ட பொது ஆவணங்கள் எதிலும் உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர் நிலையங்களுக்கு கிடைக்கப் பெற்ற தொகை பற்றிய தகவல் இல்லை. அனைத்து பணமும் நாட்டிற்குள் வெளிநாட்டு நாணயமாற்றுக் கட்டுப்பாட்டுப் பிரமாாணங்களை மீறி கொண்டுவரப்படுவதில்லை என்று ALBFEA சாடையாகக் கூறியுள்ளது. இந்த அம்சம் பற்றி மேலும் ஆராயப்பட வேண்டியுள்ளது.

## 4.2 SLFEA

SLFEA இற்குப் பூரண சொந்தமான உப நிறுவனமான SLFEA க்கு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் 1996 இல், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு ஆட்சேர்ப்பதற்கான உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்டது. எனினும், ஆட்சேர்க்கும் ஏஜென்ஸி உரிமையை இது கொண்டிருப்பது SLFEA இன் ஒழுங்குறுத்தல் செயற்பாட்டைப் பாதிக்குமாதலால் இது பிரச்சினைக்குரியதாகலாம்.

SLFEA ஒரு மாதிரி வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு ஆட்சேர்க்கும் ஏஜென்சியாக செயற்படுவதற்கு நிறுவப்பட்டுள்ளது. அதன் தற்போதைய ஆட்சேர்ப்பு, தேர்ச்சிபெற்ற மற்றும் ஓரளவு தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களை வேலைக்குச் சேர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எனினும், தொழில்கள் கிடைக்கப்பெறுகையில், ஏனைய தரங்களிலும் அது வேலைக்கு ஆட்களைச் சேர்த்து வருகிறது. வெற்றிடங்கள் அச்சு அல்லது இலத்திரனியல் ஊடகம் அல்லது வாய்மொழியாக விளம்பரப்படுத்தப்படுகிறது. பேட்டி காணப்பட்ட ஒரு SLFEA

உத்தியோகத்தரின் கருத்துப்படி அந்த அமைப்பு SLFEA யின் உப நிலையமாக இருப்பதனால் அதிக இசைவுத் தன்மை இல்லாமல் பிரமாணங்களை கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. உத்தரவுப் பத்திரம் பெற்ற ஏஜென்ஸி என்ற முறையில் SLBFEA அதிகாரச் சட்டத்தினால் வகுக்கப்பட்டுள்ள நடைமுறைகளையும், SLFEA இன் பிரமாணங்களையும் கடைப்பிடிக்கின்றது. 2008 இல் SLFEA 550 தொழிலாளர்களை வேலைக்குத் திரட்டியது (SLFEA - 2009) 2007 இல் முடிவடைந்த ஆண்டில் வரிக்கு முந்திய இலாபமாக அதன் நடவடிக்கைகள் மூலம் 3.9 மில்லியன் பெறப்பட்டது. (இலங்கை பாராளுமன்றம் 2008)

ஒழுங்குறுத்துபவராகவும், அமுல்படுத்துபவராகவும் SLFEA யின் பங்கானது, கொரியாவுக்கு ஆட்சேர்ப்பதில் நிகழ்ந்தது போன்று நலன்களில் முரண்பட்டிருக்கும் ஊழல் பற்றிய பொதுமக்களின் எண்ணத்திற்கும் இட்டு செல்லக்கூடும். உதாரணமாக SLFEA அதிரரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டதைப் பார்க்கிலும் அடிக்கடி மேலதிக கட்டணத்தை அறவிட்டதுடன், ஒரு அமைச்சரின் தேர்தல் தொகுதியில் விண்ணப்பித்தோருக்கு சலுகை வழங்கப்பட்டது. நடைமுறைகள் வகுக்கப்பட்டுள்ள போதிலும், வேலைக்கு ஆட்சேர்ப்பதில் அரசியல் வாதிகளின் ஆதிக்கம் இருப்பதாகவே அறிவிக்கப்படுகிறது.

அரசியல் தலையீடு, ஊழல் ஆகிய குற்றச்சாட்டுக்கள் SLFEA ஊழியர்களாலும் செய்யப்பட்டுள்ளன. (விஜயவர்த்தன , சு, 2009 சண்டே ரைம்ஸ் 2009)

**SLFEA மீதான ஊழல் குற்றச்சாட்டு**

பன்னிரண்டு SLFEA உறுப்பினர்களால் அவர்கள் தொழில் நீக்கம் செய்யப்பட்டது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் மனுவிலும், பல மோசடிகள் பற்றி மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. இந்த ஊழியர்கள் SLFEA நிதியை துஷ்பிரயோகம் செய்ததாக பொறுப்பாகவிருந்த அமைச்சர் மற்றும் சிலர் மீது குற்றம் சுமத்தியுள்ளனர். உயர் நீதிமன்றம், மனுதாரர்கள்,விடுமுறை வழங்குவதற்கு தகுந்த காரணம் காண்பிக்கவில்லை என்று விடுமுறையை நிராகரித்துவிட்டது. மனுதார்கள் மோசடி நடவடிக்கைகள் குறித்து இலஞ்ச ஆணைக்குழுவிற்கும் முறைப்பாடு செய்துள்ளனர். இந்த முறைப்பாடு குறித்து உயர் நீதிமன்றம், இலஞ்ச ஆணைக்குழு தகுந்த நடவடிக்கை எடுத்து தமது விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து மனுதாரருக்கு அறிவிக்கும் என நம்புவதாகத் தெரிவித்தது (SC/FR No: 660/09 SCM . 09.10.2009)

## 4.3 உத்தரவுப் பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு ஆட்திரட்டும் முகவர் நிலையங்கள்

இலங்கையில், SLBFE யிடமிருந்து உத்தரவுப்பத்திரம் பெற்றே, வெளிநாட்டில் தொழில்களுக்கு ஆட்களைச் சேர்க்க இயலும் - ஆட்சேர்ப்பவர்களுக்கான பிரமாணங்கள் மோசடி, துஷ்பிரயோகம் என்பனவற்றை நீக்கி, தொழிலாளர்கள் ஆட்சேர்ப்பதற்கு செலுத்தும் செலவுகளைக் கட்டுப்பாட்டில் வைத்து, அவர்கள் செல்லும் இடங்களில் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளன.

தனிநபர் அல்லது கம்பனி, சில நிபந்தனைகளை பூர்த்தி செய்வதன் மூலம் உத்தரவுப் பத்திரத்தைப் பெற முடியும் உத்தரவுப் பத்திரம் பெற விரும்புபவர் இலங்கையராக இருத்தல் வேண்டும், அது ஒரு கம்பனியானால், பெரும்பான்மையான பங்குகளை ஒரு இலங்கையர்

அதில் கொண்டிருத்தல் வேண்டும். பொறுப்பாக இருப்பவர், நன்மதிப்புள்ளவராக ஏஜென்ஸி நடத்தவதற்கு உகந்த இடத்தை வைத்திருப்பவராக நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தி வர்த்தகத்தை தார்மீகமான கண்டிக்கத்தகாத முறையில் நடத்துபவராகவும், எந்த நிதிக் கோரிக்கையையும் பூர்த்தி செய்யத் தக்க 750,000 ரூபா வங்கி உத்தரவாதம் தரத்தக்கவராகவும் இருத்தல் வேண்டும். 2009 ஒக்டோபர் முதல் உத்தரவுப் பத்திரம் வைத்திருப்பவருக்கு, மற்றுமொரு, உத்தரவுப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. ALBFEA உறுப்புரிமையைக் கொண்டிருப்பதற்கான சட்டபூர்வ தேவை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 2009 ம் ஆண்டு அதிகாரச் சட்டம் (திருத்தம்) இல 56 மூலம் நீக்கப்பட்டுள்ளது.

புலம்பெயரும் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் அபாயங்களைப் பார்க்கும்போது, உத்தரவுப் பத்திரம் பெறுவதற்கான இந்த நிபந்தனைகள், ஏஜென்சிகளின் நேர்மைத் திறனை உறுதிப்படுத்தப்படுதல் போதுமானதாக இல்லை என்றே தோன்றுகிறது. 2009 திருத்தமானது, விண்ணப்பதாரிகளுக்கு உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டதைக் காண்பிக்கின்றது. உத்தரவுப்பத்திரம் வழங்குவதற்கான கட்டளை விதிப் பிரகாரம் வர்த்தக நிறுவனங்கள் மீது உரிமைக் கட்டளையுள்ள ஏனைய அரசாங்க ஏஜென்ஸிகளுடன் பதிவு செய்ய வேண்டியதில்லை. 2008 ஆம் ஆண்டில் 100க்கும் மேலான தொழிலாளர்களை வேலைக்குச் சேர்த்த 321 உத்தரவுப் பத்திரம் பெற்ற ஏஜென்ஸிகளில் 121 மாத்திரமே கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் நிதிக்குப் பொறுப்புக் கூறும் வரையறுக்கப்பட்ட உத்தரவாதக் கம்பனிகளாகும். (SLBFE 2009) ஏனையவை தனிப்பட்ட உரிமையாளர்களினால் அல்லது கடும் நிதிப் பொறுப்பு இல்லாத பங்காளிகளால் நடத்தப்படுகின்றன. இந்தக் கவனக் குறைவு மோசடிக்கும், ஊழலுக்கும் நுளைவாயிலை ஏற்படுத்த தெளிவாக வகை செய்துள்ளது.

அத்துடன் தொழில் திணைக்களம் அதிகாரச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் 1980 முடிவு வரை 558 உத்தரவுப் பத்திரங்களை வழங்கியுள்ள போதிலும் (டி சொய்ஸா 2009) தொழிலில் அமர்த்தல், சந்தைப்படுத்தும் திறமைகள், ஒரு வியாபாரத்தை முகாமை செய்தல் அல்லது நிதியை ஸ்திரப்படுத்தல் என்பவற்றில் ஆகக்குறைந்த கல்வித் தகைமையும் அனுபவமும் கோரப்படவில்லை. ALFEA யின் கருத்துப்படி 70% ஏஜென்ஸிகள் வியாபார முகாமைத்துவம் சந்தைப்படுத்தும் திறன்கள், ஏஜென்ஸி அலுவலகம் ஒவ்வொன்றும் ஒரு கணனியைக் கொண்டிருத்தல் வேண்டும் என்ற தேவை இருப்பினும் கணனித் தொழில் நுட்பத்தைப் பிரயோகித்து தொடர்பாடலை மேற்கொள்ளும் அடிப்படைத் திறன் என்பன இல்லாத வெளிநாடுகளில் முன்னர் பணிபுரிந்த தொழிலாளர்களினாலேயே முகாமைத்துவம் செய்யப்படுகின்றன அல்லது உரிமையாக உள்ளன. உத்தரவுப் பத்திரம் பெற்றோரின் கேவலமான நிலைக்கு இந்தக் குணாதிசயங்கள் ஓரளவு காரணமாகவுள்ளன.

வேலைக்கு ஆட்சேர்க்கும் வழிமுறை வெளிநாட்டு முகவர்களால் குறிப்பிட்ட இலங்கை வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு சமர்ப்பிக்கப்படும் தொழில் கட்டளைகளுடன் ஆரம்பமாகின்றது. தூதரங்கள் இவற்றை சரிபார்த்து உறுதிப்படுத்துகின்றன. இந்த தொழில் கட்டளைகளை பின்னர் இலங்கையில் ஆகக்கூடியது மூன்று முகவர்களுக்கு அனுப்பப்படுகின்றன. அதன் பின்னர் அவர்கள் ஆட்சேர்ப்பது தொடர்பான நடவடிக்கைகளை ஆரம்பிக்கின்றனர்.

ஒரு முகவர் நிலையத்தினால் (ஏஜென்ஸியினால்) தொழிலாளர்கள் வேலைக்குச் சேர்க்கப்படுகையில் எடுக்கப்படும் நடவடிக்கைகள்

1. ஒரு முகவர் நிலையத்திற்கு (ஏஜென்ஸிக்கு) வெளிநாட்டு முகவர் நிலையத்திடமிருந்து (ஏஜென்ஸியிடமிருந்து) தொழில் கட்டளை கிடைத்ததும், அது வெற்றிடங்களை நிரப்புவதற்கான நபர்களை வேலைகளில் சேர்ப்பதற்கு முதலில் SLBFE யிடமிருந்து அனுமதியைக் கோருகின்றது.

2. அதன் பின்னர் விளம்பரங்கள், உப முகவர்கள் மற்றும் வாய்மொழி மூலமாக அது தொழிலாளர்களைத் தேடி விண்ணப்பதாரிகளை நேர்காணல் செய்கிறது. வர்த்தகப் பரீட்சைகள் (வேண்டுகோளிருப்பின்) தகுதி காரணமாக முன்னரே தெரிவு செய்யப்பட்ட சுதந்திர அமைப்புகள் மூலம் நடத்தப்பட்டு, சான்றிதழ்கள் வழங்கப்படலாம். SLBFE யின் அங்கீகாரம் இல்லாமல், மக்களுக்கு வெற்றிடங்கள் பற்றி அறிவித்து ஆட்களைச் சேர்ப்பது தடை செய்யப்பட்டுள்ளது. பிரசுரிப்பவர்கள் SLBFE யினால் விளம்பரங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதை சரி பார்த்தல் வேண்டும்.

3. தெரிவு செய்யப்படின், முகவர் நிலையம் (ஏஜென்ஸி), தொழிலாளரிகள் கடவுச் சீட்டைக் கோரும், தொழிலாளிக்குக் கடவுச் சீட்டு இல்லையெனின் அவன் / அவள் அதனைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்கப்படுவார் அல்லது ஏஜென்ஸி ஒரு கட்டணத்திற்கு அதனைப் பெற்றுத் தருவதற்கு முன்வரும்

4. தொழிலாளி தேவையேற்படுமிடத்து, நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு பயிற்சி பெறல் வேண்டும்

5. அவன்/அவள் அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவை ஏஜென்ஸிக்கு வழங்குவார்.

6. தொழிலாளி அவன் / அவள் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் தகுதியாக உள்ளாரா? என்பதைத் தீர்மானிப்பதற்கு மருத்துவ சோதனைக்கு உட்படல் வேண்டும்.

7. பொலிஸாரிடமிருந்து பின்னணி பற்றிய சோதணை கோரப்படும்

8. உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர், கடவுச் சீட்டு, செல்லுபடியாகும் விஸா, கையொப்பமிடப்பட்ட தொழில் ஒப்பந்தம் (மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் வீட்டுப் பணிப்பெண்களுக்கான தொழில் ஒப்பந்தங்களில் வெளிநாட்டு முகவரின், அனுசரணையாளரின், தூதரக அதிகாரியின், உள்ளூர் முகவரின் வெளிநாட்டு வேலைக்குச் செல்லும் தொழிலாளி ஆகியோர் கையொப்பங்கள்) தேவையானவிடத்து பயிற்சிச் சான்றிதழ், தகுந்த முதலாவது அங்கீகாரத்தின் பிரதி பதிவுக் கட்டணக் கொடுப்பனவுக்கான பற்றுச் சீட்டுக்கள் என்பவற்றை சமர்ப்பித்து வேலைக்குச் சேர்ப்பதற்கான இறுதி அங்கீகாரத்திற்கு விண்ணப்பிப்பார்.

9. SLBFE யின் பதிவு முத்திரை, செல்லுபடியாகும் விஸா, விமானப் பயணச் சீட்டு, வங்கித் துண்டின் தொழில் உடன்படிக்கை வாடிக்கையாளர் பிரதி காப்புறுதிப் பத்திரம் என்பன தொழிலாளர்களிடம் கையளிக்கப்படுகின்றன. தென்கொரியாவுக்கு வேலைக்கு செல்வோர் ஜப்பானுக்கு பயிற்சிக்கு செல்வோர், மற்றும் கடற்றொழிக்குச் செல்வோர் ஆகியோருக்கு வெவ்வேறான ஆட்சேர்த்தல் நடைமுறையுள்ளது.

**ஊப முகவர்கள்**

சில உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர் நிலையங்களுக்கே வெளியிடங்களில் கிளை அலுவலகங்கள் இருப்பதால், மற்றுமொரு ஊழல் அபாயம் ஏற்படுகிறது. 60 சதவீதமானவை, பாரிய கொழும்புப் பிரதேசத்தில் அமைந்துள்ளன. தொடர்ந்து 12% குருநாகல் மாவட்டத்தில் 7% கம்பஹா மாவட்டத்தில் (SLFEA, 2009) வெளிநாடுகளில் தொழிலாளருக்கு அமர்த்த தொழிலாளர்களை தேடுவதற்கு உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர் நிலையங்கள் உப முகவர்களில் (தரகர்கள்/MiddleMan) ஆகியோரில் தங்கியுள்ளனர். சில ஏஜென்ஸிகள் விளம்பரம் மூலம் உப முகவர்களை அமர்த்தி, ஒரு பதிவேட்டைப் பேணுகின்றனர். ஏனையோர், அவர்களுடன் செயற்பாட்டு உறவுகளை வைத்திருப்பார்கள். சில சமயங்களில் உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர், தொழிலாளர்களைத் தேடுவதற்கு முயற்சி செய்யும், 50 உப முகவர்களை வைத்திருப்பார்கள். நாட்டில் மதிப்பீடாக 10,000 திலிருந்து 20,000 வரையிலான உப முகவர்கள் உள்ளனர். (மாட்டின் 2008) இவர்கள் உத்தரவுப் பத்திரம் பெற்ற, மற்றும் உத்தரவுப் பத்திரம் பெறாத முகவர்களுக்காக அவர்களுக்கும், வேலை தேடுவோருக்கும் இடையில் இரு வழி மார்க்கங்களாகச் செயற்படுகின்றனர். அவர்கள் செயற்படும் விதம் என்னவெனில், ஒரு கிராமத்துக்குச் சென்று முக்கியமாக வேலையற்றிருப்பவர்களுக்கும் மயக்கவென, ஏழையாக வெளிநாடு சென்று பணக்காரரானவர்கள் பற்றிய கதைகளைச் சொல்லி மயக்குவதாகும். (இலங்காதீப – 2009) உப முகவர்கள் சேர்க்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை பற்றிய தகவல்கள் இல்லை. ஏனெனில், அவர்களுக்கு வேலைக்கு ஆட்சேர்க்கும் வழிமுறையில் உத்தியோகபூர்வ அங்கீகாரம் இல்லாதிருப்பதாகும். எமது ஆய்வில் பதிலளித்த 17% மானோர், வேலை தேடுவதற்கு உப முகவர்களை பயன்படுத்தி, அல்லது பயன்படுத்த முற்படுபவர்களாகவே உள்ளனர்.

உப முகவர்கள், முக்கியமாக முன் அனுபவம் இல்லாத, சில வேலைகளில், கிராமத்தை விட்டு வெளியே செல்லாதவர்களாக, நடைமுறைகள் பற்றித் தெரியாதவர்களாக உள்ள வேலை தேடுவோருக்கு உதவுபவர்களாக கருதப்படுகின்றனர். உப முகவர், எழுத்து வேலைகளைப் பூர்த்தி செய்து உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர்களிடமும் SLBFE யிடமும் சென்று, கொந்தராத்தில் கைச்சாத்திடுவதற்கு வேலை பெறவிருக்கும், தொழிலாளியுடன் செல்வார் உண்மையில் உப முகவர்கள் சமூகத்தில் பரிச்சயமானவர்களாக பெரும்பாலும் பயனுள்ள கடமையைச் செய்பவர்களாக உள்ளனர். (கம்பேர்ட் 2002)

உப முகவர்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழிமுறையில் உத்தியோகபூர்வ பங்கேற்று செயற்படுகிறார்கள், இதனால் ஒழுங்குறுத்தல் அதிகாரபீடத்திற்கு அவர்கள் பொறுப்புக்கூற வேண்டியதில்லை. சட்டப்பிரகாரம் உப முகவரின் சேவை பெறப்படினும், முகவரே அவனது/அவளின் நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக்கப்படுகிறார். உப முகவர்களைப் பயன்படுத்துவதில் ஊழல் அபாயங்கள், ஏற்படுவது சட்டபூர்வமற்ற தன்மையினால் அல்லாது, உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர்கள் அவனது/அவளது தவறுக்குப் பொறுப்பை ஏற்காததனாலேயாகும்.

**உப முகவராகச் சேர்க்கப்பட்டவர்**

ட்ரரான்ஸ் கல்ப் ஏஜென்ஸியினால் உப முகவர்கள் கோரிச் செய்யப்பட்ட விளம்பரத்திற்குப் பதிலளித்த, வெளிநாட்டில் முன்னாளில் வேலைபார்த்த ஒரு தொழிலாளியான முனிதாஸ, தெரிவு செய்யப்பட்டு 10 ஆண்டுகளுக்கும் கூடுதலாக வேலை பார்த்து ஆண்டு தோறும் 900,000 ரூபாவை வருமானமாகப் பெற்றார் - அவரது தகவல் பிரகாரம், இந்த ஏஜென்ஸிக்கு 400க்கும் கூடுதலான உப முகவர்கள் தொழிலாளர்களை வழங்கின. அது 2007ம் ஆண்டில் 2175 பேருக்கு வேலை வாய்ப்புக் கொடுத்த பாரிய ஏஜென்ஸிகளில் ஒன்றாகும் என்று SLFEA தரவு புலப்படுத்துகின்றது.

தேசிய தொழில் புலம்பெயர்வுக் கொள்கை, உப முகவர்கள், மூலம் ஆட்கள் சேர்க்கப்படுவதனால் எழும் அபாயங்களை எடுத்துக் கூறியுள்ளது. (இலுங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு நலன்புரி அமைச்சு 2009) முகவரிடமிருந்து கமிஷன் கிடைக்கின்றபோதிலும், தொழிலாளரிடமிருந்து பணம் அறவிடப்பட்டமை, கொடுப்பனவுகளுக்கு பற்றுச் சீட்டு வழங்கப்படாமை, நாடு தொழில் வகை, வேலை நிலைமைகள் என்பவற்றைத் தொழிலாளியிடமிருந்து மறைத்தமை என்பன உள்ளடக்கப்படுகின்றன. வீட்டு வேலைக்கு இலங்கையருக்கான பெரும் கிராக்கி, சம்பாதிக்கத் தக்க பாரிய கமிஷன் தொகை என்பன, உப-முகவர் பங்கை பெரிதும் கவர்கின்றது. வேலைக்குச் சேர்க்கப்படும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர் நிலையங்கள் உப முகவருக்கு கமிஷன் வழங்குகின்றன. தனது அங்கத்தவர்களைப் பாதுகாக்கவென 2008 இல் ALFEA ஒரு வீட்டுப் பணியாளரை வேலைக்கு அமர்த்துவதற்கு 30,000 ரூபா கமிஷனுக்கான வரையறையாக நிர்ணயித்தது. ஏனைய தொழிலாளர்களுக்கான கமிஷன் கொடுப்பனவு வேறுபடுகிறது. மோசடி முகவர்கள், உப முகவர்களை சட்டவிரோத ஆட்சேர்த்தலுக்குப் பயன்படுத்துகின்றனர். (பெறெஞ்சர் அனட் கிரிந்தெ 2008) முகவர் நிலையங்களிடமிருந்து உப முகவர்கள் கணிசமான கமிஷனைப் பெறுகின்ற போதிலும், அவர்களும் பணத்தை, பொருட்களை அல்லது சலுகைகளை தொழிலாளர்களிடமிருந்து சூறையாடுவதாக குற்றச் சாட்டுக்கள் உள்ளன. வடமத்திய மாணத்தில் உப முகவர்கள், வேலை பார்க்கச் செல்ல இருப்பவர்களிடமிருந்து நெற் தொகுதியை சந்தை விலையிலிருந்து குறைவாகப் பெற்றதாக மதிப்பீடு ஒன்றிலிருந்து தெரிகிறது.

அண்மையில், ALFEA தவறிழைக்கும் உப முகவர்களை கறுப்புப் பட்டியலிடத் தொடங்கியுள்ளது. அதன் அங்கத்தவர்கள் உப முகவர்களுக்கு செலுத்த வேண்டிய கமிஷன் தொடர்பாகவும் நடவடிக்கை எடுத்து வருகிறது. பொறுப்பற்ற, ஊழல் வாய்ந்த உப முகவர்களிடமிருந்து ஏற்படும் துஷ்பிரயோக, ஊழல் அபாயங்களைக் குறைப்பதற்கென மேலும் காத்திரமான நடவடிக்கைகளை ஒழுங்குறுத்துபவர்களும், தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களும் எடுக்க வேண்டியுள்ளது.

**ஒரு உப முகவரினால் ஏமாற்றப்படுதல்**

சமந்தா வெளிநாட்டுக்கு வேலை பார்க்கச் செல்லத் திட்டமிடுகையில், மாத்தளை மாவட்டத்தில் உள்ள அம்பத்தனை, களுவானையில் உள்ள உப முகவரிடம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். கடவுச் சீட்டுக்கும் வைத்திய பரிசோதனைக்கும் அவர் 10,000 ரூபா செலுத்துவரானால் மூன்று மாதங்களுக்கும் டுபாயில் வேலை பெற்றுத் தருவதாக முகவர் உறுதியளித்திருந்தார். உப முகவரின் கட்டணம் 75,000 ரூபா. சமந்த 2007 இல் 15,000 ரூபாவை முற்பணமாகச் செலுத்தினார். ஆறுமாதங்கள் கழிந்த பின்னரும் அவருக்கு வேலை கிடைக்கவில்லை. உப முகவர் நாட்டை விட்டுச் சென்றுவிட்டதாக அவர் அறிந்தார்.

**இரண்டாவது தடவையும் துரதிஷ்டம்**

துஷார வெளிநாட்டுக்கு தொழில் பார்க்கச் செல்வதற்கு இரண்டு தடவைகள் முயற்சி செய்து தோல்வி கண்டார். முதலில் உப முகவர் குமார என்பவரைச் சந்தித்து இத்தாலிக்குப் புலம்பெயர்வதற்கென அது சட்ட விரோதம் என்று தெரிந்தும் 250,000 ரூபாவை செலுத்தியிருந்தார். வென்னப்புவவில் மீன் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த குமார மீன்பிடிப் படகுகளில் தொழிலாளர்களை ஏற்றி இத்தாலிக்கு அனுப்பி வந்தார். இந்தச் சந்தர்ப்பத்திலும் 14 பேரைக் கள்ளமாக அனுப்ப ஏற்பாடு செய்தார். படகு ஓரிரவு புறப்பட்டது. ஆனால் வழிகாட்டிப் படகிலிருந்து கிடைத்த சமிக்ஞையை அடுத்து கரைக்குத் திரும்பியது. இத்தாலிக்கு செல்வது சட்ட விரோதமானதாலும், அவரிடம் நிரூபிப்பதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லாமையினாலும் பணத்தைத் திரும்பப்பெறும் முயற்சியில் துஷார தோல்வி கண்டார். இத்தாலியில் சம்பளம் அதிகமாக உள்ளது. ஆனால் அங்கு சட்டபூர்வமாகச் செல்ல இயலவில்லை. அதனால் நாம் இந்த வழிகளைப் பயன்படுத்தினோம். என்று அவர் கூறுகிறார்.

## 4.4 வேலை வாய்ப்புப் பெறச் செல்லும் நாடுகளில் தொழிலுக்காக ஆட்சேர்ப்போர்.

வெளிநாட்டில் வேலை தேடும் இலங்கையர்களுக்கு உள்ளூர் உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர் நிலையங்கள் அந்த நாடுகளில் உள்ள வேலைக்கு ஆட்சேர்ப்பவர்களுடன் சேர்ந்து செயற்படுகின்றன. பெரும்பான்மையான இலங்கையர்கள் வேலை தேடிச் செல்லும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள வேலைக்கு ஆட்சேர்க்கும் முகவர் நிலையங்கள் சிங்கப்பூர், கொங்ஹொங், சைப்பரஸ் போன்ற நாடுகளில் போலல்லாது மனப்பாங்கு கூடுதலாக உள்ளனவாகவும், கடும் மேற்பார்வை இல்லாதனவாகவும் செயற்படுகின்றன. (மனித உரிமைகள் கண்காணிப்பு, 2009) குவைத்தில் பல வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் குவைத் உரிமையாளர்களின் சார்பில் இலங்கையர்களால் நடத்தப்படுகின்றன. (டெய்லி மிறர், 2009) அண்மைக் காலத்தில், சிரியா, லெபனான், பஹ்ரெயின் போன்ற பல மத்திய கிழக்கு நாடுகள் வேலை வாய்ப்புக்கு ஆட்சேர்ப்பவர்களை ஒழுங்குறுத்துவதற்கு சட்ட சீர் திருத்தங்களை கொண்டு வந்துள்ளன. ( சல்ல பாங், 2007 மத்திய கிழக்கு ஒன்லைன், 2009) ஆனால் இன்னமும் மோசடி நடவடிக்கைகள் மிகக் கூடுதலாக இருக்கின்றன. (ஒல்வான் 2008)

இந்த மோசடி நடவடிக்கைகளில், வீட்டுப் பணியாளர்களுக்கு முதல் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கான சம்பளங்கள் வழங்கப்பட்டமை, குறைந்த சம்பளக் கொடுப்பனவு, சம்பளம் வழங்கப்படாமை (எல்லப்பொல, 2008) வேலை கொள்வோரிடமிருந்தும் இலங்கைமுகவரிடம் இருந்தும் ஒரு கட்டணம் அறவிடுதல். வந்து சேர்ந்தபொழுது தொழிலாளருடன் தொடர்பு கொள்ளாதிருத்தல், தொழிலாளியை இலங்கைத் தூதரகத்தில் பதிவு செய்து கொள்வதற்கு

அழைத்துச் செல்லாமை, இலங்கையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கைக்குப் பதிலாக தாழ்வான விதிகளிலும், நிபந்தனைகளிலும் அமைந்த ஒப்பந்தத்தை வழங்கல் (SLBFE , 2009 சமத், 2008b) என்பன உள்ளடங்கும் ஒப்பந்தங்கள் தொழிலாளருக்குப் புரியாத அரபு, கிரேக்கம் அல்லது இத்தாலிய மொழி போன்ற வெளிநாட்டு மொழிகளில் இருப்பதாக ஒரு மதிப்பீடு புலப்படுத்துகிறது. சில வேலை கொள்வோர், தொழிலாளர்களை ஏமாற்றிப் பணப் பறிப்பவர்களில் ஒரு பகுதியாக உள்ளனர். உதாரணமாக மத்திய கிழக்கு நாடுகளில், சகல வெளிநாட்டவர்களும் வேலைக்கு அமர்த்தப்படும் அனுசரணை அமைப்பு வேலை கொள்வோர் மோசடிகளில் ஈடுபடுவதற்கு உதவுகின்றது. (அத்தியாயம் 1990) எனினும், பஹ்றெயின் போன்ற நாடுகள் இந்த அமைப்புக்கு தடை விதிப்பதாக அறிவிக்கப்படுகின்றது. ( மனித உரிமைகளுக்கான பஹ்றெயின் மையம் - 2009) சில வேலை கொள்வோர், உதவியாளர்கள், காவலர்கள், தோட்டக்காரர்கள், போன்றவர்களை வேலைக்குச் சேர்ப்பதற்கு எட்டு தொழில் விசாக்கள் வரை கேட்கலாம் என்றும் தமக்குத் தேவையான எண்ணிக்கையானோரை வேலைக்கு அமர்த்துவதுடன் மேலதிகமான உள்ளதை விற்கவும் கூடிய “விஸா வர்த்தகர்களாக”. உள்ளனர்.

அநேகமான மத்திய கிழக்கு நாடுகளும், சிங்கபூரும், வேலை கொள்வோர், தொழிலாளர்களுக்கு, கடவுச்சீட்டு, விசா பயணச் செலவு என்பவற்றை வழங்கும் தேவை உள்ளது. ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள சட்டங்களின்படி முகவர் நிலையங்கள், வேலை கொள்வோரிடமிருந்து கட்டணத்தை அறவிட முடியும். தொழிலாளர்களிடமிருந்து கட்டணம் அறவிடுவது தடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தச் சட்டம் கடுமையாக அமுல் செய்யப்படுவதில்லை. சவூதி அரேபியாவில் வேலைக்கு ஆட் சேர்ப்போரில் சிலர் வேலை கொள்வோர் செலுத்த வேண்டிய கட்டணத்தில் பெரும்பகுதியை தாமே வைத்துள்ளனர். உள்ளூர் முகவர்கள் பயண மற்றும் செலவுகளை தொழிலாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்கிறார்கள் என்பதே இதன் அர்த்தமாகும். (புலம்பெயர் தொழிலாளர் செய்தி 2008) சிங்கப்பூரில் மனித உரிமைகள் கண்காணிப்பு அறிக்கை 2009 பிரகாரம் அரசாங்கம், ஒழுங்கு நெறியற்ற நடவடிக்கைகளுக்கு, சுரண்டல் மேற்கொள்ளும் வேலைக்கு ஆட்சேர்க்கும் முகவர் நிலையங்களை ஒழுங்குறுத்துவதற்கு தவறியுள்ளதாகத் தெரிகிறது.

தொழிலாளர்களையும், முகவர் நிலையங்களையும் பாதுகாக்கும் முயற்சியில் வெளிநாட்டுத் தூதரகங்களும் (டெய்லி மிறர் 2008) SLBFE யும் ALFEA யும் வேலை வழங்கும் நாடுகளில் கற்பழித்தல், சம்பளம் வழங்காமை, துஷ்பிரயோகம், ஒப்பந்தக் கடப்படுகளை அவமதித்தல் என்பவற்றை மேற்கொள்ளும் மத்திய கிழக்கு நாட்டு அனுசரணையாளர்களின் பட்டியலைத் தொகுத்து கறுப்புப் பட்டியலில் சேர்த்துள்ளன. ஊழல் அபாயங்களை வெகுவாகக் குறைக்கக்கூடிய இந்தத் தகவல், முன்னர் குறிப்பிட்டது போன்று, பொது மக்களுக்குக் கிடைக்கக்கூடியதாக இல்லை என்பது கவலைக்குரியது.

## 4.5 ALFEA - உத்தரவுப் பத்திரம் உள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் சங்கம்

வேலைக்காகப் புலம் பெயர்தலை பரிபாலனம் செய்வதில் முக்கிய பங்கு வகிக்கும் ALFEA சட்டபூர்வ அமைப்பாகும். அதன் அங்கத்துவம் 2009 ஒக்டோபரில் அதிகாரச் சட்டம் திருத்தப்படும் வரை சகல உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர் நிலையங்களுக்கும் அதன் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யவும், அதன் அங்கத்தவர்கள் ஒழுங்கு முறையில் நேர்மைத் திறனுடனும், தொழில் திறமையுடனும், செயற்படச் செய்யும் உதவுவதற்காக நிறுவப்பட்டது. ALFEA மூலம் சுய ஒழுங்குறுத்தலை எதிர்பார்க்கும் பிரதான அதிகாரச் சட்டத்திலிருந்து பெறப்பட்ட அதிகாரங்கள் மூலம், அதன் அங்கத்தவர்களின் ஒழுங்கு நடவடிக்கையை உறுதிப்படுத்தும் SLBFE யின் ஆலோசகர் பங்கை வகிக்கின்றது.

ALFEA தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர் என்பவர்களைக் கொண்ட நிறைவேற்றுக் குழு மூலம் ஓராண்டு காலத்திற்கு நிர்வகிக்கப்படுகிறது.

ALFEA வின் செயற்பாடுகள்

- உத்தரவுப் பத்திரம் உள்ளவர்களிடையே பிணக்குகளையும், அபிப்பிராய பேதங்களையும் தீர்த்து வைத்தல்.
- இலங்கைக்கு வெளியே வேலை வாய்ப்பைச் சீராக்கல், பதவி உயர்வு தொடர்பாக SLBFE யிக்கு விதந்துரை செய்தல்
- இலங்கையர்களுக்கு, இலங்கைக்கு வெளியே வேலை வாய்ப்புப் பெறும் வாய்ப்புக்களை ஊக்குவிப்பதற்கு உதவும் ஆலோசனை வழங்கல்.
- உத்தரவுப் பத்திரம் பெற்றோருக்கு நன்னடத்தைக் கோர்வை ஒன்றை வகுத்து அது அமுலாக்கப்படுவதை உறுதிப்படுத்தல்.
- இலங்கைக்கு வெளியே வேலைவாய்ப்பிற்கு இலங்கையர்களைச் சேர்ப்பது தொடர்பான விடயங்களை SLBFE வுக்கும், அமைச்சருக்கும் பிரதிநிதித்துவப்படுத்தல்

தொழிலில் – தொழில்சார் நிபுணத்துவத்தை பேணுவதற்கு, ஏஜென்ஸிக்களுக்குப் பொறுப்பாக இருப்பவர்களின் கல்வித் தகைமைகள், சகல கட்டணங்களும் பற்றி வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்தல். ஆட்சேர்க்கப்படும் வேலைகள் தொடர்பாக சகல தகவல்களையும் பெறுதல், தெரியாமல் அபாயகரமான தொழில்களுக்கு தொழிலாளர்களைச் சேர்த்தல், வேலை வாய்ப்பு தொடர்பான விதிகளையும், நிபந்தனைகளையும் தொழிலாளிகளுக்கு விளக்குதல், தொழிலாளரின் சம்பளங்களைக் குறைப்பதைத் தவிர்த்தல், அங்கத்தவர்களால் சேர்க்கப்பட்ட தொழிலாளர்களுக்காக பதிவேட்டை பேணுதல் என்பன உட்பட ஆகக்குறைந்த தராதரங்களை உள்ளடக்கும், செயல்முறை கோவைகளை சர்வதேச தொழில் ஸ்தாபனம் 1997 இல் விதந்துரைத்துள்ளது.

ALFEA 23 ஆண்டுகளாக செயற்பட்ட போதிலும், அது வகுத்த நன்னடத்தை கோவையை அமுலாக்க முடியவில்லை என்பது கவலைக்குரியது. சில உத்தரவுப் பத்திரம் பெற்ற ஏஜென்ஸிகள் நேர்மைத் திறனுடனும், தொழில்சார் வல்லமையுடனும் நடந்துள்ளன. ஏனையோர், கோவையை மீறியதுடன் அதிகாரச் சட்டத்தையும் பகிரங்கமாக எதிர்த்துள்ளனா. வயதுக்குக் குறைந்த சிறுமிகளை வேலைக்குச் சேர்க்கும் பிரதானமான பிரச்சினைகளில் (Sri Lanka News Fist – 2008 b+c Divaina 2009) சில ஏஜென்சிகள் வேலைக்கு அமர்த்தப்பட்ட சகல தொழிலாளர்களையும் பங்கேற்பவர்கள் நேர்காணல் செய்வதில்லை என்றும் தொழிலுக்கான தேவைகளை அறிவிப்பதில்லை அல்லது தொழிலாளி பொறுப்பேற்க வேண்டிய செலவு பற்றித் தெரிவிப்பதில்லை என்றும் பங்கேற்பாளருடனான நேர்காணலில் இருந்து தெரிய வந்துள்ளது.

ALFEA வினால் அதன் அங்கத்தவர்கள் சிலர் மிகையான வேலைக்கு ஆட்சேர்க்கும் கட்டணங்கள் அறிவிடுதல் உள்ளிட்ட சம்பளம் தொடர்பாக வெளிநாட்டுப் பொறுப்பாளர்களுடன் சேர்ந்து தொழிலாளரை ஏமாற்றுதல் என்பவற்றைக் கட்டுப்படுத்த இயலவில்லை.

மறுபுறத்தில் ALFEA நன்னடத்தைக் கோவை அதனிடம் உள்ள போதிலும், உத்தரவுப் பத்திரங்களை புதுப்பிக்கும்போது, ALFEA யின் தேவைகளையும், அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளையும் SLBFE புறக்கணிப்பதால் பிரிவு 55(d)யின் கீழ் அங்கத்தவர்களை இடை நிறுத்தி அவர்களை ஒழுக்காற்றுச் செய்ய முடியாதுள்ளதாக சுட்டிக் காட்டுகின்றது.

ALFEA வில் அங்கத்துவம், உத்தரவுப் பத்திரத்தை புதுப்பிப்பதற்கு அவசியமில்லை என்ற SLBFE இன் அண்மைய பணிப்புரை பற்றிக் குறிப்பிடுகையில் SLBFE பங்கை குறைத்து மதிப்பிடுவதாக ALFEA கருதுகிறது. தொழிலைப் பாதிக்கும் முக்கிய விவகாரங்களில் தம்முடன் ஆலோசிக்கப்படுவதில்லை என்றும் அதிகாரச் சட்டத்தை திருத்துவதற்கான பிரேரணை பற்றி ஊடகம் மூலமாகவே தாம் அறிந்ததாகவும் உதாரணம் காண்பித்து ALFEA கருத்து வெளியிட்டுள்ளது. ALFEA பல தடவைகள் SLBF க்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்ததன் மூலம் ALFEA வுக்கும் SLBFE க்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது தெரிகின்றது.

ALFEA வின் உள்ளகப் பரிபாலனம், வெளிப்படைத் தன்மை வாய்ந்ததல்ல என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. 700 முகவர்கள் அங்கத்துவம் பெற்றுள்ள போதிலும், பெரும்பான்மையான வேலை தேடும் தொழிலாளர்கள் பெண்களாக இருப்பதால் அவர்களைப் பாதுகாக்கும் தேவை உள்ள போதிலும் அங்கத்துவம் ஆணாதிக்கம் உள்ள அமைப்பாகவுள்ளது. இரண்டும் பெண்கள் மாத்திரமே குழுவின் அங்கத்தவர்களாக கடமையாற்றுவதாகவும் உள்ளது. 1985 இல் அது ஸ்தாபிக்கப்பட்டது முதல், தலைவர் பதவியை 5 பேர் மாத்திரமே வகித்துள்ளனர். செயலாளர் பதவியை ஐந்து பேரும், பொருளாளர் பதவியை 7 பேரும் மாத்திரமே வகித்துள்ளனர். ஏனையோர் பதவிக்கு வருவதைத் தவிர்த்து ஒரே நபர்களே பல்வேறு பதவிகளுக்கும் மாறி மாறி வகித்துள்ளனர். தலைவர் செயலாளராகவும், பொருளாளராகவும், குழு அங்கத்தவராகவும் பதவி வகித்துள்ளார் எனினும் ALFEA பெரும்பாலானோர் பதவி வகிப்பதில் விருப்பம் கொண்டிருக்கவில்லை என்று கருதுகிறது. உள்ளக சச்சரவு காரணமாக ஒரு குழுவினர் சம்மேளனத்தை ஏற்படுத்திப் பிரிந்தனர். அது பின்னர் கலைக்கப்பட்டது. இந்த உள்ளகப் பிரச்சினைகளும், SLBFE யுடனான சுமூகமற்ற உறவும், வேலைக்கு ஆட்சேர்ப்பதில் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

எவ்வாறெனினும் ALFEA அங்கத்தவர்கள் வெளிநாடுகளில் உள்ள வேலை கொள்வோர், வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள், உள்ளூர் உப முகவர்கள் சகல சம்பிரதாயங்களும் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் தவறிழைத்த ஊழியர்கள் ஆகியோரைக் கறுப்புப் பட்டியலிடுவது. போன்ற ஆக்கபூர்வ நடவடிக்கைகளை எடுத்துள்ளது. முன்னர் குறிப்பிடப்பட்டது போன்று துஷ்பிரயோகத்தை ஒழிக்க அது இலங்கையர் மனித வலுச் சங்கத்துடன் இணைந்து செயற்படுகின்றது. ( சமத் 2008a)

தொழிலில் வெளிப்படைத் தன்மையை தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம் கொண்டு வர முடியும் என்றும், அத்தகைய பிரயோகத்தில் ஒன்று உப முகவர்களை ஒழிப்பதாகும் என்றும் ALFEA நம்புகிறது. பொது மக்களுக்கும், அதன் அங்கத்தவர்களுக்கும் தகவல்களை வழங்குவதன் மூலமும், தொடர்புள்ள அங்கத்துவ ஏஜென்ஸிகளுடன் இணைவது மூலமும் இந்த இலக்கை எய்துவதற்கு அது இப்பொழுது செயற்படுகின்றது. குறைபாடுகள் இருப்பினும், தேசிய தொழில் புலம்பெயர்வு கொள்கையானது ALFEA யை வேலைக்கு ஆட்சேர்க்கும் தனியார் ஏஜென்ஸிகளை பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும், ஆட்சேர்க்கும் ஏஜென்ஸிக்கு பங்காற்றுவதாகவும், இந்த வழிமுறையில் முக்கிய பங்கேற்பாளராக இருப்பதாகவும் கருதுகிறது.

## 4.6 உத்தியோக பூர்வமற்ற வலையமைப்புகள்

உறவினர்கள், நண்பர்கள், சமூக அங்கத்தவர்கள், சகாக்கள் என்ற உறவு வலையமைப்பு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு ஆட்சேர்ப்பதில் அதிகரித்த முக்கிய பங்கை வகிக்கின்றது. 1997 தொடக்கம் 2007 வரை பதிவு செய்யப்பட்ட வளங்கள் மூலமான 26 சதவீதமானோருடன் ஒப்பிடுகையில் நண்பர்கள், உறவினர்கள் மூலமாக ஆட்சேர்ப்பது (சுய அடிப்படையில்) 95 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2008 இல் 80,904 வேலை தேடுவோர் நேரடி வளங்கள் மூலம் தொழில் பெற்றனர். இது பதிவு செய்யப்பட்ட வளங்களால் சென்றவர்களின் எண்ணிக்கையில் அரைவாசிக்கும் கூடுதலானது பதிலளித்தவர்களில் 41 சதவீதமானோர் வெளிநாடு செல்வதற்கு உத்தியோகபூர்வமற்ற வலையமைப்புக்களையே பயன்படுத்தியவர்களாக அல்லது பயன் படுத்துபவர்களாக உள்ளனர்.

இந்த உத்தியோகபூர்வமற்ற வலைமைப்புக்கள், வேலைக்கு ஆட்சேர்க்கும் வழிமுறையில் இரு செயற்பாடுகளை மேற்கொள்கின்றன. வெற்றிடங்கள் பற்றிய தகவலை வழங்குவதுடன் பதவிகளைக் கண்டு பிடிப்பதில் வேலை கொள்வோருடன் தொடர்பு கொள்கின்றன. (குணதிலக 1998) வேலைக்கு ஆட்சேர்ப்போர் என்ற முறையில் நண்பர்களும், உறவினர்களும் வேலைக்கு சேர்வதற்கான சம்பிரதாயங்களை பூர்த்தி செய்து, வேலை பெறவிருக்கும், தொழிலாளர்கள் விஸா பெறுவதற்குத் தேவையான ஆவணத்தையும், அதிகார உறுதிப் பத்திரத்தையும், அனுப்புகின்றனர். அநேகமான தொழிலாளர்கள் தாம் பெறவிருக்கும் பாதுகாப்பு, நலன்புரி நன்மைகளைக் கருத்தில் கொண்டு SLBFE யில் பதிவு செய்து கொள்கின்றனர்.

பெற்றோர் அல்லது மனைவி போன்ற நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களால் எவ்வித அபாயங்களும் இல்லை. உண்மையில் தொழிலாளர்களுக்கு அவர்களால் பாதுகாப்பே ஏற்படுகிறது. முன்னைய ஆய்வுகளின் பிரகாரம் (குணதிலக 1991, வனசுந்தர 2002) வெளிநாட்டில் வேலை பார்ப்பவர் ஆட்சேர்ப்பவராக மாறி வேலை கொள்வோருக்கு தொழிலாளிகளை விநியோகிக்கும் தொழிலில் ஈடுபட்ட சந்தர்ப்பங்கள் பற்றித் தெரிவித்துள்ளது. அண்மைய கட்டுரை ஒன்றில் சமத் (2008 டி) முன்னாள் வீட்டுப் பணிப்பெண்கள் சிலர், குவைத்தில் தொழில் ஏஜென்ஸிகளை நடத்துவதாக குறிப்பிட்டு இதனை ஊர்ஜிதம் செய்துள்ளார்.

இவ்வாறு ஆட்சேர்ப்போர், உள்ளூர் உத்தரவுப் பத்திரம் பெற்ற ஏஜென்ஸிகளுக்கு சமமானவர்கள், ஆனால் அவர்களுக்கான பிரமாணங்கள், இவர்களுக்கு செல்லுபடியாக மாட்டாது. குறிப்பிட்ட ஊரில் சில ஆண்டுகள் வசித்து பணியாற்றல் மூலம் நம்பிக்கையை ஏற்படுத்தியவர்களாக, அவர்கள் இருக்கின்றனர். இந்த ஆட்சேர்ப்போர், தாம் வேலை பார்க்கும், இடங்களில் அல்லது தமக்குத் தெரிந்த இடங்களில் ஏனையோருக்கு வேலை வாய்ப்புத் தேடுகிறார்கள். சிலர் இலங்கையில் வேலை தேடுவோரிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று, ஒழுங்குபடுத்தி, வேலை வாய்ப்புக்கு ஒப்புதல் பெற முயற்சி செய்து, வேலையுள்ள இடங்களில் வெற்றிடங்கள் ஏற்படும்போது இந்த விண்ணப்பங்களைப் பொருந்தும்படி செய்கிறார்கள். (வனசுந்தர 2002) இந்த "முகவர்கள்" இலங்கையிலிருந்து புறப்படுவதற்கு முன்னதாக இங்கேயே செலுத்தப்படத்தக்கதாக மூன்று மாத சம்பளத்திற்கு ஈடான கட்டணத்தை அறவிடுகிறார்கள்.

உத்தியோகபூர்வமற்ற வலைமைப்புக்கள் மூலம் சாதகமான ஆட்சேர்த்தல், சட்டபூர்வமானதாக இருப்பினும், உத்தியோகபூர்வ ஆணைக்கு அப்பால்பட்டது, எனவே அதனைக் கட்டுப்படுத்துவது மேலும் கடினமானதாகும். கட்டணம் அறவிடுதல், இரண்டாவது

அல்லது மூன்றாவது கடவுச் சீட்டை பயன்படுத்தல் தொழிலாளி தான் வேலைபார்க்கும் இடத்திற்கு வருவதற்கு உதவும் விதத்தில் மோசடி செய்யப்பட்ட திருமணச் சான்றிதழை பயன்படுத்தி ஆவணங்களை போலியாக்குதல் என்பன உட்பட பல மோசடிகளில் முகவர் தொழிலாளர்கள் ஈடுபடுக்கின்றனர் (வனசுந்தர 2002) மேலும் அதிகாரிகளின் கூற்றுப்படி, சட்ட விரோதமாக ஆட்சேர்த்தல், நியாயமற்ற தொழில் ஒப்பந்தங்கள், விசா மோசடிகள் போன்ற ஏற்கத்தகாத நடைமுறைகளை அவர்கள் ஆதரிப்பதுடன் தொழிலுக்கு ஆட்சேர்க்கும் நாடுகளில் உள்ள வேலைக்கு ஆட்சேர்க்கும் முகவர்களுடன் இணைந்து நடப்பதுடன், சில வேளைகளில் பண மோசடிகளிலும் ஈடுபடுகின்றனர். ஒரு குடும்ப நண்பர், அல்லது உப முகவர் மூலம் தொழிலாளர்களைச் சேர்ப்பதற்கு இலங்கைமுகவரை மீறி அவர்கள் நடந்து கொள்கிறார்கள். புலம்பெயர்ந்த வேலைக்கு ஆட்சேர்ப்பவர், வெளிநாட்டு முகவருடன் சேர்ந்து, வேலை கொள்வோரிடம் முக்கியமாக முஸ்லிம் பணிப்பெண்களை வேலைக்கு அமர்த்துவோரிடம் பேசி, ஆட்சேர்க்கும், கட்டணத்தைத் தமக்குச் செலுத்தும்படி செய்கிறார்கள் என்று நேர்காணல் செய்யப்பட்ட ஒரு பங்கேற்பாளர் கூறியுள்ளார்.

.

இத்தகைய மோசடிகள் பற்றி அறிந்துள்ள SLBFE முக்கியமாக மத்திய கிழக்கில் உள்ள வெளிநாட்டு முகவரின் அனுசரணையுடன் செயற்படுவதால், ராஜதந்திர அதிகாரம் இருப்பினும், அவற்றைத் தடுப்பது சிரமமாகவுள்ளது. விசா தொடர்பாக எழக்கூடிய எந்தப் பிரச்சினைகளுக்கும், எழுத்தில் முழுப் பொறுப்பையும் ஏற்குமாறு, இந்த வழிமுறையைப் பயன்படுத்தும் புலம் பெயர் தொழிலாளரிடம் கேட்டுத் தனது பொறுப்பிலிருந்து அது விலகிக் கொள்கிறது.

## 4.7 சட்ட விரோத வழிகள்

தவறிழைக்கும் வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களும், சட்டவிரோதமாக ஆட்சேர்ப்பவர்களும், 1980 முதல் இருக்கிறார்கள், 1985ம் ஆண்டில் வகுக்கப்பட்ட அதிகாரச் சட்டமானது போலியான ஆட்சேர்த்தல், சட்டவிரோத வேலை வாய்ப்பு ஏஜென்ஸிகள் ஆகியோரால் மேற்கொள்ளப்படும். சுரண்டலை நீக்கவும் (டி.செய்ஸா 2009) பயன்தரவில்லை. இன்று 400 சட்டவிரோத முகவர் நிலையங்களும், ஏஜென்ஸிகளும், உப முகவர்களும் நாடெங்கிலும், செயற்படுகிறார்கள். இவர்களில் அனேகமானோர் மாத்தளை, காலி, கடவத்தை, பதுளை பண்டாரவளை, குருநாகல், கட்டுகஸ்தோட்ட ஆகிய இடங்களில் செயற்படுகின்றனர். (கொழும்பு பேஜ் நியூஸ் டெஸ்க் 2008) 2006ஆம் ஆண்டிற்கான SLBFE யின் கணக்குகள் மீதான தமது அறிக்கையில், கணக்காளர் நாயகம் (பந்தி 71) SLBFE யுடன் பதிவு செய்யப்படாத ஏஜென்ஸிகள் பற்றிக் கவனத்தை ஈர்த்துள்ளார். (இலங்கைபாராளுமன்றம் 2007)

சட்டவிரோத ஆட்சேர்ப்போர், அளவுக்கு மீறிய, கட்டணங்களை அறவிடுவதுடன், தடை செய்யப்பட்ட இடங்கள், நாடுகள் என்பனவற்றுக்கு தொழிலாளர்களை அனுப்புகின்றனர். SLBFE சட்டவிரோத ஏஜென்ஸிகளின் நடவடிக்கை மீது பாரிய கண்காணிப்பை மேற்கொள்கின்றது. அதேவேளையில் சட்டவிரோத ஆட்சேர்க்கும் நடவடிக்கைகளை நீக்குவதற்காக உத்தரவுப் பத்திரம் பெற்ற ஏஜென்ஸிகளின் நடவடிக்கைகள் பற்றி விசாரணைகளை நடத்துகிறது. குற்றச் செயல் நடைமுறைக் கோவை 1979 அதிகாரச் சட்டம் இல 15 இன் நோக்கங்களுக்காக, SLBFE உத்தியோத்தர்களை பொது, சமாதான உத்தியோகத்தர்களாக்கி, சட்டவிரோத முகவர்களையும், ஏஜென்ஸிகளையும் கைது செய்வதற்கு 2009 அதிகாரச் சட்ட திருத்தம் SLBFE க்கு கூடுதலான அதிகாரங்களை வழங்கியுள்ளது. அதிகார பூர்வமற்ற ஆட்சேர்த்தலுக்கும் கடுமையான தண்டணைகளை விதித்துள்ளது.( இலங்கைபாராளுமன்றம் 2009 b)

சட்டவிரோதமாக வேலைக்கு ஆட்சேர்ப்பதென்பது, தேசிய சட்டங்களுக்கும், பிரமாணங்களுக்கும் அமைவாக இல்லாதவிதத்தில் ஒரு வேலை கொள்வோரினால், நேரடியாக அல்லது உத்தரவுப் பத்திரமற்ற ஏஜென்ஸி முகவர் என்பவரினால் வெளிநாட்டுக்கு வேலை வாய்ப்பிற்கு தொழிலாளர்களை கொண்டு செல்லுதல், அல்லது ஏதாவது வகையிலான ஆதரவு திரட்டுவது, முயற்சி செய்தல், உறுதியளித்தல் ஒப்பந்தம் செய்தல் என்பன சட்டவிரோத ஆட்சேர்த்தலாகும் என்று ILO(n.d) வரைவிலக்கணம் கூறுகிறது. இலங்கைசட்டம் அதிகாரபூர்வமற்ற ஆட்சேர்த்தலை குற்றச் செயலாகக் கருதுகிறது. அதிகாரச் சட்டத்தின் கீழ் வழங்கப்படாத உத்தரவுப் பத்திரம் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஏஜென்ஸியின் வர்த்தகத்தை மேற்கொள்ளும் ஒவ்வொரு நபரும் குற்றச் செயல் புரிந்த குற்ற உணர்வுக்கு உட்படுவார்கள்.

சட்ட விரோத வழிகளில் புலம் பெயரும் அல்லது புலம்பெயர முயற்சி செய்யும் தொழிலாளர்களுக்கு உள்ள அபாயங்கள் மிக அதிகமானதாகும். அத்தகைய வேலை தேடுவோர், மிகக் கூடுதலான ஆட்சேர்த்தல் கட்டணத்தைச் செலுத்துவதுடன் குறிப்பிட்ட நாடுகளில் அல்லது இடைத்தங்கல் நாடுகளில் வேலை கிடைக்காமல் நிராதரவாக்கப் படுகின்றனர். (பெறஞ்சரும் கிரிந்ததெவும், 2008 SLBFE, 2009) வேலைகளுக்குச் சென்ற நாடுகளில் பாதுகாப்பு அற்றவர்களாக, சட்டத்தை மீறி இலங்கையிலும், வெளிநாடுகளிலும் அவர்கள் கைது செய்யப்படவும் கூடும்.

உத்தரவுப் பத்திரமற்ற ஏஜென்ஸிகள், வேலை தேடுவோர் சட்டபூர்வமாக நுழைய முடியாத ஜப்பான், இத்தாலி போன்ற ஆதாயம் தரும் நாடுகளுக்கு அல்லது அரசியல் குழப்பமுள்ள ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளுக்கு அல்லது சிவில் யுத்தம் நிலவும் வேலை பெறுவதற்கு இலங்கையில் தடை செய்யப்பட்ட நாடுகளுக்கு தொழிலாளர்களை அனுப்புவதற்கு முயற்சி செய்கின்றன. நூற்றுக் கணக்கான இலங்கையர்கள், தமது வாழ்க்கையை அபாயத்துக்கு உள்ளாக்கி சண்டையால் அழிவுறும் ஈராக்கிற்கு செல்வதாக அறிக்கை தெரிவிக்கின்றது. அதே அறிக்கைப் பிரகாரம், புலம்பெயர் தொழில்களுக்கான சர்வதேச அமைப்பு (IOM) தொழிலாளர்கள் சுரண்டப்படுவதுடன், கீழ்த்தரமான நிலைமைகளில் வசிப்பதாக அறிந்து 30 இலங்கையர்களை ஈராக்கிலிருந்து 2007 பெப்ரவரி மாதம் தொடக்கம் தப்பிச் செல்வதற்கு உதவியுள்ளது.

சட்டவிரோத ஏஜென்ஸிகள், அவுஸ்திரேலியா, கனடா, ஐக்கிய ராஜ்யம், அமெரிக்கா, சைப்பிரஸ், சிங்கப்பூர், மலேசியா, நியூசிலாந்து போன்ற நாடுகளில் உள்ள கல்வி நிறுவனங்களில் வேலை பெற்றுத் தருவதாகக்கூறி தொழிலாளர்களை சட்டத்திற்கு முரணாகச் சேர்க்கின்றனர்.

பதிவு செய்யப்படாத முகவர்கள் மாத்திரமல்லாது, உத்தரவுப் பத்திரம் பெற்ற ஏஜென்ஸிகளும் சட்டவிரோத ஆட்சேர்த்தலில் பல்வேறு அளவில் ஈடுபடுகின்றன( பிந்து 2008 இலங்காதீப 2008, டெயலி மிறர் 2008a யும் 2009e, கமகே 2008b) நண்பர்கள், தெரிந்தவர்கள், சிலர் முன்னர் வெளிநாட்டில் வேலை பார்த்தவர்களான தனிநபர்களும், சட்டவிரோத நடவடிக்கையில் சம்பந்தப்படுகின்றனர். இந்தச் சம்பவங்கள் உத்தரவுப் பத்திரம் பெறாத ஏஜென்ஸிகள் போன்று பரந்த அளவில் அல்லது பெரிய அளவிலானது என்று அறிவிக்கப்படாத போதிலும் மோசடிகள் ஈடுபடும் உத்தரவுப் பத்திரம் பெற்ற ஏஜென்ஸிகள், தொழிலாளர்களை ஒரு நாட்டுக்கு சட்டபூர்வமாக அனுப்புவதன் மூலம் சட்டக் கட்டுக்கோப்புக்குள் செயற்பட்டு, அங்கிருந்து தடை செய்யப்பட்ட நாடுகளுக்கு அவர்கள் மாற்றப்படுகிறார்கள். ஆனால், உத்தரவுப் பத்திரம் பெறாத ஏஜென்ஸிகளால் அவர்கள் எங்கு மாற்றப்பட்டுள்ளார்கள் என்பதை அறியவும்

முடிவதில்லை, சிலர் பாதாள வலையமைப்பின் ஒரு பகுதியினர், ஏனையோர், ஒரு தடவை மாத்திரம் செயற்பட்டு விட்டு, பணத்தைப் பெற்றதும், மறைத்து விடுபவர்கள். பதிலளித்த புலம்பெயர் வேலைக்கான முயற்சிகளில் தோற்றவர்களில் ஐந்து பேர் ஈராக்கு ஒருவர் இத்தாலிக்கும் ஏழு பேர் ஜப்பானுக்கும் செல்ல முயற்சி செய்துள்ளனர்.

SLBFE யும் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளும், சட்டவிரோத ஆட்சேர்க்கும் ஏஜென்ஸிகள் பற்றிப் புலனாய்வு செய்கின்றனர். கூடுதலான கண்காணிப்பும் ஏனைய சட்ட அமுலாக்க ஏஜென்ஸிகளுடனான ஒத்துழைப்பும் காரணாக 2008 இல் 116 உத்தரவுப் பத்திரம் பெறாத ஏஜென்ஸிகள் மீது திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. 2007 இல் 51 ஏஜென்ஸிகள் மீது திடீர் பரிசோதணை மேற்கொள்ளப்பட்டிருந்தது. (SLBFE 2009) 2009 ஜனவரியில் மாத்திரம் 21 ஏஜென்ஸிகள் மீதும், ஜனவரி தொடக்கம் மேமாதம் வரை 85 ஏஜென்ஸிகள் மீதும் திடீர் சோதனைகள் நடத்தப்பட்டன. சட்டவிரோத ஏஜென்ஸிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தலும், SLBFE வழங்கும் சேவையை வேலை தேடுவோர் பயன்படுத்துவதை ஊக்குவிக்கவும், வேலைக்கு ஆட்சேர்க்கும் ஏஜென்ஸிகளைப் பயன்படுத்துவதற்கு முன்னர் அவற்றின் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்தவும், நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

# 5. ஊழல் வகைகள்

ஏமாற்றுதல், இலஞ்சம் பெறுதல், மற்றும் ஒழுங்குமுறையற்ற குற்றவியல் சார்ந்த குற்றங்கள் உட்பட ஊழல் பல்வேறு வடிவங்களைப் பெறுகின்றது. இந்த ஆய்வானது, ஊழல், ஒழுங்கு முறையற்ற நடவடிக்கைகள் பற்றிய இடை நிகழ்வான சாட்சியம் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளது. ஊழல் இடம்பெறுவதை அளப்பது கடினம், ஏனெனில் பதில் அளித்தோர், ஊழல் நடவடிக்கையில், முக்கியமாக குற்றவியல் சார்ந்த குற்றங்களில் தாம் ஈடுபட்டதை வெளியிடமாட்டார்கள் என்பதாகும்

## 5.1 போலியான ஆவணமயப்படுத்தல்

புலம்பெயர்வதற்கு தொழிலாளிக்குத் தேவைப்படும் ஆவணங்கள் தவறுதலான தகவல் வழங்கவும், அவர்களை ஏமாற்றவும் பயன்படுத்தப்படுமாயின் அது போலி ஆவணங்களாகும். பிரசித்தம் பெற்ற றிஸானாவின் விடயத்தில் போன்று ஆவணங்களைப் பொய்ப் பத்திரமாக்குதல் சாதாரணமாக உள்ளதாக நம்பப்படுகிறது. ( ஜயசிங்க 2009, பிந்து 2008) லயகாதீப 2008)

**பொய் பத்திரங்கள் மூலம் ஏமாற்றுதல்**

நந்தசிறி வெளிநாட்டு வேலைவாய்ப்புத் தேடும் முயற்சியில் இறங்கியபோது உத்தவுப் பத்திரம் பெற்ற ஏஜென்ஸிக்காக வேலை பார்க்கும், அவரது சகோதரி, ஈராக்கிற்கு தொழிலாளர்களை அனுப்பும் மினுவாங்கொடையில் உள்ள உப முகவர் பற்றி அவரிடம் கூறியுள்ளார். தனது மைத்துனர் ஈராக்கில் தச்சுத் தொழிலாளியாக வேலை பார்த்து 100,000 ரூபா சம்பாதித்ததால், நந்தசிறி இந்த உப முகவர் மூலம் ஈராக்கில் தொழில் பெறத் தீர்மானித்தார். மைத்துனரின் ஊக்குவிப்புடன் அவர் உப முகவருக்கு 120,000 ரூபாவும் - விமானப் பயணச் சீட்டு பதிவு செய்தல், காப்புறுதி வைத்திய பரிசோதனை என்பனவற்றுக்காக மேலும் 53,700 ரூபாவும் செலுத்தினார். உப முகவர் பயண ஆவணங்களை அவரிடம் கையளிக்கையில் அவருக்கும் மற்றும் எட்டுப் பேருக்கும் 2008 மார்ச் 3ம் திகதி பயணமாவதற்கு சக ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாகக் கூறினார். சட்டவிரோதப் பயணத்தில் புறப்படுவதால் எவரிடமும் ஆவணங்களைக் காண்பிக்க வேண்டாம் என்று நந்தசிறியிடம் வலியுறுத்திக் கூறினார். நந்தசிறியும், ஏனையோரும் விமான நிலையம் சென்றடைந்ததும் தமக்கு போலியான பயண ஆவணங்கள் தரப்பட்டதையும், அவர்களுக்கு எந்தத் தொழிலும் அங்கிருக்கவில்லை என்றும் அறிந்தனர்.

பொய்ப் பத்திரங்கள் பற்றிய தகவல் இடைக்கிடை தான் கிடைக்கப் பெறினும், குவைத்தில், இலங்கைத் தூதரகம் பேணும் புள்ளிவிபரங்களின்படி இந்தப் பிரச்சினையின் பாரதூரமான அளவு பற்றி அறிய முடியும். 2007 ஆண்டிலும், 2008 இன் முதல் நான்கு மாதங்களிலும், போலி ஆவணங்களை வைத்திருந்தமையால் நாடு திருப்பப்பட்ட வீட்டுப் பணிப்பெண்களின் எண்ணிக்கை முறையே 138ம், 31ம் ஆகும். (சமத் 2008b) இந்தப் பிரச்சினை தெரிந்தபடியால் ( Sri Lanka News First 2008b) SLBFE இந்தப் பொய்ப் பத்திரங்களை தடுக்குமுகமாக ஒரு தடைக்கோடுக் குறியீடு உள்ள புதிய அடையாள அட்டைகளை வேலை பார்க்கச் செல்லும் தொழிலாளர்களுக்கு வழங்கத் தொடங்கியது. (வீரக்கோன் 2008) பிறப்புச் சான்றிதழ் விற்கப்படுதல், வயது, (சமத் 2008b, லக்பிம 2008, Sri Lannka News First – 2008b) மதம் விண்ணப்பதாரியின் இனத்துவம், மாற்றப்படுத்தல், புகைப்படங்களையும் பெயர்களையும்

ஒன்றுக்கொன்று மாற்றுவதன் மூலம் ஒப்பந்தத்தில் அங்கீகரிக்கப்படாத விண்ணப்பதாரிகளின் பெயர்களைப் புகுத்துதல் போன்றன கண்டுபிடிக்கப்பட்ட ஏனைய ஊழல் நடவடிக்கைகளாகும். முஸ்லிம் பெண்களுக்கு மத்திய கிழக்கில் முன்னுரிமை இருப்பதாலும் அவர்கள் நன்கு பராமரிக்கப்படுவதாலும் முகவர்களுக்கு கூடுதலான கமிஷன் கிடைப்பதாலும் சிங்கள, தமிழ் பெண்களுக்கு முஸ்லிம் பெண்களின் பெயரை மாற்றி வைப்பது ஒரு பொதுவான ஏமாற்று நடவடிக்கையாக உள்ளது. (டயஸ், ஜயசுந்திர, 2004) சைப்பரஸுக்கான தொழிலாளர்கள், போலியான கடவுச் சீட்டுகள், திருமணச் சான்றிதழ் போன்ற ஏனைய பொய்ப் பத்திரங்களுடன் திரும்பவும் வேலை பார்க்கச் செல்வது ஒரு பிரச்சினை என்று சைப்பிரஸின் குடிவரவு உத்தியோகத்தர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். (வனசுந்தர 2001) பயிற்சிச் சான்றிதழ்களும்

போலிமயமாக்கப்படுகின்றன. வேலை தேடுவோரை ஏமாற்றுவதற்கு, உத்தியோகபூர்வ ஆவணங்களை போலியாக உருவாக்கியமை பற்றியும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆய்வு நேர்காணலுக்குட்பட்டவர்களிடையே, இந்த நடவடிக்கைக்கான உதாரணங்களைக் கண்டுள்ளது. வேலை கிடைக்கத் தவறிய பதில் அளித்தவர்களில் ஒருவர், கடவுச் சீட்டில் தமது வயதை மாற்றுவதற்காக 25,000 ரூபா செலுத்தியுள்ளார். மருத்துவ நிலையத்தின் பணிப்பாளர் ஒருவர் ஆய்வாளருக்கு தகவல் தருகையில் தமது வயதை மாற்றிய இருவர் பற்றிக் கூறியுள்ளார். 59 வயதான வேலைக்குச் செல்லும் ஒரு பெண் கடவுச் சீட்டில் தனது வயது 51 ஆக இருப்பதையும், தனது உண்மையான வயது 59 என்றும் ஒப்புக் கொண்டுள்ளார். 16 வயதான மற்றுமொரு பெண், தன்னைப் 18 வயதானவளாக தன்னை ஆக்குவதற்கு பிறந்த திகதி மாற்றப்பட்டதாகத் தெரிவித்தார்.

## 5.2 சட்டவிரோதக் கொடுப்பனவுகள்

SLBFE யின் 2009 அதிகாரச் சட்டம் திருத்தப்படும் வரை “இலங்கைக்கு வெளியே எந்தவொரு நாட்டிலும், வேலை வாய்ப்பு வழங்குதல், நாட்டிலும், வேலை வாய்ப்பு வழங்குதல், அல்லது தேடுதல்” என்பனவற்றுக்கு உத்தரவுப் பத்திரம் பெற்ற ஏஜென்ஸி கட்டணம் அறவிடுவதை சட்டம் குறிப்பாகத் தடை செய்திருந்தது. புலம்பெயர் தொழிலாளியிடம் இருந்து 20,000 ரூபாவுக்கு குறைந்த சம்பளம் பெறுவோராயின் 8,883 ரூபாவும், 20,000 ரூபாவுக்கு கூடுதலான சம்பளம் பெறுவோராயின் 11,767 ரூபாவையும் SLBFE பதிவுக் கட்டணமாக் ஏஜென்ஸி பெற முடியும். இது ILO கோட்பாட்டுக்கு அமைவானது என்றும், மிகக் குறைந்த எண்ணிக்கையிலான உத்தரவுப் பத்திரம் பெற்ற ஏஜென்ஸிகளே இந்தப் பிரமாணத்துக்கு இசைவாக நடந்து கொள்கின்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலை தேடுவோரிடமிருந்து அதிகமான தொகைகள் அறவிறப்படுவது தொடர்ந்து நிலவும் குறைபாடாக உள்ளது. இதனால் ஏழை ஆண்களும், பெண்களும் தமது குடும்பச் சொத்துக்களை அடைமானம் வைப்பதுடன் கட்டணத்தை செலுத்துவதற்குப் பணம் கிடைப்பது கஷ்டமாதலால் ஆதாயம் தரும் தொழிலைப் பெறும் வாய்ப்புக்களையும் இழக்கின்றனர்.


முக்கியமாக மத்திய கிழக்கில் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்கு பெரும் கிராக்கி உள்ள போதிலும், வேலைக்கு ஆட்சேர்ப்போர் ஒவ்வொரு தொழிலாளர்களிடமிருந்தும் 60,000 ரூபாவை அறவிடுவதாக SLBFE யின் தலைவர் கூறியதாக மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. (வீரக்கோன் 2008) வேலை கிடைக்கும் சாத்தியமுள்ளோர், திரும்பவும் வேலைக்குச் செல்வோர் SLBFE யினால் அதிகாரம் வழங்கப்படாத கொடுப்பனவுகளை எவ்வித புலம்பெயர்

வழியைப் பயன்படுத்தினாலும் கொடுக்க வேண்டியுள்ளதாக ஆய்விலிருந்து தெரிய வந்துள்ளது. பதில் அளித்த அனைவரிலும் 5 வேலை தேடுபவர்களும், நான்கு நாடு திரும்பியவர்களும் தாம் எந்த ஏஜென்ஸி மூலம் புலம் பெயர்ந்தார்களோ, அவர்களுக்கு கட்டணம் செலுத்த வேண்டி இருந்தது என்று தெரிவித்தனர். 65 சதவீதமானோர், 15,000 ரூபா தொடக்கம், 900,000 ரூபா வரை முகவர்களுக்கு செலுத்தி உள்ளனர். இந்த எண்ணிக்கையில் 13 சதவீதமானோர் வெளிநாட்டில் தாம் சம்பாதிக்கும் இரண்டு அல்லது மூன்று மாத சம்பளத்தைச் செலுத்த இணங்கியுள்ளனர்.

உப முகவர்கள் 15,000 ரூபா தொடக்கம் 400,000 ரூபா வரை அறவிட்டுள்ளனர். இதேவேளையில் உத்தியோகப்பற்றற்ற வலையமைப்புக்கள் 48 தொழிலாளர்களிடம் 15,000 ரூபாவைக் கூடுதலான தொகையாக அறவிட்டுள்ளன. ஆகக்கூடுதலான தொகையாக 1.3 மில்லியன் ரூபாவை உத்தியோகபூர்வமற்ற வளத்திற்கு, வேலை பெறும் சாத்தியம் உள்ள ஒருவர் செலுத்தியுள்ளார்.

10 உத்தரவுப் பத்திரம் பெற்ற ஏஜென்ஸிகள், மூன்று உப முகவர்கள் 45 உத்தியோகப்பூர்வமற்ற வளங்கள் என்பன கட்டணம் எதையும் அறவிடவில்லை. 20 ஏஜென்ஸிகளும் உப முகவர்களும், பதிவு செய்தல், மற்றும் செலவுகளுக்காக 15,000 ரூபா வரை அறவிட்டுள்ளன. சுய அடிப்படையில் வேலைக்குச் சென்ற மூன்று பேரில் ஒவ்வொருவரும் 15,000 ரூபாவைச் செலுத்தியுள்ளனர். 13 ஏஜென்ஸிகளில் உத்தியோகபூர்வமற்ற வலையமைப்பைச் சேர்ந்த நான்கு ஏஜென்ஸிகள் இரண்டு மாதம் அல்லது மூன்று மாதச் சம்பளத்தைக், கட்டணமாகக் கோரியுள்ளன.

**வரைபடம் 6: ஆய்வுக்குட்பட்டவர்களிடமிருந்து அறவிடப்பட்ட கட்டணம்**



மேற்கில் இத்தாலி, கனடா, சைப்பிரறஸ், கிழக்கு ஆசியாவில் தென்கொரியா போன்ற பிரதான இடங்களில் வேலை வாய்ப்புப் பெற்றுக் கொடுத்தோர் அல்லது உறுதியளித்தோர் மிகக்கூடுதலான தொகையை அறவிட்டுள்ளனர். மத்திய கிழக்கில் வேலை தேடியோர் மிகக்குறைந்த தொகையாக 100,000 ரூபாவை செலுத்தியுள்ளனர். தமது நிர்வாக செலவுகளை இந்தக் கட்டணங்கள் ஈடு செய்வதாக தெரிவித்த முகவர்களின் கூற்றில் தங்கியிருக்க முடியாது. ஏனெனில் வெளிநாட்டு முகவரிடம், இருந்து அவர்களது செலவுக்கு ஒரு கட்டணம் கிடைக்கும் அதேவேளையில் SLBFE புலம்பெயர் தொழிலாளர்கள் செலுத்திய பதிவுக் கட்டணத்தில் 70% திரும்பிச் செலுத்துகின்றது. ALFEA வின் தகவல் பிரகாரம், ஒரு முகவர், ஆட்சேர்க்கும் செவுகள், கையாளும் கட்டணங்கள், கமிஷன் என்ற வகையில் US$800 – 1400 டொலர்களைப் பெறுகிறார்.

வீட்டுப் பணியாளர்களைப் பொறுத்த வரை SLBFE குறிப்பிட்ட ஆட்சேர்க்கும் கட்டணத்தைத் தெரிவித்துள்ளது. சவூதி அரேபிய அனுசரணையாளர் செலுத்த வேண்டியது (201,050 ரூபா) ஒரு முஸ்லிமுக்கு 179,050 முஸ்லிமல்லாதவருக்கு ரூபாய் (65,550 ரூபா) லெபனான் (191,100 ரூபா) அபுதாபி ( 73,500 ரூபா) ஓமான் (14,000 ரூபா) கட்டார் (128,160 ரூபா) மாலைதீவுகள் (98,088 ரூபா) சிங்கப்பூர் (68,135 ரூபா) சவூதி அரேபியாவில் உள்ள அனுசரணையாளர்கள், ஏனைய செலவுகளுடன், விசா, வதிவு அனுமதிப் பத்திரம், உள்ளூர் முகவருக்கு செலுத்தப்பட்ட கமிஷன் என்று ஒரு முஸ்லிம் வீட்டுப் பணிப்பெண்ணுக்கு 201,050 ரூபாவையும், முஸ்லிம் அல்லாதவருக்கு 179,050 ரூபாவையும், செலுத்த வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகத் திருப்பி அனுப்பும் செலவுகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. சிங்கபூர், வேலை வாய்ப்பு தொடர்பான செலவுகள், அல்லது தொழில் அனுமதிப் பத்திரம் பெற்றவரிடம் இருந்து வேறு எந்தக் கொடுப்பனவும் பெறப்படுவதைத் தடை செய்துள்ளது.

ALFEA வின்படி முகவர்கள் முன்னர் குறிப்பிட்டவாறு வீட்டுப் பணியாளர்களிடம் இருந்து கட்டணம் எதுவும் அறவிடுவதில்லை என்கிறது. ஆனால் முன்னர் குறிப்பிட்டபடி ஆய்வு இதற்கு முரணான செயற்பாட்டை கண்டுள்ளது. தொழிலாளர்கள் முகவருக்கு இலங்கையில் அல்லது வெளிநாட்டில் இருக்கும்போது தமது முதலாவது இரண்டு மாத கால அல்லது மூன்று மாத கால சம்பளத்தைச் செலுத்துகின்றனர்.

வெளிநாட்டு முகவரும், உள்ளூர் உத்தரவுப் பத்திரம் பெற்ற ஏஜென்ஸியும் இணைந்து செயற்படுகின்றன. (டயஸும் வனசுந்தரவும், 2002) மொறிஸியசில் ஆடைத் தொழிற்சாலை தொழிலாளர்களைப் பொறுத்த வரை அந்நாட்டு அரசாங்கம், புலம்பெயர் தொழிலாளியின் செலவுகளை வேலைகொள்வோரே பொறுப்பேற்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ள போதிலும், மூன்றில் ஒரு பங்கு விமானக் கட்டணம் தொழிலாளியிடமிருந்தே அறவிடப்படுகிறது என்பதை ஆய்வு புலப்படுத்தியுள்ளது. தற்போதைய மதிப்பீடு இத்தகைய மோசடியைப் புலப்படுத்தவில்லை. ஜோர்டானில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது(ஒல்வான் 2008) புலம்பெயர் தொழிலாளியிடமிருந்து பெறப்படும் கட்டணங்கள், முகவருக்கும், வேலை கொள்வோருக்குமிடையே செலவுகளைக் கழித்துக் கொண்டு பகிரப்படுவதாக தெரிவிக்கின்றது.

உத்தியோகபூர்வமற்ற வலையமைப்புகள் மூலம் வேலைக்குச் சென்றவர்கள் சில ஆகக்கூடிய தொகைகளை செலுத்தியுள்ளதை ஆய்வு புலப்படுத்துகின்றது.

**என்ன மாதிரியான சினேகிதி:**
காந்தி சைப்பிரஸில் வேலை பார்க்கும் தன் சினேகிதியான அமலாவிடம் தமது நிதிக் கஷ்டங்கள் பற்றிக் கூறியபோது அவளுக்கு வீட்டுப் பணிப் பெண் வேலை தேடித் தருவதாக அமலா கூறினார், பயிற்சித் திட்டத்தில் சேர்ந்து தனது கடவுச் சீட்டையும், பெற்றுக் கொள்ளுமாறு காந்திமதிக்கு அவர் புத்திமதி கூறினார். விமானப் பயணக் கட்டணத்திற்கும் விஸாவுக்கும் 50,000 ரூபாவை செலவாகுமாதலால், காந்தி 40,000 ரூபாவை அமலாவின் தாயாரிடம் கொடுத்தார் அவர் அந்தப் பணத்தை அமலாவிற்கு அனுப்புவதாக இருந்தது. அமலா காந்தியுடன் ஒரு மாத காலமாகத் தொடர்பு கொள்ளாததால், அமலாவின் தாயைத் தேடி அவள் சென்றபோது தயாரும் நாட்டை விட்டுச் சென்றுவிட்டதாக அறிந்தாள். காந்தியின் கடிதங்களுக்கு அமலா பதில் அனுப்பவில்லை. ஆனால், அது தனிப்பட்ட பணிப்பரிமாற்றம் ஆதலாலும், பணத்தைப் பெற்றவர் இலங்கையில் இல்லாததாலும், காந்தியால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

கொடுப்பனவுகள் பணம் என்ற ரீதியில் மாத்திரமல்லாது, உணவு, மதுபானம், உடை, ஆபரணம், தொழில், பாலியல், இச்சையைப் பூர்த்தி செய்தல், போன்ற பலவகையிலானதாகும். குக்கிராமங்களில் இருந்து பெண்கள் விடுதிகளுக்குக் கொண்டுவரப்பட்டு இங்கிருந்து வெளிநாடு புறப்படுவதற்கு முன்னர் துஷ்பிரயோத்திற்கு உட்படுப்பட்டதாக நேர்காணலில் பங்குபற்றியோர் தெரிவித்தனர். பணமல்லாத சலுகைகள் கோரப்பட்டதா என்று குறிப்பிட்டுக் கேட்கப்பட்டபொழுது, இருவர் மாத்திரம் அப்படிச் செய்ததாகக் கூறினர். ஒரு பெண் வேலைக்கு ஆட்சேர்க்கும் ஒருவரின் வீட்டில் தங்க வைக்கப்பட்டு வீட்டு வேலைகள் பார்க்கும்படியாகவும் மற்றையவர், பாலியல் இசையைப் பூர்த்தி செய்ய வேண்டியும் ஏற்பட்டுள்ளது.

## 5.3 விதிமுறைகளும், நடைமுறைகளும் மீறப்படுதல்.

இல்லாத தொழில்களுக்கு ஆட்சேர்ப்பது திரும்ப திரும்ப நடைபெறும் ஒரு மோசடியாகும். முகவர்களின் கேள்விக்குரிய முகாமைத்துவ தொழில் கட்டணங்கள் இதற்கான ஒரு காரணமாகும்.

வெளிநாட்டு முகவர் அல்லது அனுசரணையாளரால் அனுப்பப்படும் தொழில் கட்டளை உள்ளூர் முகவருக்கு அனுப்பப்படுவதன் முன்னர் இலங்கைத் தூதரகத்தால் அதிகாரபூர்வமாக்கப்பட்டு, புலம்பெயர்பவருக்கு, வேலை வாய்ப்பு உள்ளதென உறுதி செய்யப்படுகிறது. எனினும், ஏஜென்ஸிகள் இருக்கும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கும் கூடுதலாக தொழில்களைக் கூட்டி அங்கீகாரம் பெற்று விடுகின்றனர். இந்தத் தொழில் கட்டளையை, ஒரு வெளிநாட்டு முகவர் அல்லது மூன்று உத்தரவு பெற்ற முகவர் நிலையங்களுக்கு அனுசரணையாளரால் வழங்கப்பட முடியும். இது ஓராண்டுக்கு செல்லுபடியானது, ஆனால் மீண்டும் புதுப்பிக்கப்படவும் இயலும். ALFEA வின் கூற்றுப்படி அரசாங்க கெடுபிடித் தாமதங்களைக் கடந்து முகவர் நிலையங்கள் தொடர்ந்து ஆட்சேர்ப்பதில் ஈடுபடுவதற்கு வழிவகுக்கும் என்பதால் இந்த நடைமுறை கடைப்பிடிக்கப்படுவதாகத் தெரிகின்றது. SLBFE முதலாவது அங்கீகாரம் வழங்க ஏழு நாட்களை மாத்திரமே எடுக்கின்றது. இருக்கும் தொழில்கள் பற்றி நன்கு அறிந்து கொள்ளாமல், தூதரகம் செல்லுபடியாகும் தகுதியை வழங்குவதும் இல்லாத தொழில்களுக்கு

SLBFE அனுமதி வழங்குவதும், தொழில் இல்லாதவிடத்தும் உப முகவர்கள் வேலை தேடுவோரிடமிருந்து கட்டணம் அறவிடும் சாத்தியமும், புலம்பெயர் தொழிலாளர்களுக்கு அபாயங்களை உண்டு பண்ணுகின்றன.

தொழில் இல்லாமல் தொழிலுக்கு ஆட்சேர்ப்பது, அந்நிய நாடுகளில் தொழிலாளர்கள் நிராதரவாக விடப்படுவதற்கு வழி வகுக்கும். 2004 இல் 13 தொழிலாளர்கள் கைவிடப்பட்டனர். 2005 இல் இந்த எண்ணிக்கை 541 ஆகவும் 2006 இல் 1060 ஆகவும் அதிகரித்தது. 2007 இல் 484 ஆகவும், 2008 இல் 131 ஆகவும் இது குறைந்தது. எண்ணிக்கை இதைவிடக் கூடுதலாக இருத்தல் கூடும். ஏனெனில் பலர் இது பற்றித் தெரிவிக்க முற்படவில்லை. ஆண்களும், பெண்களும் நிராதரவாக விடப்பட்ட போதிலும், ஆண்களைப் பார்க்கிலும் பெண்களே கூடுதலாக சுலபமாகத் துன்பத்திற்கு ஆளாகும் நிலை உள்ளதால் கைவிடப்படுகின்றனர்.

ஆய்வில் வேலை கிடைக்காத 42 பேரில் மூன்று பேர் நிராதரவாகினர். பதிலளித்தவரில் ஒருவருக்கு, சைப்ரஸில் தொழில் இருப்பதாக உறுதி வழங்கப்பட்டது. அவர் மலேசியா மூலம் பயணம் செய்யலாம் என்றும், அங்கு விசா வழங்கப்படும் என்றும் அவருக்குக் கூறப்பட்டது. கோலாலம்பூரில் உள்ள முகவரின் பிரதிநிதி அவரைச் சந்திக்காத போதுதான், தான் ஏமாற்றப்பட்டமை அவருக்குத் தெரிந்தது. மற்றுமொருவரும், ஏனைய ஆறு பேரும் மலேசியாவுக்கு தொழில் வாய்ப்புப் பெற அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு போய்ச் சேர்ந்ததும் தொழில் எதுவும் இருக்கவில்லை. பதிலளித்தவர்களில் சுற்றுலாப் பயண விசாவில் தாம் ஈராக்கிற்கு சென்று கொண்டிருப்பதாக நம்பிய மூன்றாவது நபர், டுபாயில் நிராதரவாகக் கைவிடப்பட்டார்.

**மாலைதீவுகளில் நிராதரவாக விடப்பட்டோர்.**

நந்தசிறியின், தொழிலுக்கு புலம்பெயர்வதற்கான முதல் முயற்சி தோல்வி கண்டது. ஆனால் அது மீண்டும் முயற்சி செய்வதிலிருந்து அவரைத் தடுக்கவில்லை. ஒரு முகவர் நிலையம் மேசன்மாரை மாலைதீவுகளுக்கு அனுப்புவதாக கேள்விப்பட்டு அவர் 10,000 ரூபா செலுத்தி மற்றும் 17 பேருடன் அங்கு சென்றார். அவர்களுக்கு வேலை இருக்கவில்லை. மூன்று மாதங்கள் அங்கு நிராதரவாக இருந்துவிட்டு இலங்கைக்குத் திரும்பினார்கள்.

**தொழில் நேர்காணல்**

வேலைக்குத் தகுதியானவர்களை முகவர்கள், நேர்காணல் செய்ய வேண்டும் என்ற தேவை இருப்பினும் எப்பொழுதும் இது நடப்பதில்லை. ஆய்வுக்குட்பட்ட வேலைக்குத் தகுதியுள்ள பதினொரு பேரில், பத்துப் பேர் தாம் ஒப்பந்தத்தில் கைச்சாடுவதற்கு முகவர் நிலையத்திற்குச் செல்லவில்லை என்றனர். ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டவுடன் திரும்பவும் வேலைக்குச் செல்லும் 55 பேரில் ஒருவர் மாத்திரம் முகவர் நிலையத்தில் கைச்சாத்திட்டுள்ளார்.

நேர்காணல்கள் இல்லாமை, இனத்துவம், மதம் வயதைப் பொய்யாக்குதல் போன்ற மோசடிகள் ஏற்படுவதற்கு உதவுகிறது. நேர்காணல் ஒரு குறிப்பிட்ட தொழிலுக்கு வேலை தேடுவோரின் தகுதியை நிர்ணயிக்க உதவுகிறது. அத்துடன் கடவுச் சீட்டு, அதிலுள்ள தகவல் என்பதை சரி பார்க்கவும் உதவுகிறது.

உப முகவர்கள் தொழிலாளரைச் சேர்க்கும்போது வெளிநாட்டுக்குப் புறப்படுவதற்கு முன்னதான சம்பிரதாயங்களைச் கவனிக்கின்றனர். பொறுப்பாளர், நேர்காணல் நடத்த இலங்கையில் இல்லாவிட்டால் வேலை தேடுவோரின் கடவுச் சீட்டுகள் மாத்திரமே, அநேகமாக உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர் நிலையங்களிடம் எடுத்துச் செல்லப்படுகின்றன.

தொழிலாளி அநேகமாக, உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவரைச் சந்திப்பதில்லை. உப முகவர் வழங்கும் தகவலில்தான் தங்கியுள்ளார் என்பதை பங்கேற்பாளரை நேர்காணல் செய்யும்போது, SLBFE உத்தியோகத்தர் ஒருவர் ஊர்ஜிதம் செய்து கொண்டார். நேர்காணல் இல்லாமல் தொழிலாளர்களை வேலைக்குச் சேர்ப்பது, வேலைக்கு அமர்த்துவதற்கு முன்னதாக குறிப்பிட்ட தொழிலுக்கு தொழிலாளர்களின் தகுதியை மதிப்பிடப்படாததால் வேலைத் தளத்தில், பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்றும் ALFEA குழு உறுப்பினர் ஒப்புக் கொண்டுள்ளார். இது தூர இடங்களிலிருந்து அல்லது பெருந்தோட்டப் பகுதிகளில் இருந்து வரும் தொழிலாளர்களுக்குப், பொருந்தும், தகுதியின்மை, தாம் வேலை பார்க்கச் செல்லும் இடங்களில் தொழிலாளர்கள் இம்சைக்கு உள்ளாவதற்கு, வழியமைக்கும் சில வேலை கொள்வோர், தொழிலாளி போய்ச் சேர்ந்ததும் முதல் அபிப்பிராயத்திலேயே அவரை நிராகரித்துவிடுவதாக உத்தியோகத்தர் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய சம்பவங்களில், வெளிநாட்டு முகவர், ஒரு வேலை கொள்வோரிடமிருந்து விசாவை விலைக்குப் பெற்று, மற்றுமொரு வேலை கொள்வோரிடம் வழங்க தொழிலாளியை அவரிடம் நகர்த்தி விடுகிறார்.

இது சர்வதேச கோட்பாடுகளின்படி மீறல்களில் கடத்தலாகிறது. தொழிலாளரின் துன்பத்துக்கு உள்ளாகும் நிலை, அவனுக்கு/அவளுக்கு தகுந்த வேலைவாய்ப்பு அல்லது வேலைவாய்ப்புக்கு ஒப்பந்தம் இல்லாததால் அதிகரிக்கின்றது.

**ஆரோக்கியப் பரிசோதனைகள்**

சகல புலம்பெயர் தொழிலாளர்களும், இங்கிருந்து புறப்படுவதற்கு முன்னர், ஆரோக்கியத் தகுதிப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும். 1980 களிலிருந்து பரிசோதனைகள், பதிவு செய்யப்பட்ட ஆய்வு கூடங்களில் அல்லது அரசாங்க ஆஸ்பத்திரிகளில் மேற்கொள்ளப்பட்டன. 2004ம் ஆண்டு தொடக்கம், 2008ம் ஆண்டில் 48% தொழிலாளர்களை இங்கிருந்து பெற்ற சவுதி அரேபியா , குவைத், ஓமான் ஆகிய நாடுகள், பொய்ப்பத்திரங்களைத் தடுக்கவும், மோசமான முகவர்களை களையவும், வளைகுடா ஒத்துழைப்பு மன்ற (GCC) நாடுகளின் சுகாதார அமைச்சர்களின் நிறைவேற்று அதிகார சபையினால் வகுக்கப்பட்ட நியதிகளை உறுதிப்படுத்தவும், இந்தப் பரிசோதனைகளை வளைகுடா ஒத்துழைப்பு மன்றத்தின் (GCC) மருத்துவக் குழுவினால் அமைக்கப்பட்ட வளைகுடா ஒத்துழைப்பு நாடுகளினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மையங்களின் குழுவினால் (GAMCA) பெயரிடப்பட்ட 13 மருத்துவ நிலையங்களிலேயே நடத்தப்பட வேண்டும் என்று நிர்ணயித்துள்ளன. இந்த மருத்துவ நிலையங்கள் இலங்கை MBBS பட்டம் பெற்ற வைத்தியர்களினால் நிர்வகிக்கப்படுகின்றன.

இலங்கையில் தனியார் மருத்துவ நிலையங்களும், தனியார் மருத்துவ நிறுவனங்களின் (Registration) 2006- 21ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் கீழ் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குறுத்துதல் மன்றத்தின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டும். எனினும் சகல நிலையங்களும் பதிவு செய்யப்படவில்லையென ஆய்வு புலப்படுத்தியுள்ளது. ALFEA வின் பிரகாரம் அந்த மூன்று நாடுகளுக்கும் தொழிலுக்காகச் செல்பவர்கள் உட்படும் மருத்துவ பரிசோதனைகள் மீது ஏகபோக உரிமையை அனுமதித்ததன் மூலம், இந்த மருத்துவ நிலையங்களின் மீது, தனியார் மருத்துவ நிலையங்களுக்குப் பிரயோகிக்கப்படும் விதிகளை சுகாதார அதிகாரிகள் அமுல் செய்யத் தவறிவிட்டனர்.

தம் மூலம் வெளிநாடுகளுக்கு வேலைக்காகச் செல்வோர், இங்கிருந்து புறப்படுவதற்கு முன்னர், பதிவு செய்யப்பட்ட மருத்துவ நிலையத்தில் தராதரமுள்ள வைத்தியரினால் பரிசோதனை செய்யப்படுவதை வேலைக்கு ஆட்சேர்க்கும் முகவர் நிலையங்கள் உறுதி செய்தல் வேண்டும். சாதாரணமாக முகவர்கள், பரிசோதனைச் செலவைச் செலுத்தி,

அச்செலவை தொழிலாளரிடமிருந்து பெற்றுக் கொள்கின்றனர்.

என்ன பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன என்பது பற்றித் தொழிலாளருக்குத் தெரியாது, பரிசோதனைகள் அவனது/அவளது விருப்பம் அறிவிக்கப்பட்டு நடப்பதில்லை. ஆனால் அவனால்/அவளால் பரிசோதனை அறிக்கைகளைப் பெற முடியாது. பரிசோதனைகளில் சித்தியடையாதவர்களுக்கு இரண்டாவது அபிப்பிராயம் பெறும் சாத்தியமில்லை. தொழிலாளரின் சம்மதம் இல்லாமல், அறிக்கைகள் நேரடியாக மூன்றாவது தரப்பினரான முகவர்களுக்கு அனுப்பப்படுதல் போன்றன இந்தப் பரிசோதனை தொடர்பான மோசடிகள் பற்றிய குற்றச்சாட்டுகளும் அடங்குகின்றன.

தொழிலாளரின் சம்மதமில்லாமல் மூன்றாவது தரப்பினருக்கு, மருத்துவப் பரிசோதனைப் பெறுபேறுகளை காண்பிப்பது, சர்வதேச சட்டத்தின் கீழ் நோயாளியின் உரிமைகளை மீறுவது மாத்திரமல்லாது, மருத்துவ தார்மீகங்கள் மீதான இலங்கைமருத்துவ மன்றத்தின் வழிகாட்டிகளையும் அவமதிக்கின்றது. மருத்துவ தார்மீகத்தின்படி வைத்தியருக்கும் நோயாளிக்கும் இடையிலான ஒப்பந்தத்தில், அந்தரங்கம் பேணப்படுகிறது. உத்தியோகபூர்வமற்ற முறையில் அது வெளிப்படுத்தப்படுவது, வைத்தியருக்கு எதிராக சிவில் வழக்குக்கான தளம் உள்ள கொந்தராத்து மீறலாகவும் உள்ளது (SLMC,2003) அவன்/அவள் பரிசோதனையில் தோல்வியடையும் போதும், தொழிலாளிக்கு இந்தப் பெறுபேறுகளைப் பெற முடிவதில்லை. ஒரு மருத்துவ நிபுணரிடமிருந்து இரண்டாவது அபிப்பிராயம் பெறவும் ஏற்பாடு இல்லை. இதேவேளையில் ஒரு தொழிலாளர், ஒரு ஏஜென்ஸியிலிருந்து மற்றுமொன்றுக்கு மாற்றப்படுகையில் அல்லது வேலை வாய்ப்பு வழங்கும் நாடு மாற்றப்படும்போதும், முதலாவது ஏஜென்ஸி, தொழிலாளரின் சம்மதம் பெறாமலே மருத்துவப் பரிசோதனைப் பெறுபேறுகளை ALFEA மூலம் மாற்றம் செய்கிறது.

ஒரு பெண் கர்ப்பிணியா என்று அறிவதற்குச் செய்யப்பட்ட பரிசோதனை, கர்ப்பிணி என்பதை ஊர்ஜிதப்படுத்தினால், அவள் வெளிநாடு செல்ல முடியாது. எனினும், மனித உரிமைகள் வாட்ச் (2007) பிரகாரம், வீட்டுப் பணியாளர்களாக புலம்பெயரும் தொழிலாளர்களுக்கு, கர்ப்பிணியாவதைத் தடுப்பதற்குச் சில சமயங்களில், கருத்தடை ஊசி, அவர்களது சம்மதம் இல்லாது அல்லது தெரியாமல் அல்லது மயக்க நிலையில் செலுத்தப்படுகிறது. வெளிநாட்டு வேலைவாய்ப்புச் செல்லும் பெண்கள் புறப்படுவதற்கு ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்களுக்கு முன்னர் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுவதாகவும், அச்சமயத்திலும் அதற்குப் பின்னர் புறப்படுவதற்கு முன்னரும் கருத்தரிப்பதைத் தடை செய்வதற்கு கருத்தடை ஊசி ஏற்றப்படுவதாகவும் ஒரு நேர்காணலின்போது உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர் கூறியிருந்தார்.


இந்த நடைமுறை உடல் ரீதியான நேர்மைத் திறனுக்கான ஒரு பெண்ணின் உரிமையை மீறும் நடைமுறையாகும்.

மருத்துவ சான்றிதழ்கள் வழங்குவதில் பரந்த அளவிலான ஊழல் இருப்பதாக நேர்காணல் செய்யப்பட்ட மருத்துவ நிலையப் பணிப்பாளர் கூறினார். பாரிய நோயுள்ள பெண்கள் வெளிநாட்டுக்கு அனுப்பப்படுவதாகவும், அங்கு வேலைக்குச் சென்ற இடத்தில் பரிசோதனை செய்யப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. திருப்பி அனுப்புவதற்கான செலவை முகவரே பொறுப்பேற்க வேண்டும் என்ற தேவை இருப்பினும், வழமையாக பெண்கள் இந்தச் செலவுகளைக் கொடுக்கவே நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். பாரம்பரிய வியாதிகள், பிரதான சத்திரசிகிச்சைக்கு உட்பட்டமை, போய் சேர்ந்த பொழுது கர்பிணி என்று அங்கு வைத்தியப் பரிசோதனையில் தெரிய வந்தமை போன்ற மருத்துவக்

காரணங்களுக்காக 2007இல் குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரகம் 291 வீட்டுப் பணிப் பெண்களையும், 150 பேரை 2008ஆம் அண்டின் முதல் ஐந்து மாதங்களிலும் திரும்பி அனுப்பியுள்ளது.

GAMCA யினால் அறவிடப்பட்ட மருத்துவப் பரிசோதனைக்கான கட்டணம், இப்பொழுது இல்லை. தென்கொரியாவுக்குச் செல்லும் தொழிலாளர்களுக்கு அரசாங்க மருத்துவ நிறுவனங்களில் இதேபோன்ற பரிசோதனைகளுக்கு அறவிடப்பட்ட 2,500 ரூபாவும் இப்பொழுது செலுத்தப்பட வேண்டியதில்லை. மருத்துவப் பரிசோதனைக்கு உட்பட்ட 158 தொழிலாளர்களில், 10 பேர் எந்தக் கொடுப்பனவையும் செய்யவில்லை. 81 பேர், 2,000 தொடக்கம் 4,000 ரூபா வரை செலுத்தியதாகவும், 23 பேர் 4,000 ரூபா தொடக்கம், 6,000 ரூபா வரை செலுத்தியதாகவும், ஆய்வு புலப்படுத்துகின்றது. 16 பேருக்கு தாம் எவ்வளவு பணத்தைக் கொடுத்தோம் என்று தெரிந்திருக்கவில்லை. இது சகல சம்பிரதாயங்களுக்கும் அவர்கள் இடைத் தரகர்களில் தங்கியிருந்ததைக் காண்பிக்கின்றது. GCC நாடுகளில் ஒன்றான சவூதி அரேபியாவுக்கு வேலை பெற்றுச் செல்பவர்கள் மிகப் பெரிய தொகைகளைச் செலுத்தியுள்ளனர்.

**வரைபடம் 7:ஆய்வுக்குட்பட்டவர்களின் அபிப்பிராயப்படி மருத்துவப் பரிசோதனைச் செலவு.**




ஆரோக்கிய பரிசோதனைகள், வேலை பார்க்கச் செல்லும் நாடுகளிலும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆய்வின் மூலம் , திரும்பவும் வேலைக்குச் செல்பவர்களில் 30% இத்தகைய பரிசோதனைக்கு உட்பட்டதாகத் தெரிகிறது. உதாரணமாக பஹ்றெயினில் வெளிநாட்டிலிருந்து தொழில் பார்க்க வருபவர்களுக்கான , அரசாங்க மத்திய சுகாதார அல் ராஸி சுகாதார நிலையத்திற்கு பரிசோதனைக்காக அனுப்பப்படுகின்றனர். இது GAMCA நிலையமாகும். அங்கும் தொழிலாளர்கள், துஷ்பிரயோகம், மோசடிகளுக்கு உள்ளாகும் சாத்தியம் உள்ளது. வேலைக்கு வருபவர்கள் தமது மருத்துவ அறிக்கையில் ஆங்கில அரேபிய மொழியில் தமது சம்மதத்தை தெரிவித்து கைச்சாத்திட வேண்டும் என்று GAMCA வழிகாட்டல்கள் குறிப்பிடுகின்ற போதிலும், அவர்கள் மொழியைப் புரிந்து கொள்ளாது, அல்லது பத்திரத்தை நிரப்புகின்றனர்.

சம்மதம் அல்லது கையொப்பம் அநேகமாகப் பெறப்படுவதில்லை. பஹ்றெயின் றிபூன் (Tribune) வெளியான ஆய்வு அறிக்கையில், தமது மருத்துவப் பரிசோதனைகளுக்கு தமது அனுசரணையாளரே சம்மதம் தெரிவித்து கையொப்பமிட்டதாக பல ஆய்வுக்குட்பட்டவர்கள்

தெரிவித்துள்ளனர்.

**பயிற்சி**

குறிப்பிட்ட வகையான புலம் பெயர் தொழிலாளர்களுக்கு இங்கிருந்து புறப்படுவதற்கு முன் பயிற்சி பெறுதல் அவசியமாகும். திரும்பவும் தொழிலுக்கு செல்வோர், சுய அடிப்படையில் செல்வோர் என்பவர்களுக்கு பயிற்சி நெறியைப் பின்பற்றுவதில் விதிவிலக்கு வழங்கப்பட்டுள்ளது. மோசடி நடவடிக்கைகளுக்கு எதிரான பாதுகாப்பாகவுள்ள பயிற்சியை தேவைப்படும் அனைவரும் பெறுவதை உறுதிப்படுத்தும் விதத்தில் அது கிரமமான முறையில் நடத்தப்படல் வேண்டும். பயிற்சிச் சான்றிதழ்கள் வழங்குவதில் ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகள், பதிவு செய்யப்படுபவர்களின் பட்டியல்கள், அறிக்கைகள் கணனிமயமாக்கப்படுவதையும், ஒரு நாளில் இரண்டு தடவைகள் பயிலுனரின் கையொப்பங்களைப் பெறுதல் பயிற்சி நிலையங்களை மேற்பார்வையிடுதல், உட்பட SLBFE கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்க வழியமைத்துள்ளது. எனினும் முகவருக்கு பணம் செலுத்துவதன் மூலம் பயிற்சி இல்லாமல் தொழில் பார்க்கச் செல்பவர்கள் பற்றிய அறிக்கைகள் கிடைக்கப்பட்டுள்ளன. (அர்ஷாட், 2007) 2003க்கும், 2008க்கும் இடையில் முகவர்கள், உப முகவர்களூடாக வேலைக்குச் சென்றவர்களில் 34 சதவீதமானோர் கட்டாய பயிற்சியை பெறவில்லை என்பதை ஆய்வு புலப்படுத்துகின்றது.

SLBFE ஒரு நியாயமான கட்டணத்தை பயிற்சிக்கென அறவிடுகிறது. இந்தப் பணத்தை ஏஜென்ஸி அல்லது வேலைபெற்றுச் செல்வோர், செலுத்துகின்றனர். 6,000 ரூபா வழங்கிய ஆய்வுக்குப் பதிலளித்த ஒருவர் தவிர பயிற்சிக்கு அறவிடப்பட்ட கட்டணம் நியாயமானதாகவே தோன்றுகிறது.

**தொழில் வாய்ப்பு ஒப்பந்தம்/ஒப்பந்த ரீதியான கடப்பாடுகள் பற்றிய அறிவு போதாமை**

தொழில் வாய்ப்பு ஒப்பந்தமானது தொழிலாளிக்கு அவன்/அவளுக்கான பாதுகாப்பும், வேலைக்குச் சேர்ப்பதற்கான விதிகள், நிபந்தனைகளுக்கான ஆவண ரீதியான நிரூபணம் தருவதுமான, வேலை கொள்வோருக்கும் தொழிலாளிக்கும் இடையிலான ஒப்பந்த ரீதியான உறவின் அடிப்படையாக திகழ்கிறது. தொழில் வாய்ப்புக் காலம், தொழிலாளர்களின் கடமைகள், சம்பளம், கொடுப்பனவு வழிமுறை, ஓய்வுத் தினங்கள், இலவச உணவு வழங்கல், தங்குமிடவசதி, வைத்தியப் பராமரிப்பு இலங்கையிலிருந்து தொழில் பார்க்கச் செல்லும் நாட்டிற்குச் செல்லவும், திரும்பவும் போக்குவரத்துச் செலவுகள் போன்ற வேலை கொள்வோரின் கடப்பாடுகள், என்பனவற்றுடன் முக்கியமாக தேர்ச்சி பெறாத மற்றும் வீட்டுப் பணியாளர்கள், வேலைவாய்ப்புக் காலம், தொழிலாளியின் கடமைகள், என்பனவற்றைக் குறிப்பிடும் மாதிரி வேலைவாய்ப்பு ஒப்பந்தத்தை, SLBFE உருவாக்கியுள்ளது. இது ஒப்பந்தமிட்டு, இலங்கைதூதரக உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்டு, தொழிலாளிக்கு அவரது கையொப்பத்திற்காக அனுப்பப்படுகிறது. அவர் ஒப்பந்தத்தை வாசித்த பின்னர் SLBFE உத்தியோகத்தர் முன்னிலையில் அதில் கைச்சாத்திடல் வேண்டும்.

அதிகாரச் சட்டப் பிரகாரம், வேலை பார்க்கச் செல்லும் நாட்டின் தொழில் அமைச்சுக்கு ஒரு கொந்தராத்துப் பிரதி அனுப்பப்படல் வேண்டும். (பிரிவு 40(3) ஒப்பந்த மீறல்களுக்கு உத்தரவுப் பத்திரம் பெற்ற ஏஜென்ஸி பொறுப்பேற்க வேண்டும்.

ஒப்பந்தங்கள் தொழில், மற்றும் வேலைவாய்ப்பு வழங்கும் நாடு என்பதற்கு அமைவாக வேறுபடும் சைப்பிறஸில், சகல வகையிலான புலம்பெயர் தொழிலாளர்களும் தொழில் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். அது ஒப்பந்த வேலை கொள்வோரையும் கடப்பாடு உடையவர்களாக்குகிறது. மொறிஸியஸில் கைத்தொழில் துறையில் வேலைக்குச்

சேர்ப்பவர்களுக்கு சட்டம் உண்டு. தென்கொரியாவில் தமது கொந்தராத்துக் காலம் வரை சட்டத்தின் பாதுகாப்பு உள்ளது. எனினும், இலங்கைத் தொழிலாளர்கள் கூடுதலாக உள்ள மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் சட்டங்கள், தேர்ச்சியற்றவர்கள் வீட்டுப் பணியாளர் போன்ற சில வகையினருக்கு சொல்லுபடியாகாது. ஒப்பந்தக்காரர்கள் இருப்பினும், அவை வேலை கொள்ளும் நாடுகளின் தொழில் அமைச்சுக்கு அனுப்பப்படினும், நீதிமன்றத்தின் மூலமான அமுலாக்கம் கடினமானதாகும்.

ஆய்வுக்கு உள்ளான தொழிலுக்குப் புறப்படுவதற்கு முன் பல்வேறு கட்டங்களில் உள்ள 120 தொழிலாளர்களில், 9 சதவீதமானோரே ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். திரும்பவும் வேலைக்குச் செல்வோரில், 52 சதவீதமானவர்களே கைச்சாத்திட்டுள்ளனர். ஏஜென்ஸி மூலம் திரும்பவும் வேலைக்குச் சென்றவர்களில் 35 சதவீதமானோரும், உபமுகவர் மூலம் வேலைக்குச் சென்ற 32 சதவிகிதமானோரும், ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை. SLBFE நேரடியாக வேலைக்குச் செல்பவர்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதை வலியுறுத்தவில்லையாதலால் நேரடியாக வேலை வாய்ப்புப் பெற்றுச் சென்றவர்களில், 17 சதவிகிதமானோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை.

ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் தொழிலாளருக்கு புரியும்படியான மொழியில் ஒப்பந்தம் வாசிக்கப்பட்டு விளக்கம் அளிக்கப்பட வேண்டும் என்பது ஒரு சட்ட ரீதியான தேவையாகும் ( பிரிவு 40(1)) எனினும், சகல ஒப்பந்தங்களும் சிங்களம் அல்லது தமிழில் இருப்பதில்லை, 2007 ஆண்டு வரை முகவர் அல்லது உப முகவர், தொழிலாளர் சார்பில் கைச்சாத்திட முடிந்தது. கொந்தராத்தை புரிந்து கொள்ளாமையால், மோசடிகள் ஏற்படுகின்றன. உதாரணமாக தாம் செய்ய வேண்டிய தொழில் என்ன என்பதை புரிந்திராத காரணத்தினால், 2008 ம் ஆண்டில் மலேசியாவிலிருந்து 600 வீட்டுப் பணியாளர்கள் நாடு திரும்ப வேண்டியதாயிற்று ( ஆர்ஜன்ற், 2007)

SLBFE இந்தப் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு தொழிலாளர்களுக்கு விதிகளும், நிபந்தனைகளும் சிங்களத்தில் அல்லது தமிழில் விளங்கப்படுத்தப்பட்ட பின்னர், அவர்கள் ஒரு உத்தியோகத்தரின் முன்னர் கைச்சாத்திடும் தேவையை 2007 ஆம் ஆண்டு தொடக்கம் ஏற்படுத்தியுள்ளது.

தொழிலாளர்கள் ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தை வாசித்து அதன் விளக்கமளிக்கப்பட்டதும், தாம் தொழில் நிபந்தனைகள், வேலை கொள்வோர் செலுத்தும் பயணச் செலவு உட்பட செலவுகள் என்பன பற்றித் தமக்குத் தெரியும் என்பதை உறுதிப்படுத்தி, ஆவணத்தில் கைச்சாத்திடுகிறார்கள்.

**மாற்றீட்டு ஒப்பந்தம்**

கொந்தராத்தை மாற்றி அமைத்தல் பதிலுக்கு வேறு ஒப்பந்தத்தை வைத்தல் என்பன SLBFE தொழிலாளர்களைப் பாதுகாக்க ஆகக்குறைந்த தராதரங்களையாவது அறிமுகப்படுத்த எடுத்த முயற்சிகளை பயனற்றதாக்குகின்றன. தேர்ச்சி பெறாத, மற்றும் வீட்டுப் பணியாளர்களுக்கான ஒப்பந்தம் சைப்றஸ், இஸ்ரேல், சிங்கப்பூர், தென்கொரியா தவிர்ந்த ஏனைய தொழில் வழங்கும் நாடுகளில் சட்டவலுவற்றதாக உள்ளது.

வேலை பார்க்கச் சென்ற இடத்தில், மாற்றீட்டுக் கொந்தராத்து சமர்ப்பிக்கப்படுவது சாதாரணமானது. இதில் வேலைவாய்ப்பு விதிகளும் நிபந்தனையும், மாற்றப்பட்டு துஷ்பிரயோகம் இடம்பெறக்கூடிய நிலைமைகளில் வேலை பார்க்கவும், அல்லது குறைந்த சம்பளம், குறைந்த நலன்கள் இரண்டும் இருக்கக்கூடியதாகவும் அமையும். (ஹெட்டியாராச்சி,2004) இது வீட்டுப் பணியாளர்களை பொறுத்தவரை இல்ல வகை,

இல்லத்தில் உள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை, வேலை நேரம், சம்பளம் என்பன தொடர்பானதாக இருக்கும். எழுதப்பட்ட மொழியை வாசிக்க முடியாததாலும், பரிச்சயமற்ற சில சமயங்களில் பகைமையான சூழலில் இருப்பதாலும், தொழிலாளர்கள் அதனைப் பற்றி வினா எழுப்பவோ, நிராகரிக்கவோ முடிவதில்லை. தமது சொந்த அல்லது வீட்டுச் சொத்துக்களை அடமானம் வைத்து பெருந்தொகைப் பணத்தை திருப்பிக் கொடுக்க வேண்டியுள்ளதால் ஒரு தொழிலை ஏற்றுக் கொள்ளும் நிர்ப்பந்தத்தில் அவர்கள் உள்ளனர். வேலை கொள்வோரின் விதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் இணங்குமாறு வெளிநாட்டு முகவரும், அவர்களுக்கு அழுத்தம் கொடுப்பார்கள்.

திரும்பவும் வேலை பார்க்கச் சென்ற 57 தொழிலாளர்களில் 37 பேர், தாம் வேலை பார்க்கச் சென்ற இடத்தில், ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஒப்பந்தத்தில் கையொப்பமிட நேர்ந்தது என்றனர். 29 பேர் ஒப்பந்தம், அரபு மொழியில் இருந்ததாகவும், மூன்று பேர் இத்தாலிய மொழியில் இருந்ததாகவும், இருவர் கிரேக்க மொழியில் இருந்ததாகவும் தெரிவித்தனர். (சிலரிடமிருந்து பல்வேறு விதமான பதில்கள் கிடைத்தன)

**தொழில் மாற்றீடு**

நாஹா கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையைப் பூர்த்தி செய்ததும் அவரது தந்தை தனது நண்பரான உப முகவருக்கு, வேலை பெற்றுத் தருவதற்காக வழங்கவென 60,000 ரூபாவைக் கடனாகப் பெற்றார். நாஹா இந்தக் கடனை, தனது சம்பளத்திலிருந்து திருப்பிச் செலுத்துவதாக இருந்தது. 2006 ஜூனில் நாஹா, கட்டாரில் ஒரு அலுவலக ஊழியராக வேலை பார்க்க, நாட்டை விட்டுப் புறப்பட்டார். உறுதியளிக்கப்பட்ட தொழில் கிடைக்கவில்லை.அதற்குப் பதிலாக ஒட்டகச் சவாரிக்கும் தொழுவத்தை சுத்திகரிப்பதற்கும் அவர் பயன்படுத்தப்பட்டார். அவருக்குச் சம்பளம் வழங்கப்படாததுடன் போதிய உணவும் கிடைக்கவில்லை. பள்ளிவாசலில் நாஹாவைச் சந்தித்த ஒரு இலங்கையர், அவர் தந்தையுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள உதவினார். தந்தை உப முகவரிடம் இது பற்றிக் கூறியபோது நாஹா சிறிது பொறுமையாக இருத்தல் வேண்டும் என்று அவர் கூறினார். மூன்று மாதங்களின் பின்னரும், தொழிலில் எவ்வித மாற்றமும் ஏற்படாததால் அவரது நண்பன் இலங்கைக்குத் திரும்புவதற்கான விமானப் பயணக் கட்டணத்தைச் செலுத்தியதும் நாடு திரும்பினார். உப முகவரிடம் பணத்தை திருப்பித் தருமாறு கேட்டபொழுது அவர் மறுத்துவிட்டார். அதன் பின்னரே அந்த முகவர் மற்றும் பலரையும் ஏமாற்றியமை தெரிய வந்துள்ளது.

**வீடு அல்ல ஒரு பண்ணை.**

பண்டாரவுக்கு, குவைத்தில் உள்ள ஒரு நண்பர் 35,000 ரூபா சம்பளத்தில் ஒரு வீட்டில் சாரதியாக தொழில் பெற்றுத் தருவதாகக் கூறினார். விமானப் பயணச் சீட்டுக் கட்டணம் உட்பட இங்கிருந்து புறப்படுவதற்கு முன்னதான செலவாக 53,000 ரூபாவை பண்டார செலுத்தினார். அவர் குவைத் போய்ச் சேர்ந்ததும் ஒரு வீட்டிற்கு அழைத்துச் செல்லப்படவில்லை. கால்நடைப் பண்ணை ஒன்றுக்கே அழைத்துச் செல்லப்பட்டார். தனது நண்பனை அதிருப்திப்படுத்த விரும்பாத அவர் தயக்கத்துடன் அங்கு வேலை பார்க்க இணங்கினார். ஒரு மாதத்தின் பின்னர் உறுதியளிக்கப்பட்ட 35,000 ரூபாவுக்குப் பதிலாக 16,000 ரூபாவே வழங்கப்பட்டபோது பண்டார விமானப் பயணக் கட்டணத்தைச் செலுத்தி நாடு திரும்பினார்.

உப முகவர்கள் உள்ளிட்ட வெளிநாட்டு உள்நாட்டு முகவர்கள் இத்தகைய ஏமாற்றுச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர். SLBFE தேர்ச்சியற்ற மற்றும் வீட்டுப் பணியாளர்களுக்கு ஆகக்குறைந்த சம்பள அளவை நிர்ணயித்துள்ளபோதிலும், முகவர்கள் இந்த தொழில் கட்டளையில் ஆகக்குறைந்த சம்பளத்தைக் காண்பித்துவிட்டு, இத் தேவையைப் பூர்த்தி செய்யாமல், வெளிநாட்டு முகவருடன் குறைந்த சம்பளத்தை செலுத்துவதற்கான உடன்படிக்கையை செய்து கொள்கின்றனர். கட்டார் செல்லும் தொழிலாளர்களுக்கு SLBFE யினால் சீராக்கப்பட்ட தொழில் கட்டளையில் குறிப்பிடப்படும் ஆகக்குறைந்த சம்பளம் 900 கட்டார் ரியாலாகும். ஆனால் வெளிநாட்டு முகவருடனான உடன்படிக்கையில் கட்டார் 600 ரியாலே குறிப்பிடப்பட்டிருப்பதாக ALFEA தெரிவிக்கின்றது.(ஹெட்டியாராச்சி 2004) பங்களாதேஷ் போன்ற நாடுகளுடன் போட்டி காரணமாக இத்தகைய ஏமாற்று இடம்பெறுவதாக SLBFE கூறுகிறது.

அண்மையில் நடந்த மற்றுமொரு சம்பவத்தில் Janitorial சேவைக்கென திரட்டப்பட்ட 200 தொழிலாளர்களை வேலை கொள்வோரினால் இணங்கப்பட்ட சம்பளம் வழங்கப்படாததால் SLBFE திரும்பி அழைக்க நேர்ந்துள்ள Janitorial சேவைக்கான ஆகக்குறைந்த ஒப்பந்தக் கொடுப்பனவு KD 60 ஆக இருக்கையில் தொழிலாளர்களுக்கு KD 40 தான் வழங்கப்பட்டது. இலங்கை முகவர் நிலையங்கள் அவர்களுடன் இணைந்து குறைந்த சம்பளம் வழங்குவதற்குக் காரணமாக இருந்துள்ளனர். (ஐலன்ட் 2008) குவைத்தில் உள்ள இலங்கைத் தூதுவரின் கூற்றுப்படி தொழிலாளர்களுக்கு உண்மையான சம்பளம் மறுக்கப்பட்டு, உப ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதன் மூலம் உள்ளூர் முகவர் நிலையங்கள் அவர்களின் பாதிச் சம்பளத்தை பெற்றுக் கொள்வதாகத் தெரிகிறது. இது சம்பந்தமான வழக்கு ஒன்று தற்சமயம் குவைத்தின் தொழில் நீதி மன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறது. (டெய்லி மிறர் 2009 a b)

ஒப்பந்த மாற்றீடுகளை நிறுத்துவதற்கு SLBFE தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்று ALBFEA உத்தியோகத்தர் நேர்காணலில் கருத்துத் தெரிவித்துள்ளார். வேலை வழங்கும் நாட்டில் குறிப்பிட்ட அரசாங்க அமைச்சு ஒப்பந்தத்தை அதிகாரபூர்வமாக்கி அதற்கு சட்டபூர்வ செல்லுபடியாகும் தன்மையை வழங்கும் விதத்தில் விஸா உறுதிப்படுத்தப்படுவதற்கு முன்னதாக இலங்கையில் உள்ள அந்நாட்டுத் தூதரகத்தில் ஒப்பந்தம் வைக்கப்படல் வேண்டும் என்றும் அவர் கருதுகிறார்.

திரும்பவும் வேலைக்குச் சென்றவர்களில் 40 சதவீதமானோர் தாம் தொழில் பார்க்கச் சென்ற நாடுகளுக்குப் போய்ச் சேர்ந்ததும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டிருப்பதாக ஆய்வு புலப்படுத்துகின்றது. இதில் உத்தியோக பூர்வமற்ற வலையமைப்பு மூலம் சென்ற 73 சதவீதத்தினரும், உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர் மூலம் சென்ற 33 சதவிகிதமானோரும், உப முகவர் மூலம் சென்ற 42 சதவிகிதமானோரும் அடங்குவர்.

# 6. அபாயகரமான அம்சமாக, புலம்பெயர் தொழிலாளியின் மனப்போக்குகள்

வெளிநாட்டில் வேலை வாய்ப்பை விரும்பும் புலம்பெயர் தொழிலாளியின் நடத்தை ஊழல் அபாயங்களுக்கு பங்களிக்கும் ஒரு அம்சமாகும். தகுந்த வேலைவாய்ப்பு இல்லாமை, பொருளாதாரத் தேவை, சிறப்பான வாழ்வைத் தேடுதல், வெளிநாட்டில் வேலை பார்த்துத் திரும்பியவர்கள் பெற்றுள்ள பொருளாதார வெற்றி, எதிர்காலச் சம்பாதிப்பில் ஒரு பகுதியை அபாயகரமானதான ஒரு முதலீட்டில் ஈடுபடுத்தல், சரியான தகவல் கிடைக்காமை, உத்தியோகபூர்வமற்ற வளங்களில் நம்பிக்கை வைத்தல் என்பன அபாயத்தை எதிர்கொள்ளும் நடத்தைக்குத் தூண்டுதலாக உள்ளன. இந்தப்பகுதி, தொழில் தேடுவதில் தோல்வியை கண்டவர்களின் பதில்கள் அவர்கள் ஏன் தொடர்ந்தும் அபாயங்களை எதிர்கொள்ள விரும்புகிறார்கள் என்பனவற்றின் விளைவுகளை பகுப்பாய்வு செய்கின்றது.

இந்த ஆய்வுக்கென, வேலை பெறுவதில் தோல்வி கண்ட 42 பேர் நேர்காணல் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 13 பேர் பெண்கள் 29 பேர் ஆண்கள். இவர்களில் கூடுதலானோர் தரம் 5 வரை கல்வி கற்றவர்கள், 7 பெண்களும், 12 ஆண்களும் தரங்கள் 6-10 வரை கல்வி கற்றவர்கள் ஆண்கள், கல்விப் பொதுத்தராதர உயர் கல்வி பெற்றவர்கள். பெண்கள் கணனி, தையல் என்பவற்றில் மாத்திரம் தேர்ச்சி பெற்றிருக்கையில் ஆண்கள் பல்வேறு வகையான தேர்ச்சிகளைப் பெற்றிருந்தனர். இருவர் எதிலும் தேர்ச்சி பெறவில்லை. நேர்காணல் சமயத்தில் அநேகமானோர் தேர்ச்சி பெற்ற உத்தியோகபூர்வமற்ற துறையில் தொழில் பார்த்துக் கொண்டிருந்தனர். சில தேர்ச்சிகள் இருப்பினும் பெண்கள் வெளிநாடுகளில் வீட்டுப் பணிகளையே நாடினர். ஆண்கள் சிற்றூழியர்களாக, சுத்திகரிப்பாளர்களாக எடுபிடி வேலையாளராக தொழில் தேடினர்.

சொந்தக் காரணங்களினால் நான்கு பேரும் இருவர் ஆரோக்கியம் காரணமாகவும், ஒருவர் தகுதிகாண் பரீட்சையில் சித்தி பெறாததாலும், புலம் பெயர் முயற்சியில் தோல்வி கண்டபோது, ஏனையோர் ஊழல் மற்றும் ஏமாற்றுதலுக்கு உட்பட்டுள்ளனர். தோல்வியில் முடிந்த புலம்பெயர்வுகளில் 14 முகவர் நிலையங்களும், 15 உப முகவர்களும், 14 உறவுக் குழுக்களும் பொறுப்பாக இருந்துள்ளன. 14 மோசடிகள் காணப்பட்டன. இவற்றில் மூன்று பேர் விடயங்களில் வேலை வாய்ப்பு முகவர் நிலையங்களும், 6 பேரைப் பொறுத்த வரை உப முகவர்களும், 5 பேரைப் பொறுத்தவரை உறவினர் குழுக்களும் காரணமாக இருந்ததாக அறியப்பட்டுள்ளது. அநேகமானோர் விடயங்களில், முகவர்கள் அல்லது உப முகவர்கள், 400,000 ரூபா வரையிலான பணத்தைச் சூறையாடியுள்ளனர். ஆய்வுக்கு உட்பட்ட நான்கு பேர் நிராதரவாக விடப்பட்டனர். மூன்று பேர் திருப்பி அனுப்பப்பட்டனர். வேறு ஒரு நாட்டிற்கு அனுப்பப்பட்ட ஒருவர் தாமாகவே இலங்கை திரும்பியுள்ளார். இவர்கள் அனைவரும், சில ஆண்டுகள் பாடசாலையில் கல்வி கற்றிருப்பினும், கூடுதலானோர் தொழில் பார்த்தவர்களாக இருக்கின்ற போதிலும், தமக்குக் கிடைத்த வாழும் திறன்களை, இடைத் தரகர்களின் அதிகாரபூர்வத் தன்மையை சரிவர அறிந்து கொள்ளப் பயன்படுத்தாமல், வேலை வாய்ப்பு பெறுவதற்கு கணிசமான தொகையைச் செலுத்தியுள்ளனர். புலம்பெயர்ந்து தொழில் பெறும் முயற்சியில் முதற் தடவை தோற்ற போதிலும் ஆய்வுக்குட்பட்ட ஆறு பேர், இரண்டாவது முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர். மூவர் மத்திய கிழக்கில் அத்தகைய நாட்டுக்குச் செல்வதற்கும், இருவர் அதே பிராந்தியத்தில் உள்ள நாட்டிற்கும் செல்ல முயற்சி செய்துள்ளனர். ஒருவர் தவிர்ந்த ஏனையோர், அதே மாதிரியான தொழில் பெறுவதற்கு, முதல் முயற்சி போன்று அத்தகைய இடைத்தரகரைப் பயன்படுத்தியுள்ளனர்.

இரண்டாவது தடவையும் வேலை பெறுவதில் தோல்வி கண்டமைக்கான காரணம், முதல் முயற்சியின் தோல்விக்கான காரணமாகவே உள்ளது. முதல் முயற்சியில் தாம் எதிர்நோக்கிய தடைகளைக் கடக்காது தொடர்ந்தும் புலன்பெயர்வதற்கு நான்கு பேர் முயற்சி எடுத்துள்ளனர். ஒருவர், இரு தடவைகளிலும் வைத்திய பரிசோதனையில் சித்தியடையவில்லை. மற்றுமொருவர், இரண்டாவது தடவையும் தனது நண்பர் மேல் நம்பிக்கை வைத்துள்ளார். மூன்றாவது நபருக்கு இரண்டு தடவைகளும் குடும்பத்தினரின் தடைகள் காரணமாக தொழில் பெறும் முயற்சி தோல்வி கண்டது. நான்காவது நபர், ஈராக்கிற்கு செல்வது சட்டபூர்வமாக அனுமதிக்கப்படாது. அங்கு செல்வது கஷ்டம் என்று தெரிந்திருந்தும், இரண்டாவது முயற்சிக்கும் பணம் செலுத்தியுள்ளார்.

முதலாவது முயற்சியில் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்யும் விருப்பமே மீண்டும், மீண்டும் முயற்சி மேற்கொள்ளத் தூண்டும் வலுவான அம்சமாக உள்ளது. ஈராக், சைப்பறஸ் போன்ற நாடுகளில், தொழிலாளர்களுக்கு, வழங்கப்படும். கவர்ச்சிகரமான சம்பளங்களும், மற்றுமொரு முயற்சி மேற்கொள்வது பெறுமதியானது என்ற நம்பிக்கையூட்டும் மற்றுமொரு காரணமாகும். அனைவருக்கும், எதிர்காலத்தில் கிடைக்குமென நம்பப்படும் வருமானம், நன்மைகள் என்பன, ஏற்படக்கூடிய அபாயங்களைத் துச்சமாக எண்ண வைத்துள்ளது. எப்படியாவது வெளிநாட்டுக்குச் சென்று விட அவர்கள் விரும்புகிறார்கள்.

# 7. முடிவுரையும் விதந்துரைகளும்

மூன்று தசாப்த காலத்திற்கு முன்னர், தொடக்கம் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக பெருமளவிலானோர் செல்லத் தொடங்கியது முதல், புலம்பெயரும், தனி நபரான தொழிலாளிக்கும், அரசுக்கும் நன்மை பயக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் விளைவாக, சட்டங்கள் வகுக்கப்பட்டு அவற்றை அமுலாக்க SLBFE யும் அமைக்கப்பட்டது. 2009 தேசிய தொழில் புலம்பெயர் கொள்கையும் அதிகாரச் சட்டத்திற்கான திருத்தமும், பாதுகாப்பாக வேலைக்குப் புலம்பெயர்வதற்கான அரச கடப்பாட்டை மீண்டும் வலியுறுத்தின.

எவ்வாறாயினும், சட்ட விரோத வழிமுறைகளும், ஒழுங்கற்ற வர்த்தக நடவடிக்கைகளும், தொழில் புலம்பெயர்வின் நன்மைகளை தொடர்ந்தும் தாழ்வுபடுத்தி வந்துள்ளன. ஆய்வுக்கு உட்பட்டவர்களிடையே, ஆட்சேர்த்தலில் ஊழல் பற்றிய எண்ணம் மிகக் கூடுதலாகக் காணப்பட்டது. இந்த அமைப்பில் கூடுதலான துஷ்பிரயோகம் இருப்பதாக பெரும்பான்மையானோர் கருதினர். தெரிந்து தீர்மானம் எடுப்பதற்கு போதிய தகவல் கிடைக்கப் பெறவில்லை. வேலை தேடுவோரிடையே விழிப்புணர்வு கூடுதலாக இருக்கவில்லை. வேலைக்கு ஆட்சேர்போரின் நம்பகத் தன்மையை ஆங்காங்கு கேட்டுத் தெரிந்து, தெரிந்தே அறிந்து கொள்ள வேண்டியுள்ளது.

புலம்பெயர் வேலைவாய்ப்பு வட்டத்தில், ஊழல் அபாயம் உள்ளது. ஆனால் அரசியல் பொருளாதார, நிர்வாக அல்லது சமூக ரீதியாக நாட்டின் சகல நிறுவனங்களிலும், நிலவும் ஊழலின் பிரதிபலிப்பாகவே இது காணப்படுகின்றது. ஊழல் அபாயங்கள் பற்றிய இந்த ஆய்வு, புலம்பெயர் வேலைவாய்ப்பு, எவ்வித ஆக்கபூர்வமான பெறுபேறுகளையும், தரவில்லை என்றும் அரசு எடுத்த நடவடிக்கை பயன்தரவில்லை என்பதற்கான இலக்குகளுடன் நடத்தப்பட்டதாக கருதக்கூடாது. இந்த சீராக்கல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காவிட்டால், சட்டவிரோத நடவடிக்கைகளும், ஊழல் அபாயங்களும் மேலும் விரிவாக இருந்திருக்கும்.

இந்த ஆய்வு, விரிவான எழுத்து மூல விமர்சனம், சம்பவ ஆய்வு, பங்கேற்பாளருடனான நேர்காணல் உள்ளிட்ட மாதிரி மதிப்பீடு ஆகியவற்றின் அடிப்படையிலானது. அரச ஏஜென்ஸிகள், உப முகவர்கள், ஏனைய நபர்கள், உறவு வலயங்கள், பதிவு செய்யப்படாத ஏஜென்ஸிகள், பல்வேறு அரசாங்க அமைச்சுக்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், திணைக்களங்கள், தனிப்படச் செயற்படுவோர் அல்லது கூட்டாகச் செயற்படுவோர் என்று வேலைக்கு ஆட்சேர்க்கும் வழிமுறையில் சம்பந்தப்பட்ட அனைவராலும், ஊழல் நடவடிக்கைகள் தூண்டப்பட்டிருப்பதை ஆய்வு புலப்படுத்துகின்றது.

SLBFE யினால் பேணப்பட்டுள்ள முறைப்பாடுகள், ஏழ்மையில் இருந்து விடுபட்டு தமது பொருளாதர சமூக அந்தஸ்தை மேம்படுத்துவதற்கென புலம் பெயர் வேலை வாய்ப்பை நாடும் தேர்ச்சியற்ற மற்றும் வீட்டுப் பணியாளர்கள் (அனைவரும் பெண்கள்) கூடுதலாக சுரண்டலுக்குட்படும் சாத்தியம் இருந்ததைப் புலப்படுத்துகின்றன. இந்த வகையான புலம்பெயர் தொழிலாளர்கள், அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் தொழில் சட்டங்கள் இல்லாத, சீராக்கல் செய்யப்படாத ஆட்சேர்க்கும் தொழில் உள்ள மத்திய நாடுகளுக்கு கூடுதலாகச் செல்வது அவர்கள் இன்னலுக்கு உட்படுவதை அதிகரிக்கின்றது.

குறைந்த வருவாயுள்ள இலங்கையர்கள் பலருக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு வழங்கும் சில உத்தரவுப் பத்திரம் பெற்ற ஏஜென்ஸிகள், தொழில்சார் வல்லமையுடன் செயற்பட்டுள்ளன. ஆனால் ஏனையோர் சட்டத்திற்கு அமைவாக நடக்கவில்லை என்பதை

மதிப்பீடு புலப்படுத்துகிறது. உத்தரவுப் பத்திரம் பெற்ற ஏஜென்ஸிகளில் 70 சதவீதமானவை, இத்தகைய தொழிலில் ஈடுபடுவதற்கான திறமைகளைக் கொண்டிராது அதன் விளைவாக தொழில்சார் வல்லமையுடன் செயற்படாத முன்னர் வெளிநாடுகளில் வேலை பார்த்த அல்லது உப முகவர்களால் நிறுவப்பட்டனவாகும். சட்டபூர்வ தேவைகளையும், நடைமுறைகளுக்கும், மதிப்பளிக்காமை, புலம்பெயர் தொழிலாளர்களிடமிருந்து கட்டணங்கள் அறவிடுதல், போலியான தொழில்களை வழங்க முன்வருதல். நேர்காணல் இல்லாமல் ஆட்சேர்த்தல், சம்பளம், தொழில் நிபந்தனைகள், ஒப்பந்த மாற்றீடு பற்றிய தகவல்களை ஒழித்துவிடுதல், வெளிநாட்டுப் பொறுப்பாளர்களுடன் கூட்டுச் சேர்தல் என்பன மோசடிகள் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களைப் பாதிக்கும் ஊழல் அபாயங்களில் சிலவாகும். போலி ஆவணங்களைப் பயன்படுத்தல், தடை செய்யப்பட்ட இடங்களுக்கு ஆட்சேர்த்தல் என்பன ஏனைய சட்டவிரோத நடவடிக்கைகளாகும்.

உத்தரவுப் பத்திரம் பெற்ற ஏஜென்ஸிகளுக்கு தொழிலாளர்களைத் தேடித்தரும் உப முகவர்களாலேயே, ஆட்சேர்த்தலில் பல மோசடிகள் ஏற்படுகின்றன. அவர்களுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரம் இல்லை, ஆனால் ஆட்சேர்க்கும் வழிமுறையில் தம்மை நிலை நாட்டிக் கொண்டுள்ளனர். உத்தரவுப் பத்திரம் பெற்ற ஏஜென்ஸிகள் அவர்களை தமது சட்டபூர்வ ஆட்சேர்த்தலுக்குப் பயன்படுத்துகின்றன. ஆனால் வேலை தேடுவோரை ஏமாற்றுதல் உட்பட அவர்களின் நடவடிக்கைகளுக்கான பொறுப்பை ஏற்பதில்லை. சில உத்தரவுப் பத்திரம் பெற்ற ஏஜென்ஸிகள், சட்டவிரோத ஆட்சேர்த்தலில், உப முகவர்களுடன் இணைந்தும் செயற்படுகின்றன. ALFEA பயனுள்ள பங்கை வகித்துள்ளது. ஆனால் அதன் அங்கத்தவர்கள், ஈடுபடும் மோசடிகள், ஏமாற்று நடவடிக்கைகள் என்பன அதனை தார்மீக, தொழில்சார் வல்லமையில் இயங்க வைக்க முடியவில்லை. உள்ளக அபிப்பிராய பேதங்கள் முகாமைத்துவத்தில் கணக்குக் கூறும் தன்மைக் குறைவு, SLBFE யுடனான நெருக்கடி என்பன புலம்பெயர் தொழிலாளர்களில் ஆக்கபூர்வ மற்ற பாதிப்பை ஏற்படுத்தி ALFEA ஆக்கபூர்வமான பங்கு வகிப்பதை தடுத்துள்ளன.

ஆட்சேர்த்தல் வழிமுறையில், உத்தரவுப் பத்திரம் பெற்ற ஏஜென்ஸிகள் மீது கவனம் செலுத்தப்பட்ட போதிலும், உத்தியோகபூர்வமற்ற வலையமைப்புக்களைப் பயன்படுத்திய தொழிலாளர்களும், அபாயத்திலிருந்து முற்றாக நீங்கவில்லை. ஆட்சேர்க்கும் தொழில் நடத்தும், பல நண்பர்களும், குடும்ப உறவினர்களும், SLBFE யின் கண்காணிப்புக்கு உட்படாது மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் மூலம் புலம்பெயர் தொழிலுக்குச் சென்றவர்கள், பெருந்தொகைக்குப் பணத்தைச் செலுத்தியும், இல்லாததொழில்களுக்கு ஏமாற்றப்பட்டுப் பணம் செலுத்தியும், தொழில்லாமல் நிராதரவாக்கப்பட்டும் தடைசெய்யப்பட்ட இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டும் உள்ளனர்.

உத்தரவுப் பத்திரம் பெற்ற ஏஜென்ஸிகளின் எண்ணிக்கையில் பாதி அளவுக்கும் கூடுதலாக உள்ள இத்தகைய ஆட்சேர்த்தல் தொழிலில் ஈடுபடுவோர், சட்டவிரோதமாகவே செயற்படுகின்றனர்.

புலம்பெயர் தொழிலாளர்களின் தேவை, கட்டாய நிலைமை சில வேளைகளில் வெளிநாட்டு வேலை பெற்றுச் “சுபீட்சமாக” இருப்பதற்கான விருப்பம் என்பனவற்றினால் அபாயத்தை ஏற்றுக் கொள்ளும் நடத்தை புலம்பெயர் தொழிலாளர்களை ஊழல் அபாயத்துக்கு உட்படுத்துகின்றது. அபாயத்தை ஏற்பதற்கு தயங்காத வேலைதேடுவோர், இத்தகைய ஆட்சேர்ப்போரை தொடர்ந்து தேடிச் சென்று, அவர்களால் கோரப்படும் பெருந்தொகைப் பணத்தை தாம் எதிர்காலத்தில் சம்பாதிக்கவிருக்கும் பணத்தால் முதலீட்டைத் திரும்ப பெற முடியும் என்ற நம்பிக்கையில் செலுத்துகின்றனர். பெரும் எண்ணிக்கையிலான புலம்பெயர்

தொழிலாளர்கள் சகல சம்பிரதாயங்களையும் பூர்த்தி செய்த பின்னர், புலம்பெயர்வதில்லை என்று தீர்மானித்து முகவர்களுக்கும், வேலை கொள்வோருக்கும் கணிசமான நிதி இழப்பை ஏற்படுத்தி இருப்பதாக ALFEA அறிவிக்கின்றது.

SLBFE மோசடிகளைத் தடுக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஆனால் பலவீனமான அமுலாக்கல், நிர்வாக நடவக்கைகளில் வெளிப்படைத் தன்மை இல்லாமை, அரசியல் ஆதிக்கம் என்பன, எடுக்கப்பட்ட ஆக்கபூர்வ நடவடிக்கைகளை தாழ்வுபடுத்துகின்றதுடன், கௌரவமான நேர்மையான ஆட்சேர்த்தல் வழிமுறையை உறுதிப்படுத்துவதில் கடும் பாதிப்பையும் ஏற்படுத்துகின்றது.

**விதந்துரைகள்**

தொழிலுக்கு ஆட்சேர்க்கும் இந்த முக்கிய துறையை, மோசடிகள் ஊழல்கள் என்பனவற்றைத் தடுப்பதற்கு ஏற்கனவே உள்ள வழிமுறைகளை அமுலாக்குவதன் மூலம் எவ்வாறு மேலும் வலுப்படுத்துவது என்பது குறித்து, அரசு/ SLBFE உத்தரவுப் பத்திரம் பெற்ற ஏஜென்ஸிகள், புலம்பெயர் தொழிலாளர்கள் ஆகியோருக்கென விதந்துரைகளை முன் வைக்கிறோம். சர்வதேச தராதரங்களின் அடிப்படையில் ஆட்சேர்க்கும் கொள்கைக்கு வரைவிலக்கணம் செய்து, தேசிய தொழில் புலம்பெயர் கொள்கையை அமுலாக்குவதே முக்கியமான நடவடிக்கையாகும்.

**அரசு/SLBFE க்கான விதந்துரைகள் சட்ட அமுலாக்கம்**

சட்டம், மேலும் சீராக அமுல் செய்யப்படுவதுடன், சட்டவிரோத ஆட்சேர்த்தல், ஏமாற்றுதல் மற்றும் இலஞ்ச, ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாக குற்றம் காணப்பட்டோருக்கு எதிராக, சட்டரீதியான தண்டணைகள் விதிக்கப்படல் வேண்டும்.

**SLBFE யின் பரிபாலனம்: SLBFE** யின் பணிப்பாளர்கள் சபையில் உத்தரவுப் பத்திரம் பெற்ற முகவர் நிலையங்கள் பிரதிநிதித்துவம் பெறுவதை அனுமதிக்கும், அதிகாரச் சட்ட ஏற்பாடுகளை அரசு மறுபரிசீலனை செய்வது அவசியமாகும்.

**திறமையின் பேரில் நியமனம்:** புலம்பெயர் தொழிலாளர்கள் இருக்கும் நாடுகளில் உள்ள ராஜதந்திர தூதரகங்களில் நலன்புரி உத்தியோகத்தர்களின் நியமனம் அங்கீகரிக்கப்பட்ட தெரிவு முறையில் நடைபெற வேண்டும். தெரிவு செய்யப்பட்டதும், இந்த உத்தியோகத்தர்கள், புலம்பெயர் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றித் தெரிந்து கொள்ள நியமனத்தைப் பொறுப்பேற்பதற்கு முன் சிறிது காலம் SLBFE யில் பணியாற்ற வேண்டும்.

**தகவல் பெறுவதற்கான வழி:** புலம்பெயர் தொழில் வழிமுறையை ஒழுங்குபடுத்துபவராக SLBFE, சகல நடவடிக்கைகளிலும், வெளிப்படைத் தன்மையைக் காண்பிக்கும் அதே வேளையில், புலம்பெயர் வழிமுறைகள் பற்றிய தெளிவான விபரங்களை வழங்க வேண்டும். ஊழலையும், சுரண்டலையும் தடுக்கும் முக்கிய அம்சமாக ஆகக்கூடுதலான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு, மரபொழுங்கு சார்ந்த முறைகளும், தகவல் தொழில்நுட்பமும் பயன்படுத்தப்படல் வேண்டும். வருடாந்த அறிக்கையிலும், இணையத்தளத்திலும், கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள உள்ளூர், வெளிநாட்டு ஏஜென்ஸிகள், வேலை கொள்வோர் ஆகியோரின் பெயர்கள் சேர்க்கப்பட வேண்டும். ஊடகம் மூலம் இத்தகைய தகவல், கிரமமான இடைவெளிகளில் பொதுமக்களுக்குக் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். வருடாந்த அறிக்கையில் துறையில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் சவால்கள் இவற்றைச் சமாளிப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பது பற்றியும் கவனம்

செலுத்தப்படல் வேண்டும். தகவல் SLBFE யின் ஹொட்லைன் மூலமும் வெளியே கிடைக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் மூலமும் பரப்பப்படல் வேண்டும். உத்தரவுப் பத்திரம் பெற்ற ஏஜென்ஸிகளின் பட்டியல், போன்ற அடிப்படைத் தகவல், கிராம சேவகர்களின் அலுவலகங்கள் பிரதேச செயலகங்கள், என்பவற்றில் காட்சிக்கு வைக்கப்படலாம். தகவல் பரப்புவதற்கு சுகாதார அமைச்சின் மூலம், சுகாதார உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தலாம், இலங்கை தொலைத் தொடர்பு சீராக்கல் அதிகாரசபையின் ஒத்துழைப்புடன் எஸ்.எம்.எஸ். மூலமும் பரப்பலாம்.

தொழில் நடைமுறைகள், புலம்பெயர் தொழிலாளர்களை சேர்த்தல், தொழில் சட்டங்கள், வேலை பார்க்கும் இடங்களில் நிவாரணமளிக்கும் நடவடிக்கைகள் என்பன ஆய்வு செய்யப்பட்டு, உத்தியோகத்தர்களுக்கும் பங்கேற்பாளர்களுக்கும் அத்தகவல்கள் பரப்பப்படல் வேண்டும்.

**உத்தரவுப் பத்திரம் பெற்ற ஏஜென்ஸிகளை ஒழுங்குறுத்தல்:** வேலைக்கு ஆட்சேர்க்கும் ஏஜென்ஸிகளுக்கு உத்தரவுப் பத்திரம் வழங்கும் வழிமுறை மேலும் கடுமையாக்கப்பட வேண்டும். பெரும் எண்ணிக்கையில், உத்தரவுப் பத்திரம் பெற்ற ஏஜென்ஸிகள் இருப்பதால், உத்தரவுப் பத்திரம் வழங்கல், நிரூபிக்கப்பட்ட முகாமைத்துவத் திறன்கள், வேலைக்கு ஆள்தேடும் புதிய நாடுகளைக் கண்டுபிடிக்கும் ஆற்றல், மேலும் கூடுதலான தொழிலாளர்களை தொழிலுக்கு அனுப்புதல், போன்ற மேலதிக தகுதிகளில் தங்கியிருத்தல் வேண்டும். அதிகாரச் சட்டத்தின் 27ம் பிரிவில் “மதிப்புப் பெற்ற நபர்” என்று குறிப்பிடப்பட்ட சொற்றொடர், மேலும் விரிவுபடுத்தப்படல் வேண்டும். தொழில் ஏஜென்ஸிகள், உப அதிபர்களுக்கும், தரகர்களுக்கும் பொறுப்புக் கூறும் வகையில், ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டு சீராக்கும் கட்டுக் கோப்புகள் கொண்டுவரப்படல் வேண்டும். சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் மாத்திரமல்லாது, அவர்கள் பேணும் தார்மீகத் தராரங்களின் செயற்பாடுகளினது அடிப்படையில் கடுமையாக உத்தரவுப் பத்திரங்கள் புதுப்பிக்கப்படல் வேண்டும். சட்டத் தேவைகள், ஒழுங்கான தராதரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் செயற்படல் வேண்டும். கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் SLBFE க்கு சமர்ப்பிக்கப்படுதலும், NRFC கணக்குகள் ஆரம்பிக்கப்படுவதும், கட்டளையாக்கப்படல் வேண்டும்.

**ஆலோசனை / இணைப்பு:** ALFEA யுக்கும், SLBFE க்கும் இடையே கிரமமான ஆலோசனை வழிமுறை, புலம்பெயர் தொழிலாளர்களை பாதுகாப்பது என்ற பொது இலக்குடன் இரு நிறுவனங்களும் செயற்படுவதை உறுதி செய்வதற்காக இடம்பெற வேண்டும். தொழிலுக்கு ஆட்களை வரவழைக்கும் நாடுகள், வேலைக்கு ஆட்சேர்ப்பவர்களுக்கு கடுமையான பிரமாணத்தை வலியுறுத்தும் விதத்தில், அரசு பிராந்தியத்தில் ஏனைய தொழிலாளர்களை அனுப்பும் நாடுகளுடன் இணைந்து செயற்படும் சாத்தியங்களைக் காண முற்படல் வேண்டும். புலம்பெயர் தொழிலாளர்கள், மேற்கொள்ளும் மருத்துவ பரிசோதனைகளுக்கென கட்டணங்கள், தனியார் மருத்துவ நிறுவன அதிகார சட்டத்திற்கு அமைவாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு, SLBFE சுகாதார அமைச்சுடன் இணைந்து செயற்படல் வேண்டும். GCC அங்கீகாரம் பெற்ற மருத்துவ நிலையங்கள், ஒழுங்கான தராதரங்களைப் பேணுகின்றனவா என்பது பற்றி கண்காணிக்கப்படல் வேண்டும்.

**முறைப்பாடுகள் செய்யும் நெறிமுறை:** புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை, அவர்களின் முக்கியத்துவம், அவர்கள் இன்னல்களுக்கு உட்படும் நிலை என்பனவற்றைக் கவனத்தில் எடுத்து அரசு ஆலாட்சி அதிகாரி ஒருவரை நியமித்தல் வேண்டும். பல்வேறு பிரச்சினைகளைக் குறிப்பிடும் விதத்திலும் ஆட்சேர்க்கும் எந்த வளத்தினால் கூடுதலான கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்பதைப் பிரதிபலிக்கும் விதத்திலும் சகல முறைப்பாடுகளும் வகுக்கப்படல் வேண்டும்.

**உத்தரவுப் பத்திரங்கள் பெற்ற ஏஜென்ஸிகளுக்கான விதந்துரைகள் முகாமைத்துவம்:** ஏஜென்ஸி முகாமையாளர், வர்த்தகம் மேற்கொள்வதற்கு ஆகக்குறைந்த கல்வித் தராதரங்களையும், அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும். உத்தரவுப் பத்திரம் கோரும் புதிய ஏஜென்ஸிகளுக்குக் கணனி அறிவு இருப்பது ஒரு தேவையாக்கப்படல் வேண்டும். அதேவேளையில், தற்போதுள்ள ஏஜென்ஸிகளும், இதில் தகுதி பெறுதல் அவசியமாகும்.

**நிதிப் பொறுப்புத் தன்மை:** உத்தரவுப் பத்திரம் பெற்ற ஏஜென்ஸிகள் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகளாக இருப்பதுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் தொடர்புள்ள மாகாண சபை போன்ற ஏனைய அரசாங்க அதிகாரப் பீடங்களுடன் பதிவு செய்யப்படும் தேவையும் உள்ளது.

**தார்மீகத் தராதரங்கள் அமுலாக்கப்படுதல்:** ALFEA அதன் நன்னடத்தைக் கோவையை ஊக்குவிப்பதுடன், இணக்கப்பாட்டு நெறிமுறையையும் விருத்தி செய்தல் வேண்டும்.

**வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்குச் செல்லும் தொழிலாளர்களுக்கான விதந்துரைகள்:** புலம்பெயர் தொழிலாளர்கள், தகவலைத் தீவிரமாகத் தேடி, பொறுப்பு வாய்ந்த முறையில் நடத்தல் வேண்டும். அவர்கள் தாம் பொறுப்பேற்க வேண்டிய செலவுகளைச் சரி பார்ப்பதுடன் சுரண்டல் துஷ்பிரயோகம் பற்றி அறிவிக்கவும் வேண்டும்.

# References

**ALFEA** http://www.alfea.org/find_an_agent.php Accessed on January 21, 2009

**Argent, Kshanika (2007).** FEB to deal directly with maids going for foreign employment. Morning Leader, August 1, Vol. No. 3 http://www.themorningleader.lk/20070801/news.html

**Arshad, Arlina (2007).** Some Sri Lankan maids here are untrained and illegal. Straits Times of Singapore April 17 http://www.maidcity.com/forumnew/forum_posts.asp?TID=88

**Attiya, Hamid S. (1990).** The sponsorship system and infringement of the rights of foreign workers in the Gulf countries.
http://www.springerlink.com/content/v680672j05255875/fulltext.pdf?page=1

**Baharain Centre for Human Rights (2009).** The free movement of foreign workers: a positive step towards abolishing the sponsorship system
http://www.bahrainrights.org/en/node/2880

**Berenger, Leon and Kirinde, Chandani (2008).** Job racketeers make a kill on no-go ban to Iraq. Sunday Times October 19
http://www.sundaytimes.lk/081019/News/sundaytimesnews_16.html

**ColomboPage News Desk (2008).** Illegal foreign employment agencies rise in Sri Lanka. December 21. http://www.colombopage.com/archive_08/December2175529RA.html

**Daily Mirror (2008).** Lankan mission cracks whip on agents, sponsors after maid assault http://www.dailymirror.lk/DM_BLOG/Sections/frmNewsDetailView.aspx?ARTID=27213

**Daily Mirror (2009a).** National centre for migration statistics opens in Sri Lanka. February 6, Financial Times, p. 6

**Daily Mirror (2009b).** Trade union agreements for the protection of migrant workers' rights signed. 11th May, Financial Times, p.2 Daily Mirror (2009c). Historic moments for housemaids. April 27, Financial Times, p. 2

**Daily Mirror (2009d).** Employment agencies pocketing money: Ambassador. January, 1. p. 4.

**Daily Mirror (2009e).** Another 'Sakvithi' missing. March 23, www.dailymirror.lk.

**Daily News (2008a).** Higher pay for Lankan maids from today. January 1, p.1, 13

**Daily News (2008b).** Licensed job agent netted for sending teenagers abroad. October 15, p. 3.

**Daily News (2008c).** SLBFE emblem used to dupe job seekers. December 8, p. 1, 13

**de Silva, Jayantha ( 2009).** FEB worker arrested for bribery. The Island, March 14, p. 3

**De Soysa, G. D. G. P. (2009).** Migration of Sri Lankan for overseas employment in the nineteen eighties. Mirihana: The Author

**Dias, Malsiri and Jayasundera, Ramani (2004)**. Sri Lanka case study on good practices to prevent women migrant workers from going into exploitative forms of labour. Colombo: ILO.

**Dias, Malsiri and Wanasundera, Leelangi (2002).** Sri Lankan migrant garment factory workers: Mauritius and Sultanate of Oman. Colombo: CENWOR

**Dumalao, Preciosa (2007).** 50 Sri Lankan job seekers stranded in Dubai. Http://www.allheadlinenews.com/articles/7009123537

**Ellepola, Kassapa (2008).** 105 housemaids made to return home prematurely. Daily Mirror April 30

**Gamage, Vineetha M. (2008a)**. Another 4 children who tried to migrate by showing a higher age apprehended. Lankadeepa May 16, p. 1.

**Gamage, Vineetha M. (2008b).** The agency that stranded 20 Sri Lankan youth in Kuwait banned. Lankadeepa May 7, p.9

**Gamage, Vineetha M. (2008c).** A racket to pay lower wages to domestic workers migrating to Arabia Lankadeepa June 20, p. 8.

**Gamburd, Michele Ruth (2002).** Transnationalism and Sri Lanka's migrant housemaids. New Delhi: Vistaar Publications

**GOSL (2008).** Initial Report of the Government of Sri Lanka under Article 73 of the International Convention on the Protection of the Rights of All Migrant Workers and Members of their Families. Www2.ohchr.org/english/bodies/cmw/docs/CMW.C.LKA.1.doc

**Gunatilleke, Godfrey (1991).** Sri Lanka In Migration to the Arab world: Experience of Returning Migrants edited by Godfrey Gunatilleke. Tokyo: United Nations University

**Gunetilleke, Godfrey (1998).** The role of networks and community structure in international migration from Sri Lanka In Emigration Dynamics in Developing Countries Vol II South Asia edited by Reginald Appleyard, Aldershot: Ashgate, pp. 71-112

**Hettiarachchi, Karunasena (2004).** Modern labour migration-how it is managed and in whose interest? Paper presented at the 9th International Metropolis Conference Geneva 27 September –1 October

**Human Rights Watch (2007).** Exported and exposed. Abuses against Sri Lankan domestic workers in Saudi Arabia, Kuwait, Lebanon, and the United Arab Emirates. 19(5) C, November
Human Rights Watch (2009). World report. Events of 2008. Http://www.hrw.org/sites/default/files/reports/wr2009_web.pdf

**ILO (1997).** Private Employment Agencies Convention 1997 http://www.ilo.org/ilolex/cgi-lex/convde.pl?C181

**ILO (2006).** ILO Multilateral Framework on Labour Migration. Non-binding principles and guidelines for a rights-based approach to labour migration. Geneva.

**ILO (n.d.).** Guide. Preventing Discrimination, Exploitation and Abuse of Women Migrant Workers. An Information Booklet 3. Recruitment and the Journey for Employment Abroad. Geneva: ILO.

**Island, The (2008).** SLBFE recalls 200 workers from Kuwait. December 26, p.2

**Jayamanne, Dilanthi (2008).** Don't trust foreign education, job ads-SLBFE The Island October 30 http://www.island.lk/2008/10/30/news9.html Accessed on 31st March 2009

**Jayasinghe, Bimal Shyaman (2009).** A racket to send (workers) to Europe using forged documents: a businessman in Borella and two others taken into custody. Lankadeepa June 17, p. 11

**Jayatilaka, Ruwan and Jayawardhana, Tilani (2009).** International migration outlook Sri Lanka. Colombo: Institute of Policy Studies. Kannangara, Ananda (2008). SLBFE ready to accept complaints from Kuwaiti returnees. Sunday Observer October 19, p.5.

**Karunairajan, Victor (2007).** How could Rizana Naffeek be guilty? Lanka e-news. http://www.lankaenews.com/English/news.php?id=4464 Accessed December 3 2009

**Karunaratne, Madara (2009).** A new identity card for those going for overseas employment. Lakbima July, 31, p. 3

**Lankadeepa (2008).** Sending underaged children through falsification of documents could lead to a lot of problems. September 4, p.10

**Lankadeepa (2009).** Hemamala of Kotapola's description of the activities of sub agents (when seeking information from a newspaper columnist). June 12, p. 4.

**Martin, Philip (2008).** Labour migration challenges and opportunities for Sri Lanka. Final assessment report. Report prepared as part of the IOM Project, Assessing and Addressing Labour Migration Challenges and Opportunities in Sri Lanka (unpublished).

**Middle East Online (2009).** Official regulations fail to prevent abuse of foreign domestic workers in Syria: Efforts by Syrian government to monitor unscrupulous recruitment agencies not 'very effective'. http://www.middle-east-online.com/english/features/?id=30577 Accessed April 14 2009

**Migration News (2008).** South Asia A special report Vol. 14 No. 4 October http://migration.ucdavis.edu/mn/more.php?id=3446_0_3_0

**Olwan, Mohamed, Y. (2008)**. Circular and Permanent Migration: A Jordanian Perspective. Http://cadmus.eui.eu/dspace/bitstream/1814/8387/1/CARIM_AS%26N_2008_34.pdf

**Parliamentary Centre Canada (2000).** Controlling corruption: A parliamentarian's handbook 2nd edition http://www.parlcent.ca/publications/pdf/corruption.pdf

**Pathirana, Danushal (2009).** 104 million misappropriation from Kuwaiti insurance. Ravaya, 21st June, p. 1, 2.

**Pinthu, Gayathri Nadeeka (2008).** Two under-aged girls who attempted to migrate to the Middle East nabbed. Divaina April 28, p. 3.

**Recruitment and Employment Confederation,** The. REC Code of Professional Practice. http://www.rec.uk.com/uploads/documents/32009-01-RECCoPFINAL.pdf Accessed February 2, 2009

**Sallabank, Jessica (2007).** With few to advocate on their behalf, international domestic workers turn to the Syrian Government and their embassies to keep employers and recruitment agencies from trampling on their rights. http://syria-today.com/pkg05/index.php?page=view_article&dir=articles&ex=2&id=589&First=0&Last=1&CurrentPage=0&src=search&Keywords=Z2hvc3Qgd29ya2Vycw==&lang=1&Category=

**Samarasinghe, Sarashi (2009).** Foreign employment agencies to be streamlined. The Nation, January, 4 http://www.nation.lk/2009/01/04/news3.htm

**Samath, Faizal (2008a).** LABOUR-SRI LANKA: Domestic Workers Promised New Deal in Kuwait. IPS, April 28, http://ipsnews.net/news.asp?idnews=42385

**Samath, Feizal (2008b).** Three decades after migration, 'housemaids' still a crisis point Blame game won't solve problems. Http://sundaytimes.lk/080504/FinancialTimes/ft309.html

**SLBFE (2009)**. Recruitment costs to be borne by the sponsor. http://www.slbfe.lk/recruitmentcost.asp (Accessed December 12, 2008).

**SLBFE (2007).** Annual statistical report of foreign employment 2006. Battaramulla.

**SLBFE (2008).** Annual statistical report of foreign employment 2007. Battaramulla.

**SLBFE (2009).** Annual Statistical Report of Foreign Employment 2008. Battaramulla.

**SLMC (2003).** Guidelines on ethical conduct for medical and dental practitioners registered with the Sri Lanka Medical Council. Colombo

**Somarathne, Rasika (2008a).** Bonanza for migrant apparel workers. Daily News July 16, p. 3

**Somarathna, Rasika (2008b).** Lankan-Manila tie up on migrant labour. Daily News November 10, p.7

**Sri Lanka. Ministry of Foreign Employment Promotion and Welfare (2009).** National Labour Migration Policy for Sri Lanka. Colombo.

**Sri Lanka. Ministry of Labour Relations and Foreign Employment (2006).** National Policy for Decent Work for Sri Lanka. Colombo

**Sri Lanka. Parliament (1985).** Sri Lanka Bureau of Foreign Employment Act, No. 21 of 1985. Colombo.

**Sri Lanka. Parliament (1994).** Sri Lanka Bureau of Foreign Employment (Amendment) Act, No. 21 of 1994. Colombo.

**Sri Lanka. Parliament (1995).** Penal Code (Amendment) Act, No. 22 of 1995.

**Sri Lanka. Parliament (n.d.).** Parliamentary Series No. 09 of the Sixth Parliament of the Democratic Socialist Republic of Sri Lanka (First Session) Report of the Auditor General for the year 2004 in Terms of Article 154(6) of the Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka II Installment Volume XXII Corporations, n.d. pp. 32-36.

**Sri Lanka. Parliament (2006).** Parliamentary Series No. 05 of the Sixth Parliament of the Democratic Socialist Republic of Sri Lanka (Second Session) Report of the Auditor General for the year 2005 in Terms of Article 154(6) of the Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka Second Installment Volume XXII Corporations. 20 November 2006, pp. 72-75.

**Sri Lanka. Parliament (2007).** Parliamentary Series No. 10 of the Sixth Parliament of the Democratic Socialist Republic of Sri Lanka (Second Session) Second Report from the Committee of Public Enterprises presented by Hon. Wijedasa Rajapakshe M. P. Chairman of the Committee of Public Enterprises 24th August 2007, pp. 26-27.

**Sri Lanka. Parliament (2008).** Parliamentary Series No. 03 of the Sixth Parliament of the Democratic Socialist Republic of Sri Lanka (Third Session) Report of the Auditor General for the year 2007 in Terms of Article 154(6) of the Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka Second Instalment Part 1-State Corporations. 09 September 2008, pp. 75-80. Http://www.auditorgeneral.lk/reports/English/Volume_II_Part_I_2006_English.pdf

**Sri Lanka. Parliament (2009a).** Parliamentary Series No. 11 of the Sixth Parliament of the Democratic Socialist Republic of Sri Lanka (Fourth Session) First Report from the Committee of Public Enterprises presented by Hon. W. D. J. Senewiratne, Chairman of the Committee on 19 August 2009, pp. 10-11

**Sri Lanka. Parliament (2009b).** Sri Lanka Bureau of Foreign Employment (Amendment) Act, No. 56 of 2009. Colombo

**Sri Lanka News First (2008a).** Massive fraud hatched from housemaids' money. 15th October, http://www.srilankanewsfirst.com/General/6820.html

**Sri Lanka News First (2008b).** Maharagama job agency busted. 15th October http://www.srilankanewsfirst.com/General/6832.html

**Sri Lanka News First (2008c).** SLFBE detects a Foreign Employment Agency. 24 April http://www.srilankanewsfirst.com/General/2825.html

**Sri Lanka News First (2009a).** Bogus insurance agreement destroys Sri Lankan foreign income. 13th February, http://www.srilankanewsfirst.com/General/9033.html

**Sri Lanka News First (2009b).** President suspends corrupt insurance policy in Kuwait. 26th February, http://www.srilankanewsfirst.com/General/9267.html

**Sunday Times, The (2009).** SLFEA officials take Keheliya to court. September 06, 2009 http://sundaytimes.lk/090906/News/nws_22.html

**Wanasundera, Leelangi (2002).** Migrant Women Domestic Workers: Cyprus, Greece and Italy. Colombo: CENWOR.

**Weerakoon, Gagani (2008).** Send male migrant workers free of charge. Daily Mirror 17th June, p. 4

**Wijewardene, R. (2009).** Another 100 million defrauded. Sunday Leader, September 13. http://www.thesundayleader.lk/20090913/investigation-1.HTM

# Annex

## Steering Committee members

**Mr. K.O.D.D. Fernando,**
Deputy General Manager, Planning and Development /IT, SLBFE

**Mr. Faizer Mackeen,**
Secretary, ALFEA

**Ms. Pearl Weerasinghe,**
Ministry of Labor Relations and Manpower


**Ms. U.R.K. Menike,**
Migrant Services Centre

**Ms. Viola Perera,**
ACTFORM

**Ms. Kanthi Yapa,**
Consultant

Transparency International (TI) is the global civil society organization leading the fight against corruption. Through more than 100 chapters worldwide and an international secretariat in Berlin, Germany, TI raises awareness of the damaging effects of corruption and works with partners in government, business and civil society to develop and implement effective measures to tackle it.

Transparency International Sri Lanka (TISL) started operations in 2002. It functions as an autonomous chapter of TI with its own local strategies and priorities.



TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
Building a Nation of Integrity

No. 28/1, Bullers Lane, Colombo 07, Sri Lanka.
Tel: (94) 11 2506419 / (94) 11 2501474
Fax: (94) 11 2592287
Email: tisl@tisrilanka.org
Web: www.tisrilanka.org